37

The "BHARATI" Reg. No. M. 2456.

ஜனவரி 1930.




13 FEB 1930

மாலை 2. மணி 1.

ஓர் தேசிய

# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

பிரசுராலயம்:

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

3C
2.1, N29 8H
N30.2.1
198524

# 'பாரதி'யின் போஷகர்கள்.

1. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ்,
சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள்,
சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் ராஜா
எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள்,
சொந்தக்காரர், ஆனந்த விலாஸ் எஸ்டேட்,
தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், தேவாரம்.

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள்,
ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள்,
மிராஸ்தார், சித்தயங்கோட்டை.

9. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்லாதவர்.

10. ,, ஜான் அங்தோணி ஆஜு அவர்கள்,
பைசன் வாலி, தேவிகுளம், திருவாங்கூர்.



# போஷகர்கள்

(தொடர்ச்சி.)

OFFICE 13 FEB 1930

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர்
அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன்,
போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன் பிள்ளை ராவுத்தர்
அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு
விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T.C.P.A.
ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd.,
பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார்,
உத்தமபாளையம்.

16 ,, ராவ் சாகிப் A. S. அழகணன் செட்டியார்
அவர்கள், மிராஸ்தார் & மெம்பர், ராமேஸ்வரம்
தேவஸ்தானக் கமிட்டி, போடிநாயக்கனூர்.

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

---

## விளம்பர விகிதம்.

பக்கம் 1-க்கு மாதம் 1-க்கு ரூ. 10—0—0
,, ½-க்கு ,, ,, 5—8—0
,, ¼-க்கு ,, ,, 3—0—0

¼ பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களுக்கு இடமில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.



ஜவகர்லால் நேரு

லாகூர் காங்கிரஸ் தலைவர் (1930)

# பாரதி

ஓர் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர்: ரா. நாராயணஸ்வாமி.

| மாலை 2 | உத்தமபாளையம் 1930-௵ ஜனவரி௴ | மணி 1 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல் என்னாவிற்கு
அடங்காது.

—மணிமேகலை.

198524

# இளங்கோவடிகளின் அறவுரை.

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊன்ஊண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்பு இகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லுந் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்;
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்!

—சிலப்பதிகாரம்.



# "பாரதி"யின் இரண்டாவது ஆண்டு.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி."

நினைத்தார்க்கு நினைத்தவைகளை நினைத்தபடி யளிக்கும் நித்திய நிமலனது திருவருளால் நமது "பாரதி"ப் பத்திரிகைக்கு முதலாம் ஆண்டு இனிது நடந்து, இப்பொழுது இத்துடன் இரண்டாவது ஆண்டு ஆரம்பம் ஆகிறது என்ற சுப செய்தியை அன்பர்கள் அனைவருக்கும் அகமகிழ்வுடன் அறிவித்துக்கொள்கிறோம். "பாரதி" ஒரு மாதப் பத்திரிகையா யிருப்பினும், ஒரு கிராமத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையா யிருப்பினும் தமிழ் நாடு முற்றிலும் இந்தியாவின் பல பாகங்களிலும் இலங்கை, பர்மா, தென்னாப்பிரிக்கா, மலேயா நாடுகள், பீஜி, மோரிஸ், சயாம் முதலிய தேசங்களிலும்-உலகத்தில் தமிழர் வசிக்கும் தேசங்களிலும் தீவுகளிலும் "பாரதி" ஒரு வய்திலேயே உலாவிக்கொண்டிருக்கிற தென்பதை அறியத் தமிழச் சகோதரர்கள் அதிகச் சந்தோஷமடைவார்கள் என்று எண்ணுகிறோம். அதிகக் கவனிப்பில் அபாரச் செலவில் உயர் தரத்தில் புதிய முறையில் ஆனால் மிக மிகக் குறைந்த சந்தாவில் தேசாபிமானப் பெருக்காலும் பத்திரிகாபிமான எழுச்சியாலும் தொண்டின் ஆவேசத்தாலும் வசதிகளற்ற ஒரு கிராமத்திற் பலவித கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் தாங்கி நின்று மகிழ்ச்சியுடன் "பாரதி"யை நடத்திக்கொண்டு போகிறோம் என்று அவஸியம் குறிப்பிடவேண்டி யிருக்கிறது.

இந்த ஒரு வருடத்திற்குள் இச் சின்னஞ்சிறு பத்திரிகை-விரி நோக்கங்களும் பல உயர் கொள்கைகளும் கொண்ட மாஸிகை, தன் கடமைகளைச் சரியாக ஆற்றியே வந்திருக்கிறது. சென்ற வருடத்திற்குப் பல பெரியார்கள் இதற்கு ஆசிகள் அளித்திருப்பினும் அவர்களில் தேச பக்தர் கௌரி சங்கர் மிஸ்ரா அவர்கள் " "பாரதி" சுதந்திரத்திற்காகவே

பிறக்கட்டும், சுதந்திரத்திற்காகவே இருக்கட்டும்; அவசியமானால் சுதந்திரத்திற்காகவே இறக்கட்டும்" என்று கூறிய ஆவேச அருமைத் திரு வாக்குகளைப் பின் பற்றித், தேசியத்தைத் தெய்வமாகக் கருதிச், சமூக சீர்திருத்த விஷயங்களில் அஞ்சா நெஞ்சுடன் பாடுபட்டுக் கொண்டே வந்திருக்கிறது. மனிதனை 'மனிதன் அடக்கு வதைக் கண்டித்தே வந்திருக்கிறது. உயர்ந்தோர்களைத் தாழ்த்தாது, தாழ்ந்தோர்களை உயர்த்துவதற்காகப் "பாரதி" எவ்விதம் உழைத்தது உழைக்கிறது என்று இங்குச் சுருக்கமாகச் சொல்ல இயலாது. சகோதரிகள் விஷயங்களில் "பாரதி" மேற்கொண்டிருந்த வேலைகள் கொஞ்சமன்று. கிராமத் தொண்டு விஷயத்தில் இது சென்ற வழிகளோ பலவாகும். "பாரதி" நாட்டு வீரமணிகளைத் தட்டித் தட்டி அடிமை உறக்கத்திலிருந்து எழுப்பி அவர்களுக்கு அணையாத் தேசிய ஆவேசத்தை உண்டாக்கிக் குறையாத் தேசிய ஒற்றுமையை ஊட்டிக்கொண்டிருக்கிறது. வாலிப இயக்கத்திற்கு இது பெருந் துணையாயிருக்கிறது. தமிழ் நாட்டில் இப்பொழுது நிலவும் பல கொள்கைகளைச் சேர்ந்த அநேகம் பத்திரிகைகளும் அநேகம் தலைவர்களும் இன்னும் பற்பல அறிஞர்களும் "பாரதி"யை நன்கு போற்றி அதன் சேவையைச் சிலாகித்திருப்பது இங்கு அவசியம் குறிப்பிடத்தக்கது.

அயல் நாடுகளில் வசிக்கும் சகோதரர்களுக்குப் "பாரதி" மிகவும் உபயோகமாகவே இருந்திருக்கிறதென்று தெரிவிக்கிறோம். டொனமோர் கமிஷனைப்பற்றி இலங்கை இந்தியர் விஷயமாகவும் பர்மாப் பிரிவினை விஷயமாகவும் "பாரதி" விசேஷ கவனம் செலுத்தித் தனது வேலைகளைச் செய்யத் தவறவில்லை.

"அருமை வியாசங்களையும், அடிமைத் தன்மையிலிருந்து நிவர்த்தித்துக் கொள்ளக்கூடாத வறுமை நிலையிலும் துன்பங்களிலும் உழன்று தவிக்கும் நம் தேச மக்கள் தற்போது ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய விஷயங்களையும் "பாரதி"யில் பார்க்கப் பார்க்க அடங்கா மகிழ்வெய்துகிறேன். "பாரதி" எப்பொழுது கிடைக்கும் எப்பொழுது அதிலடங்கியுள்ள அரும் பெரும் மொழிகளைப் பார்க்கலாமென்ற அவாக்கொண்டிருக்கிறேன்" என்று தென்னாப்பிரிக்காவில்



வாழும் தமிழன்பர் ஒருவர் எழுதுகிறார். "அயல் நாட்டில் வாழும் எங்களுக்குப் "பாரதி"ப் பத்திரிகை அமிர்தமாக இருக்கிறது" என்று பீஜியிலிருந்து ஒரு சகோதரர் அறிவிக்கிறார்.

"பாரதி"யில் வெளிவரும் ஒவ்வொரு எழுத்தும் எமது இரத்தத்தால் அச்சிட்டிருப்பதாகக் கொள்ளும்படியாய் நாம் "பாரதி"க்காக அவ்வளவு அதிக வேலை செய்துகொண்டிருக்கிறோம். "பாரதி"யின் உயர்வுக்குக் காரணம் எமது சலியா உழைப்பே. "பாரதி"யின் பிரகாசத்திற்குக் காரணம், எமது மாறு நடு நிலையே. இவைகள் எல்லாவற்றிற்கு மேலாக, "பாரதி"யால் இலாபத்தை எதிர்பார்க்காது "பாரதி"யால் கஷ்டம் வராமலிருந்தால் சரி என்று நாம் கொண்ட தேசாபிமானமும் பாஷாபிமானமும் பத்திரிகாபிமானமுமே. "பாரதி"யைப் பற்றி விரிவாக எழுத எமக்கு இஷ்டமில்லை. அதிகம் எழுதுவது தற்புகழ்ச்சி யாகுமென்று பயப்படுகிறோம்.

"பாரதி"க்குச் சில குறைகள் இன்னும் இருக்கின்றனவென்பதை நாம் நன்கு அறிவோம். அவைகளை அகற்ற எப்பொழுதும் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கூடியமட்டும் சில குறைகள் அதி விரைவில் நீங்கிவிடுமென்று உறுதி கூறுகிறோம். அமெரிக்க ஆங்கில மாஸிகைகளின் அமைப்புகளையும் போக்குகளையும் நமக்கு வேண்டிய இயன்ற அளவிற் பின்பற்ற முயன்றுகொண்டிருக்கிறோம். "பாரதி"யின் முன்னேற்றம் சந்தாதார் கைவசமிருக்கிறதென்பதை உணர்ந்து "பாரதி"க்குச் சந்தாதார்களின் பெருக்கத்திற் கவனம் செலுத்துமாறு "பாரதி"யின் அன்பர்களையும் அபிமானிகளையும் வேண்டுகிறோம்.

"பாரதி"யை அன்புடன் ஆதரித்து வருகிற அபிமானிகள், அனைவருக்கும் அனேக வந்தனங்கள் அன்புடன் அளிக்கிறோம். சந்தாதாரர்களின் பெருக்கமே பத்திரிகையின் வளர்ச்சியென்பதை அறிந்து "பாரதி"யின் அபிவிருத்திக்காக உழைத்த உழைக்கும் நண்பர்களுக்கெல்லாம் நன்றியறிதலான வந்தனங்கள் செலுத்துகிறோம். நாட்டின் க்ஷேமத்தைக் கருதிப் பல சொந்த வேலைகளுக்கிடையில் கட்டுரைகள் எழுதி யுதவும் அறிஞர்களுக்கெல்லாம் அநேக

# "பாரதி"யின் போஷகர்கள்.

"பாரதி" போன்ற உண்மைப் பத்திரிகைகளின் அவசியத்தையும் அவசரத்தையும் அருமையையும் அதிகமாய் அறிந்து பத்திரிகாபிமானங் கொண்டு குறைந்தது ஒரு அளவான தொகை கொடுத்துதவி "பாரதி"யின் வளர்ச்சியிற் கவனம செலுத்துபவர்களையே நாம் போஷகர்களாகக் கொண்டிருக்கிறோம். "பாரதி"யை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டு நாம் ஆதியில் அன்புடன் செய்துகொண்ட வேண்டுகோளைப் பெரிதும் மதித்துப் "பாரதி"க்கு உதவிசெய்து போஷகர்களாக இக் கனவான்கள் முன் வந்திருக்காவிடில், இந்த முறையில் இவ்வளவு அமைப்பில் இம்மாதிரியான நல்ல காகிதத்தில் இத்துணை உரத்துடன் இவ்வளவு பக்கங்களுடன் ஒரு புஸ்தகம்மாதிரி "பாரதி" வெளிவந்திருக்காது. உடலும் உயிரும்

---

வந்தனங்கள் அன்புடன் புரிகிறோம். "பாரதி"யைப் பல வழிகளில் உற்சாகிக்கும் பத்திரிகாபிமான நேயர்களுக்கெல்லாம் பிரிய வந்தனங்கள் செலுத்துகிறோம். "பாரதி"யை ஆவலுடன் வாசிக்கும் வாசகர்களுக் கெல்லாம் வந்தனங்கள்.

"பாரதி"யின் அபிமானிகள் முதல் வருடத்தைப் போலவே "பாரதி"யை இனியும் ஆதரிப்பதுடன் தம் தம் நண்பர்களையும் சந்தாதாரராகச் சேர்த்துக்கொடுத்து இச் சிறு மாஸிகைக்கு உதவி, தமிழகத்தில் இதை நல்லதொரு சிறந்த பத்திரிகை யாகும்படி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"பாரதி"க்கு எல்லா அபிவிருத்திகளையும் என்றும் கடாட்சிக்குமாறு எல்லாம் வல்ல கடவுளை முழு மனதுடன் மன்றாடுகிறோம்.

---



போலப் போஷகர்களின் உதவிகளும், எமது உழைப்பும் சேர்ந்தே "பாரதி" வடிவாக உருக்கொண்டு உலாவுகிறது. இப் "பாரதி"ப் பத்திரிகையால் நாட்டிற்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டிருக்குமானால் இப் போஷகப் பெரியார்களால் ஏற்பட்டதாகவே கொள்ளல் வேண்டும். ஆகையால் "பாரதி"யின் போஷகர்களாகிய

1. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ், சென்னை.
2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
   தேவாரம் ஜமீன், தேவாரம்.
3. ,, T A. K அழகர் ராஜா அவர்கள், சொந்தக்காரர்,
   மஹேஸ்வரி விலாஸ் ராஜா எஸ்டேட், தேவாரம்.
4. ,, C சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர்,
   ஆனந்தவிலாஸ் எஸ்டேட், தேவாரம்.
5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் மிராஸ்தார், தேவாரம்.
6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், கூடலூர்.
7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள், ஜவுளி வியாபாரம், கூடலூர்.
8. ,, V.S சுப்ரமண்யம் அவர்கள்,மிராஸ்தார்,சித்தயங்கோட்டை.
9. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்லாதவர்.
10. ,, ஜான் அந்தோனி ஆஜு அவர்கள், பைசன் வாலி,
    தேவிகுளம், திருவாங்கூர்.

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள்,
ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்கள்,
மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக்
கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A.
ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd.,
பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

16. ,, ராவ் சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார் & மெம்பர்,
ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி, போடிநாயக்கனூர்.

இக்கனவான்களுக்கு எமது நன்றியறிதல் நிறைந்த அன்பார்ந்த வந்தனங்களைச் செலுத்துகிறோம்.

கிராமத்தார்களுக்குப் பத்திரிகை உணர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்று கருதியே வசதிகளற்ற ஒரு கிராமத்திலிருந்து இதை வெளியிடுகிறோம். ஒரு கிராமத்திலிருந்துகொண்டு ஒரு உயர்தரப் பத்திரிகையை நல்ல காகிதங்களில் படங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிடுவதென்பது இலகுவான காரியமல்ல. இதற்குப் பொருட்செலவும் உழைப்பும் கொஞ்சமல்ல. இப் பெரும் முயற்சிக்கு ஊக்கமும் உதவிகளும் அளித்த கண்ணியவான்களுக்கு நாமேயும் "பாரதி"யேயு மன்றித் தமிழகமே கடமைப் பட்டிருக்கிறது. இப் பத்திரிகைக்கு உதவி செய்ததின் மூலம் இக் கனவான்கள் கிராமத் தொண்டு செய்வதற்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டி யிருக்கிறது. காலத்திற்கேற்ற தர்மம் செய்திருக்கும் இக் கண்ணியவான்களை நாம மிகவும் போற்றுகிறோம். இப்பொழுது இவர்கள் செய்த-செய்து கொண்டிருக்கிற-இனிமேலும் செய்யும் உதவி, வருங்கால இந்திய முன்னேற்றத்திற்கு உதவி செய்ததாகும். 32 தர்மங்களிலும் அன்னதானமே சிறந்ததாக முற்காலத்திற் சொல்லப்பட் டிருப்பி



னும், அறிவு வளர்ச்சிக்கு ஆதரவு அளித்து அதை அபிவிருத்தி செய்யச் செய்யும் தானமே இக்காலத்தில் தலை சிறந்தது என்று கருதப்படுகிறது.

"பாரதி"க்கு அபாரச் செலவு ஏற்பட்டுக்கொண் டிருக்கிறது. போஷகர்களுடைய உதவிகளால்தான் "பாரதி" வளரவேண்டி யிருக்கிறது. "பாரதி"க்கு வேண்டும் சமயங்களிலெல்லாம் உதவி, "பாரதி"யை வளர்த்துக் காப்பது போஷகர்களின் கடமையென்று சொல்லத் தேவையில்லை. எப்பொழுதோ ஏதோ கொடுத்துவிட்டோம், நமது கடன் தீர்ந்துவிட்டது என்று போஷக கனவான்கள் எண்ணி மௌனமாக இருக்காது, "பாரதி"யைத் தங்கள் சொந்தப் பத்திரிகையாகக் கருதிப் "பாரதி"க்குத் தகுந்த காலங்களில் தகுந்த விதங்களில் சகாயம் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். தங்கள் தங்கள் செல்வாக்குகளை உபயோகப்படுத்தி அநேக சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்துப் "பாரதி"க்குப் பலமாக அஸ்திவாரம் செய்து பொதுநலத் தொண்டில் அதை ஊக்குமாறு வேண்டுகிறோம்.

"பாரதி"யின் ஒவ்வொரு மணியிலும் தனித்தனியே விலை கொடுத்து வாங்கிப் பார்க்கத்தக்க அவ்வளவு அற்புதமான அழகிய நல்ல நல்ல வியாசங்களிருக்கின்றன. இவ்வாறு உயரிய பற்பல கட்டுரைகள் அடங்கிய "பாரதி"யைக் குறைந்த விகிதத்திற் கொடுப்பதற்குப் போஷகர்களின் மனமுவந்த உதவிகளே காரணம். இவ் அன்பர்கள் செய்திருக்கும் உதவிகளால் உலகில் பல் வேறு பாகங்களில் வசிக்கும் தமிழ் மக்களுக்குப் "பாரதி" தொண்டு செய்துகொண்டு வருகிறது. "பாரதி" மேலும் மேலும் புதிய ஆதரவு பெற்றுப் பணி செய்யும் பொருட்டு அநேக செல்வர்கள் "பாரதி"க்குப் போஷகர்களாக முன் வந்து உதவும்படியாக அன்புடன் வேண்டுகிறோம். இனிக் கிடைக்கப்போகும் போஷக உதவிகளால் மென்மேலும் "பாரதி" நானு வகைகளில் விருத்தி அடைந்து நாட்டிற்கும் மொழிக்கும் அவசியம் வேண்டும் பல வழிகளில் வேலை செய்யும். மேனாடுகளில் பொதுஸ்தாபனங்களுக்கு உதவி, ஊக்குவது போன்று, தமிழ் நாட்டு

ஐஸ்வர்யவான்கள் "பாரதி"க்கு ஒத்தாசை செய்ய முன் வரக் கேட்டுக்கொள்ளுகிறோம். "பாரதி"க்குத் தக்கவாறு ஊக்க மளிப்பின் தேச வேலைகளுக்கு ஊக்கமளித்ததாகும். தென்னாட்டில் எத்தனையோ ஜமீன்தார்க ளிருக்கிறார்கள். தன வைஸியப் பிரபுக்களிருக்கிறார்கள். இன்னும் எத்தனை வகுப்புகளில் வகை வகையான செல்வச் சீமான்களிருக்கிறார்கள். "பாரதி"யின் மீது அவர்களுடைய கவனத்தைச் செலுத்த விரும்புகிறோம். அவர்கள் போஷகராக முன் வரும்படி "பாரதி"யின் பெயரால் அவர்கள் அனைவரையும் வேண்டுகிறோம். வேறு நாடுகளில் வாழும் தமிழ்ச் சகோதரர்களுக்கும் "பாரதி" உழைத்துக்கொண் டிருப்பதால், அயல் நாடுகளில் அமரும் தமிழர்களில் பணக்காரர்களும் "பாரதி"க்குப் போஷகர்களாக முன் வந்து, தேசத்திற்கு உதவுமாறு பிரியத்துடன் கோருகிறோம். தேசத்தின் பெயரால் தோன்றியிருக்கும் "பாரதி"யின் வேண்டுகோளை அனேக கனவான்கள் மதிப்பார்களென்று நம்பிக்கொண் டிருக்கிறோம்.

"பாரதி"க்கு மென்மேலும் இனியும் வேண்டும் வேண்டும் ஒத்தாசைகளைச் செய்து மிகுந்த ஊக்கம் ஊட்டி "பாரதி"யை நாட்டுக்கும் மொழிக்கும் சமூக சீர்திருத்தங்களுக்கும் நன்கு சேவை செய்யுமாறு உதவும்பொருட்டுக் கருணைக் கடலாகிய இறைவன் "பாரதி"யின் போஷகர்களுக்கு அரோக திடகாத்திரத்தையும் நீண்ட ஆயுளையும் சகல பாக்கியங்களையும் தந்தருளும்படியாகப் பிரார்த்திக்கிறோம்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!

(பாரதியார்.)

---



# எனது கலப்பு மணம்.

## திருவாளர் க. ஆதிநாராயணா அவர்கள்

"கலப்பு மணம் காலத்தின் அறமாகும்" என்ற அமுத மொழி என்னை வாட்டலாயிற்று. வங்காளச் சிங்கம் சித்தரஞ்சனார் தலைமையிற் கூடிய தேசிய மகா சபை முதல், யான் உலகினூடே ஒப்புர ஒழுகி வருகிறதை முன்னிட்டு என்னையறியாமல் ஓர் எழுச்சி என்னி லுதிக்கலாயிற்று. எனக்கோ பாஷா ஞானம் பூச்சியம். தனச் செருக்கோ தாழ்மை. வைதீகக் குழுவினரை விட்டு விலகவோ வழியில்லை. ஓர் பிரிவினர், ஏதோ நாட்டிற்கு மிகுந்த உயர் நெறியை நவிலாது சச்சரவுகளில் மூழ்கிக் கிடக்கும் என் பிறப்பு நாடோ எனக்கு எவ்வித சக்தியையும் என்னி லுதித்த எழுச்சியுடன் அளிக்கவில்லை. வீரர்கள் மலியும் வட நாடு சென்றேன். வீர புருடனாக விளங்குவதே முதன்மையான கடமை யெனக் கண்டேன். வீரனானேன். உண்மையைப் போதிக்க வல்ல உத்தமக் கல்வியைக் கற்கலானேன். வடநாட்டி லிருந்தகாலையில் ஹிந்தியும், வங்காளமும் அறிந்தேன். சுயேச்சையைப் பூரணமாக விரும்பும் சுயமரியாதைக்காரர்களின் சமாஜத்தில் சேர்ந்தேன். சங்கம் நிறுவிய ஸ்வாமிஜீயின் கொள்கையைச் செவ்வனே தெரிந்து, அதனூடே வடக்கில் மிகவும் பிரபலமடைந்துள்ள பிரம்ம சமாஜம், பார்சி சமாஜம், பிரார்த்தனை சமாஜம், முகம்மதியர்களின் முன்னேற்றத்திற்கென ஏற்பட்ட "அகமுடியான் சொசைட்டி" முதலிய பல சங்கங்களின் நூல்களையும் கற்றதுமன்றிப் பற்பல மதங்களின் உண்மையை அறிந்தேன். பார்ப்பனர்கள் புரியும் திரு விளையாடல்களைப் பஸ்மீகரிக்க வேண்டியும், சர்வ சமரஸத் தன்மையை, ஒரே

கடவுள், ஒரே சமூகமென்ற பாவங்களிலன்றிச் செய்கையிலும் கொண்டு சிறந்து விளங்கும் சுய மரியாதைச் (ஆரிய) சமாஜத்திற் சேர்ந்து உழைத்துவர எண்ணினேன்.

இரண்டு வருடகாலஞ் சென்று என்னிருப்பிடம் வந்து என்னுலான தேசத் தொண்டை யாற்றிவரலானேன். நான் வந்த சின்னாட்களுக்கெல்லாம் ஓர் வீரப் பெண்ணைக் கண்டேன். அப் பெண்ணும் என்மே லன்பு கொண்டு என்னைக் காதலிக்க விரும்பவே, யானும் சம்மதித்தே னாயினும் பெற்றோர்களுக் கறிவித்து விடும்படியும், அவர்களின் ஆணையின்றேல் முடியாதெனவும் சொல்லி அங்கேயே (அந்தக் கிராமத்தில்) தங்கலானேன். என் எண்ணம் தேசத்திற்குத் தொண்டு புரிவதே என்றும், சாதி, சமய மகற்றி ஏகேஸ்வர உபாசனை செய்து கொண்டு முன்னோர்களின் அடிச் சுவடுகளைப் பின்பற்றுவதே நோக்கமென்றும், சமயம் நேரிடின் நாட்டிற்கு உடல், பொருள், ஆவியையுங் கூட அர்ப்பிப்பதே என் தர்மமாகக் கொண்டு உழைத்து வருகிறேன் என்றும், இவ்வித கஷ்ட நஷ்டங்களுக் குட்படின் அப்பால் நீ. என் காதலியாகிப் பின் நாம் இருவேமும் ஒன்றிச் சுதந்திரப் போரின் அக்கினிச் சுவாலையில் ஆகுதி யாவோமென்றும் சொல்லி வீரத்தை யூட்டும் அனேக வீரர்களின் சரிதாமுதத்தை எடுத்துக் கொடுத்தேன். என் காதலியும் அவைகளைக் கற்றுப் பின்னும் ஹிந்தியும், வடமொழியும் தானே கற்கலானாள். தான் முன்பு கற்றிருந்த தமிழ் தெலுங்குகளுடன் இவைகளும் சேர்ந்து அவளுக்கே ஓர் மகிழ்ச்சியைத் தந்தன. தன் மனதிலுள்ளதைப் பெற்றோர்கட்கு அறிவித்தனள். பாழும் சாதி பேதம் குடி கொண்டுள்ள நம் பாரத நாட்டில் யார்தான் உடனே சம்மதிப்பார்? அதிலும், ரெட்டி மக்கள் அவ்வளவு சீக்கிரமாக அங்கிகாரம் தருவார்களா? அதிலும் யான், ஆந்திர தேயத்துப் பாலன். காங்கிரஸ்வாதி. சாதி பேதத்தையும், சமய பேதங்களையும் கடந்தவன். அதிலும் ஏழையாகிய என்னுடன் மணக்க விரும்பும் தங்களின் மகளுக்கு அனேக கஷ்டங்களைத் தந்து துன்புறுத்தினர். என்னுடன் பேசுவதையும், என்னைப் பார்ப்பதையும் நிறுத்தினர். உடனே பற்று அதிகப்பட்டது. இதை யறிந்து விட்டிற் சிலர் என் காதலியைத் தன் தந்தையின் இல்லத்திற்கு (செங்கல்பட்டு ஜில்லா, மதுராந்தகம்



தாலுக்கா, பொறையூருக்கு) அனுப்பினர். வாசகர்களை இங்கு ஒன்று கவனிக்க வேண்டுகிறேன். இதுவரையில் என் காதலி தன் சிறிய தாயாரின் கிரகத்தி லிருந்தாள் என்பதாக அறியக் கடவது. இதை விட்டு அங்குச் சென்றும் எனக்கு வார மொருமுறை தபால் வருவதைத் தடுக்கப் பல வழிகளில் முற்பட்டும் முடியவில்லை. உடனே இன வழியில் மணத்திற்கு ஏற்பாடுகள் செய்தனர். ஒருவரும் முன் வருவதாகத் தோன்றவில்லை. ஆனால் யாரோ ஒருவர் எங்களின் உண்மையை யறியாது மணத்திற்குச் சம்மதப்படவே, மறு தபாலில் என் காதலி சத்தியவதியால் அவர்களுக்கு ஓர் கடிதம் உண்மையை விளக்கி எழுதப்பட்டது. இதை அறிந்து சர்வ ஏற்பாடுகளும் நின்று விட்டன. இதனால் எங்களின் எண்ணம் பூர்த்தியாகும் என்ற சூசனைகள் தென்பட்டன. ஆனால், பெற்றோர்களோ நிஷ் கபடர்கள். அறமும், வாய்மையும் அறியாதவர்கள். தங்களின் குல தர்மம் சீர் கேடடைந்துவிடு மென்ற சுபாவமுடைய பயந்த புண்ணிய புருடர்களாவார்கள். இவ்வித நிலைமையில் எங்களின் காதல் மணம் எவ்வாறு நிறைவேறுமென்று தோன்றாமலிருந்தது.

நாங்கள் வழியின்றி அவதிக்குள்ளாகி யிருப்பது போன்றே, அவர்களும் யாது புரிவதெனப் புலனாகாதிருந்தனர். ஆனால் ஓர் வித எண்ணம் அவர்களுக்குதித்தது. அதாவது அதிக உபத்திரவம் செய்வோமாயின் இவர்கள் வெளியேறி விடுவார்களென்றும் ஆதலின் தந்திரமாய்ச் சாலோபாயத்தினால் வைத்துக்கொண் டிருக்கவேண்டியதென்றும் முடிவில் குலத்தில் மணத்தை எப்படியாவது முடித்துவிடுவதென்றும், பிறகு எப்படியும் ஆகட்டுமென்றும் முடிவு செய்தனர். அத்தற் குகந்தாற்போல் யான், டில்லிக்குச் செல்லவேண்டிய ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டது. என் காதலியோ நான் டில்லிக்குப் போவதை யறிந்து பின்னும் இடருண்டாகுமென்றும், அவர்களின் மனோபாவங்கள் இன்னதின்ன தென்றும் எனக்குக் கடித மூலமாக அறிவிக்கவே என் பிரயாணம் கெடுவு கடந்தது. ஆனால் நான் டில்லிக்குப் போயின் சீக்கிரமாக வர முடியாதென என் காதலிக்குத் தெரிந்தது போன்றே அவர்களுக்கும் தெரியவரவே, பெண்ணைச் சந்தோஷமாகவே, நடத்தலாயினர். என்னைக் குரு குலத்திற்கு வரவேண்டிய

தென்று குருகுல ஸ்தாபகரினால் அறிந்து நான் புறப்படவே, யிதையறிந்த என் காதலியும் என்னுடன் வருவதாக வற்புறுத்தினாள். மணமில்லாது, காதல் மணத்திலிருக்கும் நாங்கள் எவ்வாறு புறப்படுவது என இருந்த காலையில், எனக்கு அடிக்கடி வீரத்தையும் தைரியத்தையும் உண்டாக்கினதுபோல் இது சமயமும் ஓர் உபாயத்தையும் உரைக்கலாயினாள். முன்பாகவே எனக்கும் தெரிவிக்காது, போலீஸாருக்குத் தன்னிலைமையை விளக்கினதாகத் தெரிகிறது. தன்னில்லத்தில், நாளைய மறுநாள் (அதாவது 1928-ம் வருடம், அக்டோபர்மீ 8-ந் தேதி) அன்று நான் அவருடன் (என்னுடன்) பெங்களூர் செல்லுகிறேன் எனப் பகிரங்கமாகவே சொல்லிவிட்டாள். அவர்கள் பலவற்றைப் புகன்று புகன்று பார்த்து ஓய்ந்து இறுதியில் மவுனத்தில் இருந்துவிட்டார்கள். குறித்த நாளன்று நானும் என் காதலி சத்தியவதியும் பகிரங்கமாக யாவரும் அறியும் வண்ணம் புறப்பட்டுப் பெங்களூர் சென்றோம்.

நாங்கள் சுகமாகவே பெங்களூர் சென்றோம். ஆரிய சமாஜக் கொள்கையின் பிரகாரம், எங்கள் மணவினைக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. இந் நிகழ்ச்சிமுறை முன்பே பெற்றோர்கட் கறிவிக்கப்பட்டது. அவர்களை எதிர்பார்த்தும் வாராமையைக் கண்டு நாங்கள் மணத்தை முடித்துக்கொண்டோம்.

சுமார் இரண்டு மாத காலம் வரையில் நாங்கள் வாழ்ந்துவருங் காலையிலும் அடிக்கடி கடிதங்கள் என்னாலன்றி என் காதலியினாலும் காதலியின் பெற்றோருக்கு எழுதப்பட்டன. பிறகு என் சாதலியின் தாயும், சிறிய தந்தை (முத்துக்கிருஷ்ண ரெட்டி)யும் இங்கு வந்ததாகத் தெரிந்தது. ஆனால் எங்களைப் பார்க்காது போயினர். அவர்சட்கு நாங்களிருந்த விடம் தெரிந்திருந்தும் பார்க்கவில்லை. அதன் பிறகு நாங்கள் மணம் புரிவதற்குமுன் யார் வாயிலாக ரிஜிஸ்டர் லெட்டர் எழுதினோமோ அவர், (வக்கீல், P. S. லட்சிமி நரசின்) மூலமாகவே எங்களைப் பார்க்க வந்தனர். இது சமயம் நாங்கள் பெங்களூர் கண்டோன்மெண்டைச் சேர்ந்த காக்ஸ் டவுனில் தனியாகக் குடியிருந்து வந்தோம். அதுசமயம் வந்தவர் காதலியின் சிறிய தந்தையாரேயாகும்.



எங்களின் மனோபாவத்தையும், செய்கையையும் கண்ட அப்பெரியார், யாதும் எங்களிடம் விரோதமாசப் புகலாது, சென்றனர். ஆனால் தன் மகளை (சத்தியவதியை) வீட்டிற்கு வரும்படியும், அங்குச் சுகமாக இருக்கும்படியும் சொன்னாராயினும், தந்தைக்கும் பெண்ணுக்கும் நடந்த வாக்குவாதங்களை யெண்ணினால் இன்று நடந்ததுபோலிருக்கிறது. அது சமயம் வக்கீலின் உதவியை அவர் நாடினார். வக்கீல்மார்கள் யாது செய்ய இயலும். அதிலுமோ மேலே குறிப்பிட்ட எங்கள் வக்கீல், சீர்திருத்தத்தை விரும்பும் (விதவா விவாக சங்கம், திவ்ய ஞான சங்கம், பிரம்ம ஞான சங்கம், ஒய். எம். ஐ. எ., ஒய். எம். ஸி. எ. முதலிய) சங்கங்களிற் பெருமையை விரும்பி அங்கத்தினராக இருந்து வந்தார். இவரிடமே அவர் தாரு பேச ஆரம்பித்தார். இதில் வியாஜ்யம் செய்ய வழியில்லை என்றும் சரசமாகவேதான் போகவேண்டியதென்றும், இதில், தான் ஒன்றும் செய்ய இயலாதென்றும், எதற்கும் பிறகு பார்ப்போம் என்றும் வக்கீல் சொன்னார். சிறிய தந்தையாரோ ரொக்கம் கொட்டுவதாகச் சொல்லவே (எங்களின்) வக்கீலுக்கு நாக்கில் ருசி தட்டியது. பாவம், தர்ம நெறியில் பணம் ஈட்ட முடியாதவர்கள் எவ்வழியிலாயினும் ஏழைகளையும், வகை தெரியாதவர்களையும் ஏமாற்றினாலன்றிப் பணக்காரர்களாக மாட்டார்களன்றோ! சிறிய தந்தையார் எங்களிடம் உண்மையை உரைக்கவில்லை. வக்கீலின் வற்புறுத்தலுக்கே இணங்கினார். பாவம்! இன்னும் எனக்கு அவரின் மேலுள்ள அன்பை உண்மையாக அளவிட முடியாது. தன் மனம் பொறுக்காது, சத்தியவதியின் பெற்றோர்களுடன் திரும்பினார். வக்கீலுக்குச் சமயம் வாய்த்தது. அவர்களை மயக்கினார். எங்களுக்கோ இவ்வுண்மை தெரியாது. நாங்களோ (என் காதலியும் நானும்) அவர்கள் உண்மையாக அன்போடு அழைப்பின் அவருடன் ஊருக்குச் செல்வதென்றே தீர்மானித்திருந்தோம். ஏனெனில் அவர்களின் உள்ளன்பும், உள்ளமும் அறிந்தவர்களாவோம். அன்றியும் நாங்களிருவரும் மணமுடித்துக்கொண்டதைக் கடித மூலமாக வன்றிப், பிரத்யட்சமாகவும் பலரினாலும் அறிந்தவர்கள் இனி யாது செய்யப் போகின்றனர் என எண்ணியே, கிராமம் செல்லுவதெனத் தீர்மானித்தோம். சில மாதங்களிருந்துவிட்டுப் பிறகு வட நாடு செல்வதென முடிவு செய்யப்பட்டது. நாங்கள் நினைத்தபடியே அவர்களுக்கு

வக்கீல் செய்த துர்ப் போதனைகளுக்கெல்லாம் அவர்கள் இணங்கவே, வக்கீலால், பணம் கொள்ளையடிக்க முடிந்தது. அது சமயம் வக்கீலின் தாயார், என் காதலியைப் பார்த்து "ஏன் அம்மா, நீ உன் குலத்திலேயே ஒருவனை மணக்கலாகாதா? ஆனால் இப்போதும் தப்பில்லை. காசியோ இராமேஸ்வரமோ சென்று, ஸ்நானம் செய்துவிட்டு எங்களைப் போன்ற பிராம்மணருக்கு ஏதாவது உன்னைப்போல் ஒரு பொம்மை (தங்கத்தில், வெள்ளியில்)யைச் செய்து தானமளித்துவிட்டால் தோஷமில்லையே" என்றாள். அது கேட்ட என் காதலி, சரி தான் நீங்களும் ஒரு வக்கீலை ஏற்கெனவே மணந்துகொண்டீர்கள். ஆனால் இப்போது தாங்களும் என்னுடன் வந்து தீர்த்த யாத்திரை செய்து விட்டுப் பின்பும் வேறு ஒருவரை மணக்கலாமே எனறாள். உடனே அவ்வம்மையின் வாயடங்கிற்று. சத்தியமாகவே இவ்வாறு நடந்தது. பிறகு என் காதலியின் சிறிய தந்தை முதலாயினோர், எங்கள் இருவரிடமும் உண்மையை உரையாது சத்தியவதியைக் கைப்பற்றும் சூழ்ச்சியை வக்கீலின் துர்ப் போதனையால் ஏற்று, நெற்றி வியர்வை நிலத்தில் விழுந்து உரமாகச் சம்பாதித்த பணத்தைப், பண வேட்டையை வன வேட்டையா யடிக்கும் வக்கிலுக்கு வாரிக் கொடுத்தார். எங்கள் காதல் மணத்தால் வக்கீல் பெருமான அடைந்த புண்ணிய ஊதியத்தை என்னென் றுரைப்பேன்! இது பட்டுமா? நாங்களிருவரும் உணவுண்ண வாங்கியிருந்த வெள்ளித் தட்டுடன் என் காதலியின் சில நகைகளையும் அவ் வக்கீலிடமே நம்பி வைத்திருக்கும்படி கொடுத்திருந்தோம். களவென்னும் காரறிவாண்மை படைத்து வாய் உழவென்னும் ஒப்புரவு கொண்டொழுகும் இவர் திறம் என்னே! என்னே சீர்திருத்தக்காரர்களென்ற பெயர்பெற்ற வக்கீல்களின் செயல்கள்? பகிரங்க மேடைகளில், பாரதர்களின் முன்னேற்ற முறைகளில், சிறந்தோர் யாமே எனப் பறைசாற்றுகின்றனர். இது விஷயத்தை உற்று நினைக்கின் துயரம் உள்ளுள்ளே செந்தீயாய்ப் பற்றி யெரிகிறது

மறு நாட் காலையில் எங்களிருவரையும் தன்னிடம் வந்து போகும்படி எங்கள் நண்பர், உயிர்த் தோழர், உண்மைத் தேச பக்தர், உள்ளும் புறமும் ஒன்றெனக் கொண்டொழுகும் உத்தமர்,



கபடம் சூது அறியாத அந்தணர், தேச முன்னேற்றத்தைக் கருதிக் கலப்பு மணம் புரிந்ததுமன்றிக், கணக்கற்ற கல்யாணங்களையும் முடித்து வைத்தவர், கைம்பெண்களின் சகாய சபையின் காரியதரிசி, ஆர்ய சமாஜத்தின் அமைச்சர்..........ஆகிய வழக்கறிஞர்—வக்கீல் எங்களுக்குச் சொல்லி அனுப்பி யிருந்தார். நானும் அதற்கு உடன்பட்டுப் புறப்படவேண்டி யிருக்கையில், என்னைவிட உண்மையிலேயே தீர்க்கதரிசியாயுள்ள என் காதலி, "ஏன் நாம் போகவேண்டும்? என் பெற்றோராயின் என்னிடம் வரட்டும், மற்றோராயின் அகலட்டும். நான் அவர் (வக்கீல்) வீட்டிற்குப் போக ஒருப்படேன்; இது சரிப்படா" தென்றாள். அச் சமயம் என் காதலி யுரைத்த உண்மைகள் அன்றே பிறகு தெரியலாயின. நான் என்னை அறியாமலேயே என் கலப்பு மணத்தைப் பற்றி இவ்விதம் எழுதிக்கொண்டு போவதால் என் சகோதரர்களுக்குப் "பாரதி"யைப் படிக்கும் பக்தர்களுக்குச் சிரமம் தந்தவனாகிறேனோ என நினைக்கிறேன். ஆயினும், எடுத்த கட்டுரையை முற்றிலும் முடித்துத் தீரவேண்டியதும் என் கடமையாயிருத்தலின் என் பாரத சகோதரர்களே! நீண்ட, உண்மை விஷயத்தை இன்புடன் வரவேற்பீர்கள் என்னும் நம்பிக்கையால் மேற்செல்கிறேன்.

வக்கீலின் அழைப்பிற்கு நாங்கள் வரமுடியாதென அறிவித்துவிட்டோம். உடனே வக்கில் பெருமான், சத்தியவதியின் அன்னையார் பாட்டியார் சிறிய தந்தையார் ஆகிய இம் மூவருடன், நாங்கள் வதியும் காக்ஸ் டவுனிற்கு (Cox Town) மாலையில் வந்தனர். சத்தியவதியின் அன்னையார் பெயரை இலட்சுமி என்பர். இலட்சுமியென்ற பெயருக்கேற்ற பொறுமையும், அருமையும், அறிவும், அன்பும், அடக்கமும், சாந்தமும், தயையும் ஆகிய' சர்வ நற்குணங்களும் சேர்ந்து ஒரே வடிவமாய் என் முன் புலப்பட்டார். அவர் முகத்தை யான் நோக்கிய அளவில் எனக்கேற்பட்ட துக்கத்தை என்னாற் சகிக்கமுடியவில்லை.

தன்னிஷ்டம்போல் தன் அருமைப் புதல்வி சத்தியவதி நடவாது போயின விஷயத்திலும், என்றுமே இணைபிரியாதிருந்து வந்த தன் செல்வியின் சில மாதங்களாகப் பிரிந்த பிரிவாற்றாமையாலும் கவலையால் விழுங்கப்பட்டு என்பு போர்த்த தோற் பதுமையாய் அங்கு விளங்கின பரிதாபக் காட்சியை நான் கண்டமாத்திரத்தில் என் மனமே யிரங்கி யிளகிக் கரைந்து விட்டது.

தனது அன்னை, தனது செல்வப் புதல்வியின் அன்றலர்ந்த போது போலும் செவ்வி முகத்தைத், தான் முதல் முதல் அதி பேராவலோ டுற்றுநோக்கினார். தன் அரு மருந்தன்ன புத்திரியும் அன்னையைத் திரும்பி நோக்கினள். இருவர் முகமும் இருவர் மனமும் நேர்படவே ஒன்றில் ஒன்று கலந்தன; கசிந்தன; கனிந்தன. இவ் வமயம் என் காதலியின் மாதா வாஞ்சையையும் காதலிபால் அன்னையின் சோகத்தையும் இங்கே நான் என்னென்றுரைப்பேன்.

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினார், இரங்கினார், கலங்கினார். எண்ணியும் இரங்கியும் கலங்கியும் இனி ஆவதென்னவென்று வெகு விரைவில் சுருங்கிய முடிவிற்கு வந்து, தான் இப்போது காணக் கிடைக்கப்பெற்ற அருமைப் புத்திரியுடன், "யான் கையிழந்து பெற்ற கனக வைப்பே! கற்பகப் பூங்கொம்பே! புத்திரி ரத்தினமே!" என்று தம் அருமைக் குரலால் அழைத்து வெகு உல்லாசமாக உறவாடினார்; உரையாடினார். ஒரு வார்த்தையேனும் வாஞ்சை நெறிகடந்தோ உதாசீனமாகவோ வரவில்லை யென்பது உண்மையே. பின் தன் குமாரத்தியை விட்டு என்னிடம் வந்தார். யான் வழக்கம்போல் வெகு மரியாதை செய்யவும், தன் மனதிலுள்ள குறைகளைப், பந்து மித்திரர்களின் பிதற்றல்களை அவர்களின் அபிப்பிராயங்களை யெல்லாம் ஒன்றும் ஒழியாது உள்ளதை உள்ளபடி உரைத்தார். நான் அப்போது சொல்வதும் செய்வதும் இன்னதென அறியாது திகைத்தேன். அவரின் இரக்க மிக்க இனிய வசனங்களை வாசகங்களைச் செவியுற்ற நேரத்தில் என்னையும் அறியாது என் கண்களில் நீர் ததும்ப ஆரம்பித்தது. எனக்கு யாதுமே புலப்படவில்லை.



மனமடைத்து வாயடைத்து நின்றேன். பின்பு அவர், தன் குமாரத்தியை நோக்கித் தன் கிராமம் வரும்படி விரும்பி, வினவினார். அதற்கு என் காதலி சற்று மௌனம் சாதித்தாள்.

ல:— என்ன கண்ணு! நீ ஊருக்கு வரக்கூடாதா? வரமுடியாதா? வரத்தான் மனமில்லையா? அதையாவது சொல்.

ச:— அம்மா! (புன்முறுவலுடன்) நானோ நீங்கள் சொன்னதின் பிரகாரம் அவரை மணந்துகொண் டாகிவிட்டது. எங்கள் மணமும் நாங்கள் வாழும் வாழ்க்கையும் உலகம் அறிந்ததேயாகும். இது இரகசியமல்ல. இதில் பந்துக்கள் எல்லாம் ஏதேதோ பிதற்றுகின்றனர், தூஷிக்கின்றனர் என்று சொல்வதிலிருந்து நான் ஏன் அவர்களைக் காண வேண்டும். என் கற்பைக் காக்கவேண்டி யான் முயன்று செய்தது தமிழ் நாடே யன்றி மற்றும் பரத கண்டமும் அறியும். அதுவன்றி அவர்கள் எல்லாம் என்னைக் கெட்டுப் போய் விட்டாள் என்று அறியாமையால் தூற்றுகிறபடி நான் கெட்டவளாகவே இருக்கத்தான் எனதிச்சை. மூடப் பேய்களின் கூத்தைக் காண எனக்கிச்சையில்லை. வேண்டுமாயின் தாங்கள் அடிக்கடி வந்து பார்த்து விட்டுப் போயின் என் மனம் குளிரும். நான் ஏற்கெனவே நம் ஊரிலேயே பல தடவைகளிலும் தங்களிடம் சொல்லியுமுள்ளேன். நான் மணமொத்தவரை அகல விடுவது கற்பாமோ? பணம் பெரிதெனக் கொள்வது பான்மையோ? தாசிகளே மணம் புரிந்துகொண்டுதான் வாழவேண்டு மென்றிருக்கும் இந் நாளில் நான் அவர்களிலும் தாழ்மையாக வாழ்வது தகுமோ? நான் என் காதலன்றி ஏனையவர்களைச் சகோதரர்களாகப் பாவிக்க வேண்டி யிருக்கையில், அவர்களுமே என் கற்பைக், கற்பு நெறியை மதித்து வரவேண்டியதாயிருக்க மறுமணம் மணக்கச்செய்வது தருமமாமோ? நான் எழுதிய கடிதங்களுக்கு மகாத்மா காந்தியே "உன் உயிரை அளித்தாயினும் கற்பைக் காத்துக்கொள்" என்று அனுமதி தந்திருக்கிறார். புரோபசர் இந்திரரோ "சக்தியைக் கொண்டும் சத்தியத்தை விடாமலும் கற்பை நிலை நிறுத்து" என்று புகன்றிருக்கிறார். ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளோ "ஒருவனை அடைந்த பின், கொண்டவனை விட்டுக் கண்டவனை யடைவதுதான்

தாசித் தொழில்" எனப் பகர்ந்திருக்கிறார். ஸ்ரீமான் கணபதி சாஸ்திரிகளோ "உன் பெற்றோர் பலாத்காரமாக மணம் முடிப்பினும் கற்பைக் கார், மங்கல வணியைவிடக் கற்பே பெரிது" என்று எழுதியுள்ளார். நான் அறிந்த அறிவாளர்களின் அறிவு நூல்களெல்லாம் என் நடையை நேர்மையானதென்றே அரண் செய்து நிற்கின்றன. ஆதலின் கற்பைக் காக்க வேண்டி எனது அரிய ஆவியை அளித்தாயினும் யான் வாழ்வு கொள்வேன்; வாழ்வு கொள்ளத் தவறேன். இன்றேல் பிரம்மசாரிணியாக விளங்குவேன். மணற்பாவையைப் புருஷனாகப் பெற்ற கதையை நீ யறிந்திருந்தும், இவ்வாறு சொல்வது தகாது; அடாது. அன்றியும் நீங்கள் விஷ்ணுபிரானைத் தொழுது வருகிறீர்கள். உங்கள் கொள்கையின் வண்ணம் கடவுள் பிறப்பதெதற்கு? நன்னெறியில் நின்றும் உலகினரை அழிக்கவா? அன்றி ஆக்கவா? ஸ்ரீ கண்ணபிரான், இராமன், சுப்ரமண்யர் முதலானோர் ஏன் அவதரித்தனர்? தர்மத்தை நிலைநாட்டி அதர்மத்தை ஒழிக்கவன்றோ! கற்பின் பெருமையன்றோ சீதா சரிதம். திரௌபதி, தன் கற்பை எவ்வளவு கஷ்டங்களுடன் கண்டனள். கடவுள் ஏன் நீசகுலத்தி லுதிப்பது? ஜாதி பேதத்தை யழிக்கவன்றோ! திருமலையிலுள்ள சீனிவாசப்பெருமாள், துலுக்க ஜாதிப் பெண்ணை மணந்ததெதற்கு? உலகினரின் மூடத்தன்மையைத் தொலைத்து, ஜாதி பேதத்தை அகற்றவன்றோ! அவ்விதமே முருகக் கடவுளின் செயலுமன்றோ! பழைய காலத்தில் நம் குலத்திலும்கூடப் பிறரை எத்தனை பேர் ஜாதி பேதமற்று மணக்கவில்லை! இவ் வகண்ட உலகத்தில் ஸ்ரீமதி சரோஜினி, சௌத்ராணி முதலானோர் பெரும் பாபிகளா! கடவுளின் விரோதிகளா! கற்புப் பெரிதா, காசு பெரிதா? இவ்வித உண்மையும், தர்ம நெறியு மிருக்கையில், ஏன் யான் நம்மைப்போன்ற ஆந்திர தேயத்து அந்தணர் குலத்திலுதித்து, தேசத் தொண்டிலீடுபட்டிருக்கும் இவரை மணக்கலாகாது? நானாகவே அறிந்துகொண்டதுமன்றி அநேகம்பேரின் அபிப்பிராயமுமறிந்தே மணக்க முற்பட்டேன். என் மணம், அறிவுவழி அமைந்ததா? விலகியதா? என்பதைக் காந்தி மகான் மூலமும், ஏனையோர் வாயிலாயும் சந்தேகமறக் கேட்டுத் தோஷமற்றதெனத் தெளிவுபெறவே விளக்கிக் கொள்ளலானேன். அன்றியும் நீங்களே



பல தடவைகளிற் கற்பின் பெருமையை விளக்கியுமிருக்கையில் இன்று இவ்வாறு கூறுவது எவ்வாறு பொருந்தும்? யான் கற்புடைய நங்கையர்கள் சென்ற வழி சென்றேனா, அல்லவா? என தெய்வ சம்மதமாக நீரே புகலும் என்று இவைபோன்ற பற்பல நீதியும் ஒழுங்கும் மிக்க நியாய அறவுரைகளை அநந்தமநந்தமாக நீண்டதோர் பேருரையால் இதமாக எடுத்துரைத்தாள்.

இவைகளையெல்லாம் இனிதே கேட்டு அசைவற்று ஸ்தம்பித்து நின்ற தாயும், மற்றவர்களும் யாதும் புகல வழியின்றி மௌனம் சாதித்தனர். பிறகு என் காதலி என்னிடம் சில விஷயங்களை இரகஸ்யமாகச் சொன்னாள். அதனால் என் காதலி என் அனுமதியை நாடுகிறாள் என்று ஆங்கு வந்திருந்தவர்கள் தப்பாக நினைத்து, என்னை என் காதலிக்கு உத்திரவு கொடுக்கச் சொன்னார்கள். நான் சொல்வதற்கு முன்பே, சில கட்டுத் திட்டங்களை என் காதலி எங்கள் சிநேகிதரின் முன்பாக ஏற்பாடு செய்து கொண்டாள். அதாவது, தாம் கிராமம சென்றால் தனக்கு எல்லா விதங்களிலும் தன் புருடனுடன் வாழவோ, மற்றும் ஏனைய விஷயங்களிலும் என் சுயேச்சை வழி யொழுகவோ தனக்குச் சுதந்திரமிருக்க வேண்டுமென்றும் இன்னும் இதுபோன்ற பலவித விதிகளுக்கு உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாமல் மனப் பூர்வமாய்ச் சம்மதித்தால் தன்னை அழைத்தேகலாமென்றும் என் காதலி கேட்ட கேள்விகளுக்கெல்லாம் உண்மையோடே உடன்பாடு அடைந்து ஏக மனதாய்ச் சம்மதித்த பின்னரே பிரயாணத்திற்கும் ஆயத்தம் செய்யப்பட்டது.

என் காதலியின் தாயும் என்னிடம் வந்து எனக்குச் சொல்ல வேண்டிய சிற்சில செய்திகளையும் சொல்லிவிட்டுத் தன் புத்திரியின் விருப்பத்தின்படியே நடப்பதாயும் அவள் சந்துஷ்டிக்குத் தடையெதுவும் நேராதென்றும் எவ்வித இடையூறுகளையும் இன்னல்களையும் செய்வதேயில்லையெனவும் தன் மகளைப் பற்றிய மாற்றமான சிந்தனைகள் திரிகரண சுத்தியாய்த் தங்களிடம் யாதுமே

கிடையாதென்றும் கூறி, என் தலையின் மேல் தன் வலக்கையை வைத்துப் பிரதிக்ஞை செய்து கொடுத்த பின்பே என் காதலிக்குச் சந்தோஷ மேற்பட்டது. ஏனெனில், ஓர் சமயம் வீட்டில் கொடுமைகள் புரிவாரோ என்றும், குலத்தில் மறுபடியும் பண ஆசையைக் கொண்டு தரும நெறி பிழைத்துத் தன்னை மறு மணம் புரிவிக்க முயற்சிப்பாரோ என்றும் திகிலுற்று இருந்தனள். ஆனால் அரசாங்கம் ஒன்று இருக்கிறதே அதன் ஆணை யொன்றிருக்கிறதே என்று எண்ணுவதற்கோ அதன் ஆட்சி முறையும் அட்டூழியங்களும் சற்றும் உதவியின்றிக் கிடக்கின்றது. இதற்கு அத்தாட்சி, நேபால் தேயத்து ராஜகுமாரியேயாகும். "பணம் கொடுக்கிறார்கள் என்றால் என் குலத்தோர் ஒருவரல்ல இருவரல்ல பலர் வருவார்" என்று என் சதி சத்தியவதி ஓர் தருணம் என்பாற் புகன்ற சத்திய வசனம் என் ஞாபகத்தில் ஓடி வந்துகொண்டே யிருக்கிறது

இரண்டு நாட்கள் சென்றன. தாயும் மகளும் கரையற்ற மகிழ்ச்சியாற் பூரித்தனர். அவர்களிருப்பை நானும் நேரிற் கண்டு களித்தேன். பின்பு கிராமம் சென்றதும், பந்து மித்திரர்களினாற் பட்ட துயர் சொல்லற் பாலதன்று. சத்தியவதியின் உறவினர்கள் யாவரும் சிறந்த ஒரு கட்சியைச் சார்ந்தவரா யிருந்தும், கலப்பு மணத்திற்கும், காதல் மணத்திற்கும் விரோதமாயிருப்பதைக் காணின் ஆச்சர்யகரமாகவே யிருக்கும். எனதருமைச் சகோதரர்களே! பாருங்கள். சீர்திருத்தக்காரர்களெனப் பெயர் படைத்து வெளி வேஷங்கள் போடுவதினாற் பயன் யாது? அதிலும், அதி மேதாவிகளான போலிச் சீர்திருத்தக்காரர்கள் புரியும் அக்ரமங்களையும் அடாத கொடுமைகளையும் என் கலப்பு மணத்திற் செவ்வையாய் அறிந்தேன். அவற்றை நான் முழுதும் எழுத வேண்டின் சுமார் குறைந்தது இரண்டு சஞ்சிகைகள் போதாவென நினைக்கிறேன். நான் இதை எவ்வளவு சுருக்கவேண்டுமோ அவ்வளவு சுருக்கிச் சென்றும் இந்த அளவிற்கு விரிந்து வந்துவிட்டது பற்றி விசனிக்கிறேன். நான் இக் கட்டுரையில், என் காதலியினால் எங்கள் மணத்திற்கு முன்னும் பின்னும் வரைந்தனுப்பப்பட்ட கடிதங்களிலிருந்து சில வரிகளை யிதில் தருவதற்கு முன்பு என்



காதலியைக் கிராமத்திற்குப் பிரயாணம் செய்யுங் காலத்திற் கேட்ட கேள்விகளையும் அதற்கு அவள் அளித்த விடைகளையும் இங்கே சிறிது தந்து பூர்த்தி செய்கிறேன்.

நான்:— என்ன சத்தியவதி, ஒருக்கால் நீ போனால் உன்னை இவர்களே இம்சிப்பின் என்ன செய்வாய்?

ச:— சரிதான், நீங்கள் சொல்லுவது. நான் என் பாட்டிக்காகத்தான் யோசிக்கிறேன். மற்றவர்களைப் பற்றி அவசியமில்லை.

நான்:— அவ்வித நிலைமையில் என்னசெய்வாய் நீ, பெண்ணாயிற்றே!

ச:— அதென்ன அவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட்டீர்களே, பெண்கள் என்ன சுலபமா? கேவலமா? நீங்களே, "பெண்ணின் வீரம்" என எழுதியிருக்கிறதை மறந்துவிட்டீர்கள் போலும். நான், ஹிந்தியிலுள்ள, "வீர மாதர்கள்" "ரஜபுத்ர ஸ்திரீகளின் இதிகாசம்" "பாரத ராணி" என்ற என் வீரச் சகோதரிகளின் பராக்கிரம நூல்களைக் கற்றபின்னும், என்னிடத்தில் என் கற்பைக் காக்கவேண்டிய வீரம் உடன் உதித்துக் கொதிக்கவில்லை யாயின், என் தீரப் பிறப்பும், என் வீர நடையும், என் நல் ஒழுக்கமும் நான் கொண்டிருக்கும் உயரிய எண்ணங்களும் பின் யாதாய் முடியும்? இனிமேல் தாங்கள் அவ்விதம் சொல்லுவது தகாது. விவேகானந்தர் எவ்விதம் மானிட சமூகத்தின் சக்தி குறைந்திருந்தாலும், அதை மேன்மையானதாகவே சொல்லி "நீங்கள், சிங்கக்குட்டிகள், இனி விழியுங்கள், எழுங்கள், புறப்படுங்கள்" என்று எவ்வாறு உலகத்தைத் தட்டி யெழுப்பினாரோ, அவ்வாறே தாங்கள் எனக்குத் தைர்யத்தை யூட்டி அனுப்பாது கோழையாயிருப்பது சரியா!

நான்:— காதலி! அவ்விதம் நினையாதே. உன் கருத்தையும் உன் திட தீர்மானத்தையும் திட தீரத்துவத்தையும் அறியவே நான் அவ்வாறு கூறினதன்றி வேறன்று; இதற்காகக் கோபம் வேண்டாம்.

ச:— எனக்குக் கோபமே கிடையாது. நான் போவதில் தவறு இல்லை. என் பெற்றோர்கள் எவ்வித இடையூறும் செய்ய மாட்டார்கள். இவர்கள் ஒருக்கால் பிறரின் வார்த்தைகளைக் கேட்டாலும், என் சிறிய தகப்பனார் அதற்கிணங்கவே மாட்டார். இவர்தம் நற்குணங்களை நீங்கள் அறிந்தே இருக்கிறீர்கள். அவர் கடவுளின் குரோதத்திற்கும் கோபத்திற்கும் ஆளாகமாட்டார். இவருமே கைவிட்டாலும் என்னைக் காப்பாற்றிக்கொள்ள எனக்குத் தெரியும். காந்தி மகானின் கட்டளை எனக்கு இருக்கவே இருக்கிறது. ஆதலால் எதற்குமே நான் பயப்படமாட்டேன். இதற்காகவா அஞ்சப்போகிறேன்!

நா:— அஞ்சமாட்டாய், ஆயினும் உதவியற்றுத் தன்னந் தனியளாய் நின்றால் நீ யென் செய்வாய் என்பதுதாள் என் சிந்தனை.

ச:— அவ்வாறேன் நான் அடிக்கடி தங்கட்கு கடிதங்கள் எழுதுகிறேன். நீங்களும்தான் வந்துகொண்டிருக்கப் போகிறீர்கள். ஒரு சமயம் இவைகளுக்கு இடையூறு ஏற்படின், என் கற்புக்கும் பங்கம் ஏற்படின் உங்களின் கடமை என்ன? ஆர்ய சமாஜியாயிருந்தும் தேசத் தொண்டில் ஈடுபட்டிருந்தும் யோசனை என்ன? 'காக் பகதூர் சிங்'கைப் பற்றித் தாங்களே புகழ்ந்து பாடியுமிருக்கையில் தாங்கள் பயங்கொள்வது நன்றன்று.

எனச் சொல்லி என்பால் விடை பெற்றுக்கொண்டு தன் பதியையும் சுகமே சென்று அடைந்தாள். வீட்டுக்குச் சென்றது முதற்கொண்டு என் காதலி எவ்வித கஷ்டமும் கலக்கமும் கவலையுமின்றி நின் மதியாகவே இருந்து வந்தனள்.

பின்னர் யானும் அங்குச் சென்று யாங்கள் இருவரும் சந்தோஷமாகவே இருந்து மனோகரமான வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

### கடிதங்கள்

மணத்திற்கு முன் எழுதப்பட்ட கடிதங்களில்,......................... நான் க்ஷத்ரிய வம்சத்திலுதித்த பெண். என்னைத் தசங்கள் இலேசாக நினைக்கலாகாது. கோடா பிரபுவின் குமாரத்தி, தன் ஆடை



# கிள்ளைவிடு தூது.

திருவாளர் அளகை M. பொன்னுசுவாமி அவர்கள்.

அழகிய பூங்காவனம், ஆகா! என்ன சிங்காரம்! என்ன ஒய்யாரம்! எங்கு பார்த்தாலும் மல்லிகை முல்லை ரோஜா இருவாட்சி முதலான புஷ்பச் செடிகளும், மா பலா கோங்கு வேங்கை முதலான வானுற ஓங்கி நிற்கும் மரங்களும், அழகாகப் பின்னிக்கொண் டிருக்கும் திராட்சை சம்பங்கி முதலான கொடிகளும், இன்னும் பலவித இயற்கைத் தோற்றங்களின் இனிய காட்சிகளும் என் மனத்தை

---

யினும் சுதந்தர ரூபியாய் விளங்கியதை நினையுங்கள். என்னுயிருள்ள வரையில் என் கற்புக்குப் பங்கம் ஏற்படுமென்பது சுத்தப் பொய். அவ் வெண்ணத்துடன் யாரும் என் முன் வரமுடியாது. 'ராணி ஜான்ஸி'யின் உடலை, ஆங்கிலேயர் (ஸ்பரிசிக்க) தொடவும் இயலாதிருந்தது போல் என்னுடலையும் யாவரும் தொட இயலாது என்பது திண்ணம் திண்ணம்.......... பண்டைக்காலப் பெண்மணிகள்.......... கற்புக்காகச் சத்தியத்திற்காக எவ்வளவு கஷ்டங்கள் பட்டனர் என்பதை நாம் அறிந்தும், ஏன் தயங்கவேண்டும்.........

கிராமத்திற்குச் சென்ற பிறகு நான் முதலிற் பெற்ற கடிதத்தில், பிரிய...................... சாந்தமே ஜயிக்கும், என்னைப் பற்றிக் கிஞ்சிற்றும் கவலை வேண்டாம். சாந்தம் கொண்டொழுகின், மலை போன்ற கஷ்டங்களையும் தூசி தூசியாகப் பறக்கடிக்கலாம்.........

அடியோடு கொள்ளை கொண்டன. கனிவர்க்கங்கள் பூமியில் பாய் விரிக்கப் பட்டதுபோலச் சொரியப்பட்டுக் கிடக்குங் காட்சியை யென்னென்று கூறுவேன். அன்புள்ள மனைவி, தன் ஆசை நாயகனைத் தழுவுவதுபோல் காட்டுக் கொடிகள், தம் பக்கலுள்ள மரங்களைக் கட்டிச் சுற்றி நிற்பதும், அவைகளின் சேர்க்கையால் தோன்றியவைகளோ வென்று ஐயுறும்படியாகக் கொத்துக் கொத்தான பூக்களும் காய் கனிகளும் அவைகளில் தொங்குவதும், அக் கனிகளை யருந்த வந்திருக்கும் குழலினு மினிய குரல் வாய்ந்த குயிலினங்கள்; மழலை பழகும் கிளிக்கூட்டங்கள்; கூடி விளையாடும் மாடப் புறாக்கள்; ஆ! இன்னும் அங்குக் காணப்பட்ட பலவித இனிய காட்சிகளை நானெவ்விதம் வர்ணிப்பேன்! பூங்காவனத்தி னழகைக் கண்டு களிக்கவெண்ணிப் பின்னும் கொஞ்சதூரம் சென்றேன். மேற்குத் திக்கு நோக்கினேன், சிவந்து மலர்ந்த பொன் பொதிந்த மாலை ஞாயிற்றைக் கண்டு மகிழ்ந்தேன். சித்திரை மாதத்துப் பகலின் உக்கிரமான வெயில் தணிந்து, மாலை வேளையின் இனிய தென்றல், மலர்களின் சுகந்த வாடையைச் சுமந்து ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது. இரு புறங்களிலும் கமுகு மரங்கள் வரிசை வரிசையாக வைத்து வளர்க்கப்பட்ட ஒரு சிறு பாதையின் வழியாகச் சிறிது தூரம் சென்றேன். அங்கு, அண்மையில் ஒரு சிறு தடாகம் காணப்பட்டது. அதில் அல்லி தாமரை மலர்களும், அவைகளில் கசிந்து ஒழுகுந் தேனையுண்டு, மதிமயக்கங் கொண்டு வீணை கானம்புரியும் அற்புதக் கரு வண்டுகளும், அத் தெளிம் பளிங்கன்ன தீம்புனலில் நீந்தித் திரியும் வெண் சிறகுகளையுடைய அன்னங்களும், தத்தித் துள்ளி ஓடித் திரியும் பொன்னிற மீன்களும் என் கருத்தைக் கவர்ந்து, என்னைக் கூவி யழைத்தன. யான் அங்குச் சென்று அத் தூய நீரில் முகத்தைச் சுத்தி செய்து கொண்டு, அங்குக் காணப்பட்ட ஓர் கருங்கல் மேடையில் அமர்ந்தேன்.

இயற்கையழகிற்கு என் மனத்தைப் பறிகொடுத்துவிட்டு, யான் அசைவற்ற ஓவியம்போல் அமர்ந்திருக்கும் தருணத்தில் "கீச்! கீச்! கீச்!" என்று ஓர் சப்தம் பறந்தது. திடீரெனத் திரும்பிப்



பார்த்தேன். ஆ! என்ன சொல்வேன்! ஓர் பஞ்சவர்ணக்கிளி, உடல் நடுங்க என் கையில் வந்தமர்ந்துகொண்டு "அடைக்கலம்! அடைக்கலம்!" எனக் கத்தியது அச்சமும் ஆச்சரியமும் ஒருபுறம் வதைக்க, யான் அக் கிளியைத் தடவிக் கொடுத்து—கிள்ளாய்! அஞ்சேல்! அஞ்சேல்! என் உடம்பிலுள்ள கடைசித் துளியான இரத்தம் பூமியில் சிந்துகிற வரையில், உன்னை நான் தைரியமாகக் காப்பாற்றுவது சத்தியம், என்று கூறி அக் கிளியை அணைத்துக் கொண்டு தத்தாய்! நீ யார்? நினக்கு அச்சம் தந்தவர் யாவர்?—என்றேன்.

கிளி—அன்பரே! அதோ மேலே பாரும்! அவனே என்னை வெருட்டி யடித்து, என்னை இன்னுயிர் போக்க நினைக்கும் வஞ்சகன். தன்னிலு மெளியோரை அடிமைகளாக நினைத்து, அடித்துக் கொல்லக் கருதும், அக் கொடியோனை முதலில் துரத்தும், பின்னர் என்னுடைய சரிதையைக் கூறுகின்றேன். என்று உடல் நடுக்கத்தோடு கூறியது. யான் மேலே நோக்க, அங்கு வட்டமிட்டுக் கொண்டிருந்த ஓர் பெரிய பருந்து என் கண்முன் தோன்றியது. இனிய பறவையின் ஊனுக் காசைப்பட்டு, அதைக் கொல்ல நினைத்த அக் கொடிய பருந்தைத் துரத்தி யடித்துவிட்டு, என்னிடமிருந்த கிளியின் சரிதையை அறிய ஆவல்கொண்டு அதன் முகத்தை யுற்றுநோக்கினேன். கிளியும் என் மனக்கருத்தை யறிந்து கொண்டு, இனிய மழலை மொழியிற் பேச ஆரம்பித்தது.

கிளி—அன்பரே! என்பெயர் பாரதி அண்மையில் வசித்து வரும் சுதந்திராதேவி யிடத்தில் யான் வளர்ந்து வருகின்றேன். அவள் என்னைத் தன் சொந்தப் புதல்வியைப் போலவே பாராட்டிச் சீராட்டி வளர்த்து வருகின்றாள். எனது எஜமானி, என்னை மாதமொருதடவை தேச யாத்திரை செய்து வரும்படி அனுப்புவாள். வழக்கப்படி இன்று யான் தேச வளப்பங்களைக் கண்டு வருகையில், இக் கொடிய பருந்துவின் கையில் அகப்பட நேர்ந்தது. தாங்களில்லாவிடில் இதற்குள், என்னுயிர் எமலோகம் புகுந்திருக்கும். தாங்கள் செய்த நன்றிக்கு யான் என்ன கைமாறு செய்யப் போகின்றேன்—என்று கூறி முடித்தது.

யான்—பச்சை மணிக்கிளியே! பாரதி! சந்தோஷம்! உனது யஜமானி, சுதந்திராதேவியென்று கூறினையே. அது யார்? எங்கிருப்பவள்? எத்தகையள்? அவளுக்கு மணமாகிவிட்டதா?—என்று அடுக்கடுக்கான பல கேள்விகளைக் கேட்டேன்.

பாரதி—ஓ! இவ்வளவுதானா! எனது எஜமானி, சுதந்திரா தேவியை உமக்கு இன்னும் தெரியாதா? அவளை யறியாதார் உலகி லிருக்கமாட்டா ரென்றல்லவோ நினைத்திருந்தேன். எனது எஜமானி சுதந்திராதேவி, மிக்க அழகுடையாள். அவளுடைய அழகை யானெவ்வாறு கூறப் போகின்றேன். ஆயினும் ஒருவாறு கூறுகின்றேன்:—

"வயதுபதி னாறிருக்கும் இளவயது மங்கை.
பொங்கி வரும் பெரு நிலவு போன்ற வொளிமுகமும்,
புன்னகையின் புதுநிலவும் போற்ற வருந் தோற்றம்.
துங்கமணி மின்போலும் வடிவத்தாள்"

—பாரதி.

என்று கூறும்படியான அழகு வடிவம் படைத்தவள். அவளை இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத துணை நலமென்றே கூறலாம். அவளுடைய அருளைப் பெற்றோர் பந்தத்தினின்றும் விலகி, சுயஞ்ஜோதியாயிருந்து தனிவழியே சுகம் பெறுவது திண்ணம். அவளுடைய அருளைப் பெற்ற ஒரு நாடோ, சமூகமோ, எல்லா வழிகளிலும் முன்னேற்றமடைவது உறுதி. மேற்றிசை நாட்டினர் பலர் அவளை நித்தம் போற்றி வணங்குகின்றார்க ளென்றால், அவளுடைய புகழுக்கு வேறு சான்றுகள் கூறவும் வேண்டுமோ? நிற்க. அன்பரே! தங்கள் தோற்றத்திலிருந்து தாங்கள் என்னுடைய எஜமானியின் மீது காதலுற்றிருப்பதாகத் தெரிகிறது. அது உண்மை தானே?—என்று அன்பு பொங்கப் புன் முறுவல் பூத்த முகத்துடன் கேட்டது அக் கிளி. யான்— (சற்று நாணத்துடன்) ஆம் என்றேன். பாரதி—சரி, அப்படியானால் இதோ என் எஜமானியிடம் சென்று, அவளுக்கு உங்கள் கருத்தைக் கூறி, உடன்படுவ



தற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்கின்றேன்—என்று கூறி "விருட்டென்று" பறந்து சென்றது என தன்பிற்குகந்த 'பாரதி' யென்ற அப் பசுங்கிளி.

சுதந்திரா தேவியினிடத்தில் தூதாகச் சென்ற 'பாரதி' பறந்துசென்ற திக்கை நோக்கிய வண்ணமாகவே யிருந்தேன். ஆகா! நான் எங்ஙனம் நின்மதியாக இருப்பேன். 'பாரதி' கூறியபடி, பூர்ண அழகு நிரம்பப்பெற்ற ஜெகஜோதி போன்ற சுதந்திராதேவியின் உருவம், என் மனக் கண்ணுக்கு முன் நின்று தாண்டவமாடி, என்னைச் சித்தங் கலங்கிய பித்தனாகும்படி செய்துவிட்டது. சும்மா இருந்த என்னைச் சுதந்திராதேவியி னடிமையாக்கிய ஏ! கள்ளக் கிளியே! இன்னும் உன்னைக் காணவில்லையே! என்ன தாமதமோ! சுதந்திராதேவியென்ற, அக் காத லின்பக் கனிரசத்தை, இன்னம் நீ காணவில்லையோ! ஆ! இதற்குள் அவளைக் கண்டிருப்பாய்! இதற்குள் என் கருத்தை அந் நங்கையிடம் தெரிவித்திருப்பாய்!—என்று பலவாறு புலம்பிக்கொண் டிருந்தேன். சற்றுநேரத்திற் கெல்லாம், 'பாரதி' என் கையிலிருந்துகொண்டு என்னைப் பார்த்து நகைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். கிள்ளாய்! இதென்ன கேலி! நீ சென்றுவந்த சங்கதியை உடனே கூறு. காதல்த் தீ யென்னை வாட்டுகின்றது—என்றேன்.

அப்போது 'பாரதி' தன் கால் விரலிற் பிடித்திருந்த ஓர் ஓலைச் சுருளை என் மடிமீதெறிந்து, பறந்து சென்றுவிட்டது. பாரதி கொடுத்த ஓலைச் சுருளைப் பிரித்துப் பார்க்கக், கீழே கண்டவாறு எழுதி இருந்தது:—

அன்புடையீரே! அடியனையடைய
ஆவ லுளதெனின் அறைகுவன் கேளீர்!
மனதினி லுறுதி வாக்கினி லுண்மை
இனத்தி லன்பு இருந்திடல் வேண்டும்.
மண்ணினுள் ஜாதி, மதம்பல விருப்பினும்
எண்ணியே யாவரும் சோதரரெனக்
கண்ணிய மான கருத்து வேண்டும்.
பெண்கள் விடுதலை பேணிட வேண்டும்.

# தீண்டாமை.

### ஸ்ரீமதி P. S. அரங்கநாயகி அம்மையார்.

தீண்டாமை-தொடாமை. இத் தீண்டாமை என்னும் சொல், சொல்லளவில் நில்லாது நம் பரத கண்டத்தில் மட்டும் செயலினும் உலவுகின்றது. அதுவும் ஓர் பெருவாரி நோய்போன் றுலவுகின்றது. இந்திய மக்களின் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தீண்டாமை என்பது வேரூன்றிக் கிடக்கின்றது. சாதாரண நிலையில் இருந்த இத் தீண்டாமையை, ஓர் நோய் என்று முதன் முதல் உணர்ந்தவர் நம் மகாத்மா காந்தியடிகள் ஆவர். சுய ராஜ்ய இயக்கத்திற்கு அடிகள் கோலிய நிர்மாணத் திட்டங்களுள் தீண்டாமையை ஒழித்தலும் முக்கியமான ஓர் அம்சமாகும். நம் நாட்டில் தீண்டாதா

---

தாய்மொழிப் பற்றும், தன்னல மற்ற
தளர்விலாத் தொண்டும். * * * *

* * * * * * * * *

* * * * * * * * *

என்று எழுதியிருந்த சுதந்திரா தேவியின் விகிதத்தைப் படித்துக் கொண்டிருக்கையில் "டிங்" "டிங்" எனக் கெடிகாரம், மணியடிக்கும் சப்தம் கேட்டுத் திடீரென எழுந்தேன். ஆகா! நான் காண்பது கனவென்பதை அப்பொழுதுதான் உணர்ந்தேன். என் பக்கத்தில் "பாரதி" 11-வது மணி கிடந்தது. அதில் நான் படித்த "எனது பிரார்த்தனை" என்ற ஆசிரியரின் வியாசமே, கிள்ளைவிடு தூதாக எனது கனவிற் காட்சி யளித்திருக்க வேண்டும்! கனவு, நனவாகுங் காலம் எப்பவோ? 'பாரதி'! அருள்புரி!

---



ரென ஒதுக்கப்பட்டுள்ள இனத்தாரைக் காணின், பொதுவாக அனைவரும் அருவருப்பு கொள்வர். ஏனெனின் அன்னாரின் உடல் மீதும் உடை மீதும் படிந்துள்ள அழுக்கும் அவ் வழுக்கின் பல நாட் சேர்க்கையால் உண்டாம் துர் நாற்றமுமே காரணம். மீன் பிடிப்பவன் ஒருவனுக்கு எங்ஙனம் அவற்றின் துர் நாற்றம் தெரிவதில்லையோ அங்ஙனமே தீண்டாதார் எனப்படுவோர்க்கும் அவர்தம் உடல் உடையின் நாற்றமும் அழுக்கும் தெரிவதில்லை. அந்தோ! பாவம்; அவர்கள் என் செய்வார்கள். அவனுக்கு வயிற்றின் கொடுமை; இவர்கட்கு வறுமையின் கொடுமை.

அறிவு படைத்தோர், ஆண்டவன் படைப்பில் ஏனோ ஏற்றத் தாழ்வு கோடல் வேண்டும்? "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" எனும் பழமொழிக் கிணங்க, வல்லோரெல்லோரும் சேர்ந்து வல்லாரல்லார்பால் இரக்கம் காட்டி அவருக்கு ஏற்றம் தராது, வல்லாரெல்லாரும் வல்லாரல்லாரை இல்லாராக்கி அவருக்கு ஏழ்மை நல்கிடின் அன்னார் எங்ஙனே வாழ்க்கையை நடாத்துவர்? முதன் முதலாக வல்லாரால் இல்லோராக ஆக்கப்பட்டோரே இது போழ்து தீண்டாதார் எனப்படும் இனத்தவராவர். எனவே வல்லோர் ஆதிக்கம் வலுத்து, இல்லோரை உண்டியும் உடையும் கூட நலமே உண்டு உடுத்தி இன்பம் துய்ப்ப வொண்ணாது தடுத்துப் பல்வகைக் கொடுமை கட்குட்படுத்தினர். பாவம்! கோழைகள்!! ஏழைகள்!!! என் செய்வர்; அந்தோ! வல்லோர் ஆதிக்கத்தால் இல்லோர்க்கு ஏற்பட்ட கொடுமையானது, வரவரப் பழக்கமாக மாறி, இல்லோரை வல்லோர் "தீண்டாதார்" என ஒதுக்கி விட்டனர். அந்தோ! இல்லோர் தீண்டாதார் ஆசாது என் செய்வர். உண்ண நல்லுணவில்லை, பருக நன்னீரில்லை, உடுக்க நல்லுடையில்லை, குளிக்கவோ எனின் சேற்றைத்தான் பூசிக் கொள்ளல் வேண்டும். ஏனெனின் வல்லோர்களில், இவற்றை நன்று துய்க்க இல்லோர்க்கு இடந்தருவாரிலர். எனவே வல்லோரால் இல்லோர் ஆக்கியதுமன்றித் தீண்டாதாரெனவும் ஒதுக்கப்பட்டோர் பாடு திண்டாட்டமாய் முடிந்தது. அன்னார் கூலிக்குப் போனால்தான் கூழேனும் கிடைக்கும்; இன்றேல் இல்லை. கூலிக்கு யார்பால் செல்லல் வேண்டும்? இல்லோராகிய இவர்கள் வல்லோர் பால்தானே செல்லல்

வேண்டும். காலை முதல் மாலை வரை கடும்பாடு படினும் அரை வயிற்றுக் கஞ்சிக்குத் தக்க கூலிதான் அளிப்பார்கள். அக் கூலியைக் கொண்டு நல்லுணவுப் பொருள் வாங்கலாமெனின், கடைக்காரர் தீண்டாதார்க்கு விலை விட்டுங் கொடுப்பதில்லை. எனவே குறைந்த விலையில் நிறையப் பெறக்கூடிய தாழ்ந்த பொருளைப் பெற்றுச் சென்று, அரை வயிற்றுக் கஞ்சியை அரை மனதோடு அருந்துவர். இனி நல்லுடை உடுக்கவோ எனின், அவர் உழைப்பின் பலன் வயிற்றிற்கே போதாததா யிருக்க உடை வாங்க அவருக்குப் பொருள் ஏது? ஏதோ அபூர்வமாக ஒன்றிரண்டு உடைகள்தான் இருக்கும். அவ் ஒன்றிரண்டு உடைகளைக் கொண்டு சுத்தமான உடை உடுக்க எங்ஙனம் முடியும். அன்றாடம் உடையைத் தோய்த்து அணிந்தால்தான் உடை பரிசுத்தமாக இருக்கும், நாள் முழுதும் பாடு பட்டால் அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழியுண்டு. உடலையும் உடையையும் தேய்த்துத் தோய்த்துக் கொண்டிருப்பின் உணவிற் கெங்குபோவார். அங்ஙனம் குளித்துத் தோய்க்கலாமெனின் அதற்கும் வழியில்லை. ஏனெனின் ஓர் ஊரில் தீண்டாதாரின் குடிகள் 50 சேர்ந்தாற்போ லிருப்பின், சிறிது தரும சிந்தையுடைய புண்ணியவான் தன் பேர் நடக்கட்டும் என்று (தீண்டாதார் குடிக்கட்டும் என்றல்ல) ஓர் கிணறு வெட்டிக் கொடுப்பார். பல குக்கிராமங்களில் தீண்டாதார் பத்து ஐந்து குடிகள்தான் இருப்பர். அவ் வூர்களில் அன்னார் குடி தண்ணீர்க்குப் படுந் துன்பம் சொல்லுந் தரமன்று. ஏனெனின் பத்து ஐந்து குடிகட்கெனக் கிணறு வெட்டித் தருவாரிலர். 50 குடிகட்கு ஓர் கிணறு இருந்தால் அன்னார் தத்தம் தொழிலிற் புகுமுன்னர் அனைவரும் ஒருங்கே நீர் இறைக்க நேரும். 50 குடிமக்கள் ஒருங்கே நீர் இறைக்கப்புகின், நான் முன்னே நீ முன்னே எனும் அடிதடி வேறு. இச் சச்சரவில் ஒவ்வொருவர்க்கும் ஒன்றிரண்டு குட நீர்தான் கிடைக்கும். அந் நீரைக் கொண்டு உண்பதா? குடிப்பதா? குளிப்பதா? உணவை உண்டாக்குதற்கு வேண்டிய நீர் கிடைப்பதே அரிதாயிருக்கும் பொழுது அன்னார் குளித்தற்கும், தோய்த்தற்கும் தண்ணீர்க்கு எங்கு போவர். அதிலும் தண்ணீர்ப் பஞ்சம் நேரிேனா அந்தோ! ஆண்டவன்தான் அறிய வேண்டும். இப் பாழும் தீண்டாமை எனும் தீய பேய் அன்னாரை ஒரு வழியிலா துன்புறுத்துகின்றது.



தீண்டாமை எனும் தீய நோய் நம் தமிழ் நாட்டினும், கேரளத்தின் கண்ணே பன் மடங்கு கொடுமையாகப் பரவி யிருக்கின்றது. நம் தமிழ் நாட்டிற் பார்ப்பனர் இருப்பது போன்று, கேரளத்தில் "நம்பூதிரி"ப் பார்ப்பனர் என்னும் ஓர் பிரிவினர் உளர். நம் தமிழ் நாட்டுப் பார்ப்பனர் நம்மிடமும், தீண்டாதாரிடமும் கையாளப்பட்டு வரும் கொடுமையினும், நம்பூதிரிப் பார்ப்பனர், கேரளத்திலுள்ள தீண்டாதாரிடமும், மற்றையோரிடமும் கையாண்டு வரும் கொடுமையை என்னென்பது? அந்தோ! கொடுமையினும் கொடுமை. நம்பூதிரியார் வதியும் தெருக்களில் தீண்டாதார் எவரும் நடமாடுதலே கூடாது. கேரளத்தில் நம்பூதிரியாரைத் தவிர மற்ற இனத்தார்க்குத், தமிழ் நாட்டிலுள்ள நமக்குத் தீண்டாதாரெனப்படும் சக்கிலியச் சோதரரைப் போன்று, அந் நாட்டார்க்குச் "செருமக்கள்" எனும் ஓர் பிரிவினர் தீண்டாதாராக இருக்கின்றனர். கேரள நாட்டுக் கிராமங்களில் பெரும்பாலும் மனிதர் நடமாடும் தெருக்கள் இருபுறமும் மூங்கில் வேலியா லமைக்கப்பெற்றுக் குறுகிய சிறு சிறு பாதைகளாகவே யிருக்கும். எதிரே வருவோரை விலகிச் செல்லவே அப் பாதைகளிற் கஷ்டமாக இருக்கும். இவ் வொடுங்கிய பாதைகளிற் செல்லும் போழ்து, அந் நாட்டுத் தீண்டாதாராய செருமக்களில் ஒருவர் எதிர்ப்படின், பத்து கஜ தூரத்திற்கு முன்னால் வரும் பொழுதே அத் தீண்டா மகன் பின்னும் பத்து கஜ தூரம் பின்புறமாக விரைந்தோடி எங்கேனும் ஓர் மறைவிடத்தே மறைந்திருந்து, அவ் வழியே வரும் நாயரோ தீயரோ அவ் வழி கடந்து சென்ற பின்னர்த்தான் அவ் வழியே அச் செருமக்கள் செல்லல் வேண்டும். கேரள நாட்டில் தீண்டாதார்க்கு வழியில் நடந்து செல்லவே இத்தகைக் கொடுமையாயின், மற்றத் துறைகளில் அன்னாரை அந் நாட்டார் படுத்தும் கொடுமையைச் சொல்லவும் வேண்டுமோ?

ஆதலின் அன்பர்காள்! உலகிடை ஆண்டவன் படைப்பில் அனைவரும் அனைவற்றிலும் சம உரிமை உடையோரேயாவர். உலகிலுள்ள எல்லா நாடுகளினும் நம் பாரத நாடு வறுமைப் பிணியால் மிக மிக வாடுகின்றது. வறுமைப் பிணியால் வாடும் நாடு எந் நிலையில் இருக்

கும்? மற்றைய நாடுகளைப்போன்று நம் நாடும் செல்வச் சிறப்புடன் செழித்தோங்க வேண்டுமேல், முதலில் இத் தீண்டாமை எனும் தீய பேயை அறவே ஒழித்தல் வேண்டும். நம் சகோதரராய ஓர் பிரிவினரைத் தீண்டாதார் என வேறு பிரித்தல் வேண்டும். நம் சகோதரரை நாமே இழிவு படுத்தி ஏழ்மையராக்கின், நம் ஒற்றுமை யின்மையைக் கண்டு ஏனைய நாட்டார் நம்மை எள்ளி நகையாடார்கொல்? அந்தோ! பாரத மக்காள்! தீண்டாமைப் பேயைத் தீக்கிரையாக்குமின்; ஆக்குமின்.

நம் பரத நாடு பெரும்பாலும் கிராமங்களால் ஆக்கப்பெற்றுள்ளதால், ஒவ்வோர் கிராமங்களிலும் வதியும் தூய மனத்தினரனைவரும் இத் தீண்டாமை எனும் தீய பேயை ஓட்ட முன்வரல் வேண்டும். முதலில் தீண்டாதாரிடத்திலுள்ள அழுக்குத் தன்மையை அகற்ற அன்னார்க்குத் தக்க நீர் வசதியின்மையால், குளமோ, குட்டையோ, கிணறோ வெட்டி உதவல் வேண்டும். ஊரில் செல்வப் பெருமக்கள் பலர்க்குக், கோயில்கள் கட்டவும், குளங்கள் வெட்டவும் பணத்தை வாரி இறைக்க மனம் செல்கின்றதே யன்றி, அவ் வாரி இறைக்கும் பெரும் பகுதிப் பணத்தில் ஓர் சிறு பகுதிப் பணமேனும் தீண்டாதார்க்கெனச் செலவழிக்க மனம் வருவதில்லை. குடி மக்கள் தீண்டாதார் செய்யும் வேலைக்குத் தக்க கூலியும் தருவதில்லை. மற்ற இனத்தாரும் தீண்டாதாரும் ஒரே வேலை செய்யினும், மற்ற இனத்தார்க்குத் தரும் கூலியை விடத் தீண்டாதார்க்கு ஓர் அணா இரண்டணாக் கூலி குறைத்தே கொடுப்பர். குடிமக்கட்கு அவசியமில்லாச் செலவினங்கட்குப் பொருள் செலவிடவேனும் மனம் வருமேயன்றி வேலைக்குத் தக்க கூலி தர மனம் வாராது. செல்வப் பெருமக்காள்! குடி மக்காள்! ஓர் நாடென்றிருப்பின் அந் நாட்டிலுள்ளோர் அனைவரும் வறுமை யின்றிச் சுகஜீவிகளாய் வாழ்ந்தால்தான் அந் நாடு சிறப்புற்று விளங்கும். நம் நாட்டு மொத்த ஜனத் தொகையில் ஆறில் ஓர் பங்கினரை நாம் தீண்டாதாரென ஒதுக்கி வைத்திருக்கின்றோம். தீண்டாதாரிடத்துள்ள அசுத்தத் தன்மையையும், அறியாத் தன்மையையும், வறுமைப் பிணியையும் அகற்றிவிடின் தீண்டாதார் தீண்டுவோர் ஆய்விடுவர். அன்னாரின் அசுத்தத் தன்மையைப் போக்கப் பணப் பெருமக்கள் பெருமனம் வைத்தல் வேண்டும். அறியாமையை நீக்கக் கல்வியறிவு புகட்டல்



வேண்டும். வறுமைப் பிணியைப் போக்கக் குடி மக்களும், பணப் பெருமக்களும், தீண்டாதாரின் வேலைக்குத் தக்க கூலியை மற்ற இனத்தாரின் கூலியைவிடக் குறைப்பதை விடுத்துக் கூட்டித்தர மனமுவந்து முன்வரல் வேண்டும்.

சுய ராஜ்ய இயக்கத்திற்காக மகாத்மா காந்தியடிகள் கோலிய அறநெறி முறைகளாய ஐவகை நிர்மாணத் திட்டங்களுள் முக்யமான இத் தீண்டாமை ஒழித்தலை, நம் தமிழ் நாட்டுத் தனம் படைத்தோரே! பாரத நாட்டுப் பணப் பெருந்தகையீர்! நீங்கள் அறமென நினைத்து ஆண்டவனுக்கெனக் கோயிலும், குளமும், கட்டி, வெட்டுவதை விடுத்துத், தீண்டாதார் எனும் ஆண்டவர்க்குப் பள்ளியும், பள்ளமும் கட்டி வெட்டுங்கள். ஆண்டவன் தேர்த் திருவிழாக்கட்குச் செலவிடும் பொருளை, இத் தீண்டாதாரின் அன்ன வஸ்திரத் தேர்த் திருவிழாவை நடத்துங்கள். ஆண்டவன் ஒருவன் இருப்பதுண்மையாயின் நீங்கள் அறமென்றெண்ணி, ஆண்டவனுக்காகக் கோயில் குளம் கட்டி வெட்டித் தேர்த் திருவிழாக் கொண்டாடுவதினும், இத் தீண்டாத ஆண்டிகட்குப் பள்ளியும் பள்ளமும் கட்டி, வெட்டி, அன்ன வஸ்திர அலங்காரங்கள் செய்து, கொண்டாடின் இதையே அதினும் பெரிய அறமென ஏற்று ஆண்டவன் உங்கட்கு அருள் நல்குவர். படமாடும் கோயில்கட்குச் செய்யும் தொண்டினும் நடமாடும் கோயில்கட்குச் செய்யும் தொண்டே சாலச் சிறந்தது. ஆதலின், அன்பர்காள்! நும் அன்பை எல்லாம் தீண்டாதார் பாற் காட்டித் தீண்டாமை எனும் பேயை அறவே ஒழித்தல் வேண்டும்.

“படமாடுங் கோயிற் பரமற்கொன் றீயின்
நடமாடுங் கோயில் நம்பற்கஃ தாகா
நடமாடுங் கோயில் நம்பற்கொன் றீயிற்
படமாடுங் கோயிற் பரமற்கஃ தாமே.”

(தேவாரம்.)




# அன்னபூர்ணா தேவி.

## திருவாளர் N. வேங்கடரமணன் அவர்கள்.

அடிமை இந்தியாவில் பிறந்த காரணத்தால் எத்தனையோ இந்திய சகோதர சகோதரிகள் தங்கள் அறிவும், ஆற்றலும் வீரமும், தியாகமும் வெளிப்பட்டுப் பிரகாசிப்பதற் கேற்ற சந்தர்ப்பங்களும், சாதனங்களும், சௌகரியங்களும் வாய்க்கப் பெறாமல், குடத்திலிட்ட விளக்குப்போல் தோன்றிப் பிரகாசித்து மறைந்துகொண் டிருக்கின்றனர். இத்தகையோர்களுக்குத் தகுந்த வாய்ப்புகள் கிட்டுமாயின் அவர்கள் குன்றிலிட்ட விளக்குப்போல் உலகிற் பிரகாசிப்பார்களென்பதற் கையமில்லை. அமெரிக்காவின் சுதந்தரத்தை நிலைநாட்டி உலகிற் புகழ்பெற்ற வாஷிங்டன் போன்ற மகா வீரர்களும், பிரான்சின் சுதந்தர இயக்கத்திற்கு உயிரளித்து உயர்வு பெற்ற ஜோன் ஆப் ஆர்க் போன்ற வீர மாதுகளும் இந்தியாவில் பலருளர். ஆயினும் அவர்களுக் கேற்ற அவசியங்கள் ஏற்படாமையினாலேயே வெளியுலகம் அறிய முடியாத நிலையில் அவர்கள் வாழ்க்கை சென்றுகொண்டிருக்கிறது. சிவாஜி, ராணா பிரதாப சிம்மன், நானாபர்னவீஸ் போன்ற மகா வீரர்களும், ராணி துர்க்காவதி, ஜான்ஸி ராணி போன்ற வீர மாதர்களும் இந்திய வீர வாழ்க்கைக்கு உதாரணங்களல்லவா? காங்கிரஸ் போன்ற தேசீய ஸ்தாபனங்களின் முயற்சியால் இந்தியாவில் எழுந்த சுதந்தர தாகத்தின் காரணமாக மற்றும் பல வீர மாதர்கள்-தியாக சீலர்கள்-பேரறிஞர்கள்-தேச ஊழியர்கள்-கலா நிபுணர்கள் நம் நாட்டில் தோன்றி வருவது யாவர்க்குங் கண்கூடு. சுதந்தரப்போரின் முன்னணியிற் பாரத மக்களில் ஆடவர்களைப்போற் பெண்களும் முன்னின்று சமர்செய்ய மாட்டுவார்களென்பதைச் சரித்திரம் வலியுறுத்து





அன்னபூரணா தேவி

கிறது. மகாத்மாஜி யவர்களின் தலைமையின் கீழ் நம் நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமைப் போரில் ஆயிரக் கணக்கான ஆண் மக்களை யன்றிப் பெண் மக்களும் பங்கு பெற்றிருக்கின்றனர். அத்தகைய பெண் மக்களில் வீரமும், தியாகமும் ஒருங்கே வாய்க்கப்பெற்று, மகாத்மாஜி யவர்களின் அபிமான புத்திரிகளி லொருவரெனப் பெயர் பெற்று, ஆந்திர தேசம் முழுதும் ஒத்துழையா இயக்கத்தை வீறு கொண்டு எழுப்பிய உத்தம மங்கை, நம் அன்னபூர்ணாதேவியா ராவர். ஆண்டில் இளமையும், அறிவில் முதுமையும் வாய்க்கப்பெற்றுத் தேசாபிமானங் கொண்டு உடல் நலத்தைக் கருதாது தேச ஊழியஞ் செய்து, அவ் வூழியத்திலேயே உயிர் நீத்த உத்தம நங்கையாம் அன்னபூர்ணாதேவியாரின் தூய சரித்திரத்தை இந்தியராயினோர் சிந்தித்தல் அவசியம்.

## பிறப்பும் படிப்பும்

ஸ்ரீமதி. அன்னபூர்ணா தேவியார் தெலுங்கு நாட்டில் ஏலூருக்கு அணித்தேயுள்ள சாடபர்ரு என்ற கிராமத்தில் 1900-ம் ஆண்டில் பிறந்தார். இவ் வம்மையின் தந்தையார் கலகரஇராமஸ்வாமி சௌதரி யாவர். அன்னையாரின் பெயர் பிச்சம்மாள் என்பர். தாய் தந்தையர் தமக்கு அருந்தவக் குழவியாகப் பிறந்த ஒரே புத்திரியாகிய அன்னபூர்ணாதேவியை ஆசையோடு அன்பாக வளர்த்துவந்தனர்; பலபேர் கருதுவதுபோற் பெண் குழந்தைதானே யென்று அலட்சியப் செய்யாமற் பெற்றோர் சிறு வயதினின்றே பள்ளிக்கனுப்பிக் கல்வி கற்கச் செய்தனர். ஆயினும், ஆரம்பத்தில் கல்வியில் ஆர்வமில்லாமலேயே தாய் தந்தையரின் நிர்ப்பந்தத்தாற் பாடசாலைக்குச் சென்று வந்தார். ஏலூரில் இவ்வாறு இரண்டொரு ஆண்டு கல்வி கற்ற பின்னர், குண்டூரிலுள்ள மிஷனரிகளின் பெண் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கு இரண்டு வருடங்கள் படித்தபிறகு கல்கத்தாவிலுள்ள பிரம்ம சமாஜத்தின் பெண் பாடசாலைக்கு அன்னபூர்ணாவை அனுப்பிவைக்குமாறு சில நண்பர்கள் தூண்டினர். ஆனால் அவ்வாறு அனுப்பிக் கல்வி கற்பிக்கச்செய்ய இராமஸ்வாமி சௌதரி யவர்களின் பொருள் நிலை இடங் கொடுக்கவில்லை. ஆயினும் எவ்வாறாயினும் கஷ்டப்பட்டுந் தம் அருங் குழந்தையை உயர்தரக் கல்வி கற்கச்செய்ய

வேண்டுமென்று விரும்பிய தாய் தந்தையர் முடிவாக அன்னபூர்ணாவைக் கல்கத்தாவுக்கு அனுப்பவே தீர்மானித்தனர். அன்னபூர்ணாவின் செலவுகளுக்காக மாதந்தோறும் தந்தையார் வியாபாரத் துறையில் 10 ரூபாய் சம்பாதித்துக் கொடுக்கவும், அன்னையார் தையல் மிஷினைக்கொண்டு மாதம் 5 ரூபாய் சேகரித்துக் கொடுக்கவும் உறுதி செய்தனர். என்னே பெற்றோரின் அன்பு! இவ்வித ஏற்பாட்டினால் அன்னபூர்ணாதேவி 1911-ம் ஆண்டில் கல்கத்தாவுக்குச் சென்று, பிரம்ம சமாஜப் பிரச்சாரகராகப் பிரசித்தி யடைந்த ஹேம சந்திர சர்க்கார் என்ற பெரியாரின் வீட்டில் தங்கி, பிரம்ம சமாஜப் பெண் பாடசாலையில் முதல் பாரத்தில் சேர்ந்து வாசிக்க ஆரம்பித்தார். அதுகாலை கல்கத்தாவில் தன்னுடனிருந்து கல்வி கற்றுவரும் சகுந்தலம்மாள் என்ற ஒரு தெலுங்குப் பெண்மணியைத் தவிர வேறு தெலுங்கர்களின் துணை யில்லாமைபற்றி, அன்னபூர்ணாவுக்கு வங்காளி மொழியைக் கற்கவும், பேசவும் அவசியமாயிற்று. எனவே வங்காளி மொழியில் விரைவில் போதிய அனுபவம் பெற்றார். கல்கத்தாவில் ஹேமசந்திர சர்க்கார் போன்ற பல பெரியோர்களின் ஆசிகளுக்கு இலக்காகிய அன்னபூர்ணாதேவிக்கு அப்பொழுதே உயர்ந்த எண்ணங்களும், தேசாபிமானமும், கலாபிமானமும், தியாக உணர்ச்சியும் உதயமாயின வென்பதில் அதிசயமில்லை. அவ்வாறு படித்து 5-வது பாரத்தை முடித்த பின்னர்த் தேக மசௌக்கிய முற்றமையால் கல்கத்தாவை விட்டு ஊர் வந்து சேர்ந்தார். பிறகு சொந்தத்தில் படித்துச் சென்னையில் பள்ளியிறுதிப் பரீக்ஷைக்கு ஆஜரானார். அதன் பின்னர் நூல்களை எழுதி வெளியிட்டு அவ்வழியே பணமீட்டிப் படிக்க விரும்பினார். எனவே 'சீதாராமன்' என்ற பெயரிய புத்தகமொன்றை 1917-ம் ஆண்டில் தெலுங்கில் வெகு அருமையாக எழுதிப் பிரசுரித்தார். அப் புத்தகம் உயர்தரப் பாடசாலைகளுக்குப் பாட புத்தகமாக அமைக்கப்பட்டது. மற்றுஞ் சில நூல்களை எழுத ஆரம்பித்தார். தன் சுய முயற்சியாற் கல்வியறிவை மேன்மேலும் வளர்த்துக்கொண்டார். சமஸ்கிருதம், தெலுங்கு, வங்காளி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ந்த ஞானம் பெற்றார். அம் மொழிகளிலுள்ள அரிய நூல்கள் பலவற்றைப் படித்தார். மீண்டும் உடல் நலம் குன்றியதால் 1919-ம் ஆண்டில் மதனபல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.



## விவாகம்

இதுகாலை ஆந்திர தேசத்தில் பிரசித்தி யடைந்துள்ள திரு. **மாகண்டி டாபிநீடு சௌதரி** அவர்களை அன்னபூர்ணாதேவி காதலித்து 1920-ம் ஆண்டில் எலூரில் அவரை விவாகம் செய்து கொண்டார். அவ் விவாகமானது ஆசார சீர் திருத்தத்திற்கு ஒரு வழிகாட்டியாக நின்றது. தேர்ந்த கல்வியும் அறிவும் ஒத்த மணமென அதைக் கூறலாம். மேலும் அவ் விவாகத்தை பிராம்மண ரல்லாத புரோகிதரைக் கொண்டு, மந்திரங்களனைத்தையும் தாய்மொழியாகிய தெலுங்கில் கூறிச் செய்து முடித்தனர். அவ் விவாகத்தைக் காணக் கல்கத்தாவினின்றும் பிரம்ம சமாஜப் பெரியாராகிய **உமேச சந்திர வித்யாரத்னர்** முதலியோரும், மற்றும் பலவிடங்களினின்றும் பல பெரியோர்களும் வந்திருந்து வதூவரர்களை ஆசீர்வதித்தனர். விவாகத்திற்குப் பிறகு 1920-ல் டாபிநீடு அவர்கள் விவசாய சாஸ்திரத்தைக் கற்பதற்காக அமெரிக்காவுக்குச் செல்ல முற்பட்டார். அப்பொழுது அன்னபூர்ணா தேவியார் தம் கணவரை விளித்து **"தாங்கள் என்னை மறந்தபோதிலும் நம் தாய் நாட்டை மறவாதீர்கள்"** என்று எச்சரிக்கை செய்து வழியனுப்பினார். சின்னாட்களுக்குப் பின்னர் தானும் அமெரிக்காவுக்குச் சென்று உயர்தரக் கல்வி கற்க விரும்பினார். தமது பிரயாணத்திற்காக வேண்டிய 1200 ரூ பெறுமான உடைகளை வாங்கினார். கப்பல் டிக்கட்டுக்கென 250 ரூபாய் முன்பணம் கட்டினார்.

## தேச சேவை

அச் சமயத்தில் நாட்டில் காந்தி யடிகளாரின் ஒத்துழையா இயக்கத்தின் முரசொலி கேட்கலாயிற்று. அதை உற்றுக் கேட்டார் நம் அன்னபூர்ணாதேவியார். ஏற்கெனவே தேச ஊழியத்திற் பற்றுக் கொண்டிருந்த அவரது உள்ளத்தில் புதிய உணர்ச்சி தோன்றியது. 'காந்தியடிகளின் ஆணை வழிபற்றித் தேச சேவை செய்வது ஒன்று', அல்லது அமெரிக்க நாட்டுக்குச் சென்று உயர்தரக் கல்வி கற்க முயல்வது மற்றொன்று' ஆகிய இவ் விரு வழிகள் அவர்முன் தோன்றின. அவற்றில் தேச சேவை செய்வதே முக்கியமென அவரது உள்ளம் விடையிறுத்தது. அந்த நிமிஷமே ஒத்துழையா இயக்கத்திற் சேர்ந்து

தேச ஊழியம் புரிய முற்பட்டார். ஒருநாளும் வீட்டைவிட்டு வெளியே நடந்து சென்றறியாத அவ் விளங் கோதை ஊர்கள்தோறும் கால் கடுக்க நடந்து சென்று அஹிம்சா தர்மத்தோடு கூடிய ஒத்துழையா இயக்கத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்யலானார். மெல்லிய பட்டுடைகளையும், அழகிய அயல்நாட்டுச் சேலைகளையும் அணிந்து நின்ற தம் முடம்பில், அவைகளை நீக்கி முரட்டுத்தனமாய்க் காணப்பட்ட கத்தராடையைக் கருதி யுடுத்தார். கத்தர்த்துணி மூட்டைகளைத் தோளில் தூக்கிச் சென்று வீடு வீடாக விற்பனை செய்தார். வாய்திறந்து நன்கு பேசவும் அறியாத அவ் விள நங்கை, மாபெருஞ் சபைகளில் மேடைகளில் நின்று தேசியத்தைப் பற்றிப் பிரசங்கமாரி புரியலானார். பிறருக்குக் கொடுப்பதன்றி பிறரிடத்தில் யாதொன்றும் கேட்டறியாத தம் மலர்க் கரங்களை நீட்டி சுயராஜ்ய நிதிக்குப் பணம் கேட்டு வசூலித்தார். அதனிடையில் மகாத்மாஜி யவர்கள் ஆந்திர தேசத்திற்கு விஜயம் செய்தார். அவர்களை அன்னபூர்ணாதேவி நேரிற் கண்டு தரிசித்து அவரது திருவடிகளில் தாம் அணிந்திருந்த நகைகளைச் சுயராஜ்யக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். கலியாண காலத்தில் தம் கணவனாற் கொடுக்கப்பெற்ற கணையாழியையும் காணிக்கையாக்கினார். ஆர்மீனியாவில் அவஸ்தை யடையும் ஸ்திரீகளுக்கெனத் தம்மிடத்தி லிருந்த 2000 ரூ விலையுள்ள புடவைகளை மகாத்மாஜி யவர்களின் மூலமாய் அனுப்பிவைத்தார். அயல்நாட்டுப் புடவைகள் என்ற காரணத்தால் தனித் தனி 500 ரூ பெறுமான கலியாணப் புடவைகளை அக்கினிக்கு ஆகுதியாக்கினார். கத்தர் இயக்கத்தை வலிமையாக்க எண்ணி ஹைதராபாத், பீமவரம், கம்பலகூடம், ஏலூர் முதலிய பலவிடங்களில் 8000ரூ வரையில் வசூல் செய்து "மோகனதாஸ் பரிச்சிரமாலயம்" என்ற பெயரால் கத்த ருற்பத்திச் சாலையொன் றேற்படுத்தினார். காந்தியடிகளின் ஆரோக்ய மார்க்கப் புத்தகத்தைப் படித்தது முதல் பரிசுத்தமான சாத்வீக உணவை மேற்கொண்டார். தெலுங்கு நாடெங்கும் தேசிய இயக்கத்தைப் பரவச் செய்தார். நாட்டில் தீவிரமான எழுச்சியை யுண்டாக்கினார். பெண்மக்களிடையில் புத்துணர்ச்சியைக் கிளப்பினார். தேச ஊழியத்திற் பெண்களையும் பங்குபெறத் தூண்டினார். தமது அரிய ஊழியத்தால் மகாத்மாஜி யவர்களைக் களிக்கச் செய்து அவரது அபிமான புத்திரியெனப் பெயர் படைத்தார். தெலுங்கு நாட்டுக்கு ஒரு திலகமாக விளங்கினார்.



## தேசபக்தி

அன்னபூர்ணாதேவிக் கிருந்த தேச பக்தியை அளவிட்டுக் கூற முடியாது, எனவே அவரது உள்ளத்தின் உணர்ச்சியை வெளிப்படுத்தக் கூடியவாறு, அவர் அமெரிக்காவி லிருந்த தம் கணவருக் கெழுதிய சில கடிதங்களின் உரைகளை இங்கு வாசகர்களுக்குத் தருகின்றோம்.

14—8—20

"தங்களைப் பிரிந்திருப்பதால் எனக்கு அவ்வளவு கவலையில்லை. தாங்கள் எக்காரணத்தை முன்னிட்டுப் 'பாரத மாதாவை' விட்டுப் பிரிந்து அமெரிக்காவுக்குச் சென்றீர்களோ, அக் காரணத்தை மனதில் வைத்து ஜெயம் பெற்றுத் திரும்பி வந்து வரவேற்கப் படுவீர்களோ இல்லையோ என்ற கவலையே என் உள்ளத்தை அதிகமாக வருத்துகிறது. நம் சமூகத்திற்கும் நம் தேசத்திற்கும் தங்கள் உயிரைக் கொடுக்க மாட்டுவீர்களென்று உங்கள் சகோதரர்கள் எவ்வாறு எண்ணி உபசாரம் செய்தனரோ அதை எப்பொழுதும் மனத்தி லிறுத்துங்கள். பூமாலைகளைப் போட்டுக்கொண்டு அயல் நாட்டுக்குச் சென்றதாலேயே கவுரவம் பெற்றவர்களாகார். வறுமையாளராயினும், அயல்நாடு செல்லாதவராயினும் தாய் நாட்டுக்காக உயிரை யளிப்பவரே மேலானவராவர்."

9—11—20

"பாரதநாடு தங்களுக்கு ஞாபகத்தி லிருக்கிறதா? கொளும்பி லேயே மறந்துவிட்டீர்களா? கூடுமான விரைவில் தாய்நாட்டுக்கு வந்து தேசோபகாரம் புரிய மாட்டுவீர்களென நம்புகிறேன். தாங்கள் எதற்காக அங்குச் சென்றீர்கள்? நான் தங்களை எதற்காகச் சந்தோஷத்துடன் அனுப்பிவைத்தேன்? அதை மறவாமற் கடமையைச் செய்யுங்கள். என்னை மறந்தாலும் நம் தேசத்தை மறவாதீர்கள். நான் நிலையானவளல்ல. கூற்றுவன் அழைத்த இடத்திற் செல்ல வேண்டியவளே. தேசத்திற்குத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தால் அஃது நிலையாய் நிற்கும்."

12—4—21

“காந்தி மகான், ‘உன் நாட்டிற்காக நீ என்ன கொடுக்கப் போகிறாய்’ என்று என்னைக்கேட்கவே பெஜவாடாவில் எனது இரண்டு ஜதைக் காப்புகளைக் கொடுத்திருந்தேன். ஏலூருக்கு அன்னார் வந்திருந்த பொழுது என்னிடமிருந்த நகைகள் அனைத்தையும் சுயராஜ்ய நிதிக்குக் கொடுத்துவிட்டேன். இப்பொழுது என்னிடத்தில் ஒன்றுமில்லை ஒவ்வொரு காப்பு மட்டிலும் கைகளிலும், மங்கல நாணைத் தாங்கள் என் கழுத்தில் சூட்டிய பொற் பதக்கமும் மாத்திரமே அணிந்திருக்கிறேன். இப்பொழுது நான் உடுத்துக்கொண்டிருக்கிற வஸ்திரங்களைக் கண்டால் தாங்கள் ஆச்சரியப்படுவீர்கள். சுய ராஜ்யம் வரும் வரையில் கையால் நூற்ற காதி வஸ்திரங்களையே உடுப்பேன். அயல் நாட்டுத் துணிகளை நம் ஆயுள் உள்ளளவும் நாமிருவரும் பகிஷ்கரிக்க வேண்டுவதே. நம் நாட்டிலுள்ள பட்டு வஸ்திரங்களைக் கூட நாம் உடுப்பதற்கில்லை. 10-ம் நெம்பர் முரட்டுக் காதி வஸ்திரங்களே இப்பொழுது எனது உடலைக் காத்து வருகின்றன.”

இது போன்ற கடிதங்கள் பல. தேசீய இயக்கத்தைப்பற்றி அன்னபூர்ணா தேவி பத்திரிகைகளிலும் எழுதிவந்தார். அவரது எழுத்துக்கள் ஒவ்வொன்றிலும் தேச பக்தி கொழுந்துவிட் டெரிவதைக் காணலாம். மிக்க இள வயதுடையவராயினும் தமது அரிய ஊழியத்தாலும், உயர்தரக் கொள்கையாலும், உத்தம தேசாபிமானத்தாலும் ஆந்திர தேசத்திலேயே யன்றி அகில இந்தியாவிலும் பாராட்டப்பட்டார். அதிக உற்சாகத்துடன் அகமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக்குச் சென்றார். அது முதல் ஒத்துழையா இயக்கத்தைப்பற்றி நாட்டில் சாந்தமாகப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார்.

## கணவர் வருகை

அன்னபூர்ணா தேவியின் கணவர் 1923-ம் ஆண்டில் அமெரிக்காவில் தமது படிப்பை முடித்துக்கொண்டு திரும்பி இந்தியாவுக்கு வந்தார். பம்பாய்த் துறைமுகத்தில் அன்னபூர்ணா தேவி கணவரைக் காணக் கப்பலுக்குக் கத்தருடைகளைக் கொண்டு எதிர் சென்று அங்கேயே அவர் அணிந்திருந்த அயல் நாட்டு உடைகளனைத்தையும் கடலில் எறியச்செய்து, கத்தருடைகளை யணியச்செய்து, களிப்புடன் கரைக்கு அவரை அழைத்து வந்தார். கணவருக்குச் சுதேச தீட்சை யளித்த காரிகையின் அற்புதந்தா னென்னே! இவ்வாறு பிரிந்திருந்து கூடிக் களிபேருவகை யெய்திய காதல ரிருவரும், நீண்ட நாள் இன்பம் துய்த்துத் தேச ஊழியம் புரிவதற் கியலாதவாறு அன்னபூர்ணா தேவி விரைவில் வியாதிக்குள்ளானார். வைத்திய சிகிச்சையை நாடி கணவரும் மனைவியுங் கூடிக் கல்கத்தாவுக்குச் சென்றனர். 1924-ம் ஆண்டில் அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து இறந்தது. மீண்டும் வியாதி அதிகப்பட்டமையால் பெஜவாடா, பக்ஷி தீர்த்தம் முதலிய தலங்களுக்குச் சௌக்கியத்திற்காகச் சென்றனர். அப்பொழுது இவ்வம்மை “நாரீ” என்ற பெயரிய சுதந்தர நாலொன்றைத் தெலுங்கில் எழுதினார். “ஸ்ரீ ராமகிருஷ்ண லீலாமிருதம்” என்ற 3 பாகங்களுடைய வங்காளி நூலைத் தெலுங்கில் மொழி பெயர்த்தார். சிறிது சௌக்கியத்துடன் மீண்டும் வீட்டை யடைந்தார். வீணை வாசிப்புப் பயில முயன்றார். அதனிடையில் அவருக்குப் பெண் குழந்தை யொன்று பிறந்தது. அதற்கு “ஜான்ஸி” என்று பெயரிட்டார்.

## முடிவு

அங்கிலியில் மீண்டும் வியாதி அதிகமடையலாயிற்று. எத்துணையோ வைத்திய சிகிச்சைகள் செய்யப்பட்டும் குணமடையாமற் கடைசியில் நமது துரதிர்ஷ்டவசமாக 1927-ம் வருஷ அக்டோபர் 9-ம் தேதி அன்னபூர்ணா தேவியார் தம் மருங் குழந்தையையும், தம் கண்ணனைய கணவரையும், தம்முயிரென நேசித்த பாரத தேசத்தையும் விட்டுப் பிரிந்து விண்ணுலகெய்தினார். அதுகாலை தம் தென்னாட்டுப் பிரயாணத்தில் கோயம்புத்தூரில் தாமதித்திருந்த காந்தியடிகளார் அச் செய்தியைக் கேள்வியுற்று அகங் குழைந்து அன்னபூர்ணா தேவியின் கணவனுருக்கு எழுதிய கடிதத்தை இதன் கீழ்க் கொடுப்பதோடு இதை முடிக்கின்றோம்.

## மகாத்மாஜியவர்கள், பாபிநீடு அவர்களுக்கு எழுதிய கடிதம்

எனது பிரியமான நண்பரே!

இந்த விசனகரமான செய்தியைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. அதற்கு முன் தினத்திலேயே அவ்வம்மைக்கு எப்படியிருக்கிறதென்று தேச பக்தருக்கு எழுதினேன். அவர் எப்பொழுதும்போல் அசௌக்கியமா யிருக்கிறதென்றே எனக்குத் தெரிவித்தார். அந்நிலையில் இத் தந்தியைக் கண்டு நான் திடுக்கிட்டேன்.

உங்களுக்குப் பிரியமான மனைவி போனாரென்றால், எனக்கு அதிலும் பிரியமான புத்திரி போனார்.

நீங்கள் ஆழ்ந்த அன்போடு நேசித்த அன்னபூர்ணா மரணமடையவில்லை யென்று நீங்களும் என்னைப்போல் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அவ் வம்மை பூதவுடம்புடன் நின்று நமக்கு உற்சாகமளிக்க மாட்டார் எனினும், அவரது அழிவற்ற ஆத்மாவினாலேயே முன்னிலும் அதிக எச்சரிக்கையுடன் நமது கடமைகளை நினைவுறவேண்டும். நீங்கள் அவ் வம்மையின் வழிகளைக் கைப்பற்றி அவருக்குள்ள பரிசுத்தமான கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்களென்று நம்பிக்கை கொள்ளுகிறேன்.

கோயம்புத்தூர், 19—10—27.

தங்கள் உண்மையுள்ள,
எம். கே. காந்தி.


வந்தேமாதரம்.





# அழகும் ஆரோக்கியமும்.

திருவாளர். வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.



### அழகின் பயன்

கடவுள் மனிதருக்குக் கொடுக்கக் கூடிய மிக மிகப் பெரியனவும் மிக மிக உயர்ந்தனவுமான கொடைகள் இரண்டு என்றும், அவற்றுள் முதற் கொடை அகன்ற அறிவும், இரண்டாங் கொடை அமைந்த அழகும் என்றும் கிரீஸ் தேயத்துத் தத்துவ ஞானியாகிய பிளேற்றோ என்பவர் நினைத்தனர். அவர் இக் கொடைகளைச் செல்வத்தினும் ஜாதியினும பலத்தினும் சிறந்ததென்று கருதினர். அப் பழைய தத்துவ ஞானிக்கு மாறாகச் சிலர் ஆரோக்கியத்தை எமக்கு நல்குக என்று கூறுவர். ஆனால், உண்மையான அழகையுடைய அதிர்ஷ்டசாலிகள் ஆரோக்கியத்தையும் அவசியம் அடைந்திருக்க வேண்டும். ஏனெனில், அழகு இல்லாமல் ஆரோக்கியம் இருப்பதை நாம் அடிக்கடி கண்டபோதிலும் ஆரோக்கியம் இல்லாமல் அழகு இருக்கமாட்டாது. உலகப் பெருமைகளை யெல்லாம் தமது தாள்களால் மிதித்துத் தள்ளும் துறவிகளும் அழகை அலட்சியம் செய்யமாட்டார்கள். சிருஷ்டி கர்த்தர்-அழகைத் தமது உருவாகக் கொண்ட கடவுள், என்பதனை அவரது வேலைகளெல்லாம் காட்டுகின்றன. பிரகிருதியை ஒரு தரம் கவனித்துப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும். மின்னுகின்ற இறகுகளையுடைய கிளிகளும், பிரகாசமுள்ள தோகைகளையுடைய மயில்களும், திவ்வியமான சிறகுகளையுடைய வண்ணாத்திப் பூச்சிகளும், நிறத்தாலும் வடிவாலும் ஒன்றையொன்று இகழா நின்ற பல வகை மலர்களும் என்ன அழகா யிருக்கின்றன! அழகிய இப் பொருள்களுக்

டெல்லாம் மேலாக மனித சரீரம் எவ்வளவு பூரணமாக அமைந்திருக்கின்றது. நம் உயர்ந்த பொருள்களை விட்டு உலகத்தின் சாதாரண காரியங்களிலிருந்து அழகினது பெருமையை ஆலோசிப்போம். இவற்றில் அஃது உயர்ந்த மதிப்புள்ள அநேக இலாபங்களையுடையதா யிருக்கிறது. நமது வாழ்க்கைகளின் நிலைமைகளை உண்டு பண்ணுவதில் ஒழுக்கத்திற்குப் பின்னர் அழகு ஒரு முக்கிய கருவியா யிருக்கிறது. ஒழுக்கத்தை அறிவதற்கு வெகு காலத்திற்கு முன்னர் முகத்தின் வசீகரத்தால் பெரும்பாலும் பழக்கங்கள் செய்யப்படுகின்றன. இப் பழக்கங்களில் நட்புக்கள் முதிர்கின்றன. இராமாயணக் கதையில் சூர்ப்பணகை ஸ்ரீ இராமரைச் சந்தித்த காலத்தில் கூறிய "எனது முக அழகைப் பாரும்," "எனது சரீரப் பொலிவைப் பாரும்" என்ற வார்த்தைகள் அற்பமான வார்த்தைகள் அல்ல. அவள் விவாகத்தைப் பற்றி மாத்திரம் நினைத்துக்கொண் டிருந்தாள் என்பதிற் சந்தேகம் இல்லை. ஆனால் விவாக சம்பந்தமாக அழகினால் ஏற்படும் இலாபங்களே யல்லாது வாழ்க்கையாகிய போரில் போர் செய்யுங் காலையில் அழகிய தோற்றங்கள் அடிக்கடி அதிக மதிப்பைத் தருகின்றன. உத்தியோகங்களுக்கும் வேலைகளுக்கும் வருகிற மனிதர்களில் பெரும்பாலும் வசீகரத் தோற்றமில்லாமல் வேலைத் திறமை மாத்திரமுள்ளவரை விட்டு வசீகரமும் புத்திக் கூர்மையுமுள்ள முகங்களையுடையவரைத் தெரிந்தெடுக்கக் காண்கின்றோம். பல வகைத் தொழில்களிலும் புருஷர்களும் பெண்களும் அவரவர்களது அதிர்ஷ்டங்களில் அவர்களது முகங்கள் அதிக உதவி செய்கின்றன என்பதைக் காண்கிறார்கள். அழகானது நன்மைக்காகவும் தீமைக்காகவும், ஒரு பலத்த செல்வாக்கைக் கொடுக்கா நின்ற ஒரு தங்கச் செங்கோல் என்று சொல்லப்பட் டிருக்கின்றது. அழகு, ஊழ்களை விதித்திருக்கின்றது; ஜாதிகளை ஆண்டிருக்கின்றது; இராஜ்யங்களைக் கீழ்ப்படுத்தி யிருக்கின்றது.

## அழகின் பாகுபாடு

பூரண அழகு, சித்திரக்காரனுடைய எழுதுகோலாலும், படம் வரைபவனுடைய குச்சாலும், கல் தச்சனுடைய உளியாலும் வர்



ணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அப் பூரண அழகைக், கடவுள் அவரது மக்களாகிய மனிதர்களுக்குக் கொடுத்தல் மிக அருமை.

அழகு "மனித அழகு" என்றும் "சாமுத்திரிக அழகு" என்றும் இருவகைப்படும். மனித அழகு என்பது ஒரு மனித சரீரத்தினுடையவும் முகத்தினுடையவும் அழகிய பாகங்களின் சேர்க்கை. சாமுத்திரிக அழகு என்பது பல மனிதர்களிடமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அழகிய பாகங்களின் சேர்க்கை. இச் செயற்கையெவையெனில், சித்திரத் தொழிலில் சிறந்தவை என்று எப்பொழுதும் மதிக்கப்படுகிற கிரீக்கு ஜாதியாரின் தேவர்களுடையவும் தேவிகளுடையவும் மிக மிக அழகுள்ள ஸ்திரீகளுடையவும் சரீரங்களினின்றும் முகங்களினின்றும் தெரிந்தெடுக்கப்பட்ட அழகிய பாகங்களைச் சேர்த்துச் செய்யப்பட்டுள்ளவை.

அழகாவது யாது? என வினவினாலோ, அதன் சுருக்கமான நல்ல விவரணம் "எல்லாம் ஒத்திருத்தல்" என்பதே. மனித அழகில் முகத்தினது பல அவயவங்களுடைய ரூபங்களின் அழகும், குறிப்பிட்ட சில ஸ்திரமான பொருள்களுடைய சம்பந்தங்களால் ஏற்படும் ஒழுக்கங்களின் அழகும், விரைவில் உண்டாகி விரைவில் நீங்கும் சில உணர்ச்சிகளின் அழகும் சேர்ந்திருப்பதாக எப்பொழுதும் கருதப்படுகிறது. அழகு பெரும்பாலும் அர்த்த வதனத்தையும், முக்கியமாக நெற்றியினுடைய ஒழுங்கையும், மூக்கினுடைய ஒழுங்கையும், அழகை அதிகப்படுத்துகிற அல்லது குறைக்கிற முகக் குழிகளது ஆழப் பெருக்கத்தையும் ஆழச் சுருக்கத்தையும் பொறுத்திருக்கின்றது. எவ்வளவுக் கெவ்வளவு அர்த்த வதனம் நேராக இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு முகம் கம்பீரமாகவும் மேன்மை வாய்ந்ததாகவும் தோற்றுகிறது.

"அழகிற்கும்," "நேர்த்திக்கும்" அதிக வேற்றுமையுண்டு. அழகாவது, நாம் மேலே சொன்னபடி சரீரத்தினது ஒவ்வொரு உறுப்பும் அததற்குரிய உண்மையான அளவில் அமைந்திருத்தலும் முற்றும் ஒத்திருத்தலுமாம். நேர்த்தியாவது, பார்ப்பவரது கவனத்தைக் கவரத்தக்கதும், கண்களை மயக்கத்தக்கதும், இன்ன

தென்று சொல்ல முடியாததுமான ஒருவிதத் தன்மை. ஒரு படத்தின் குணம் குற்றங்களை ஆராயும் ஒருவனுடைய அபிப்பிராயத்தில் அது சில குறைகளையுடையதா யிருப்பினும், அதனைப் பார்ப்பவரெல்லாம் துதிக்கும்படிக்கும் ஆச்சரியப் படும்படிக்கும் அமைந்திருப்பதுபோல, முகமும் குணம் குற்றங்களை ஆராயும் ஒருவனுடைய அபிப்பிராயத்தில் சில குறைகளைக்கொண்டிருப்பினும் அதனைப் பார்ப்பவரால் இது நேர்த்தியான முகமென்று சொல்லப்படுகிறது. உதாரணமாக ஒரு மா நிறமும், மின்னுகின்ற கண்களும், நல்ல வடிவில் அமைந்துள்ள மூக்கும் சேர்ந்து, மற்றைய உறுப்புகள் சாமுத்திரிகா லட்சணத்திற்குச் சற்று எறக்தாழ இருப்பினும், அது ஓர் நேர்த்தியான முகமாகும். அன்றியும், இன்பத்தைக் கொடுக்கக்கூடிய ஸ்திரமான ஒரு செய்கையால் ஒரு சாதாரண முகம் ஒரு நேர்த்தியான முகமாகத் தோன்றும். உண்மையில், அநேக முகங்கள் புன் சிரிப்போடு பொருந்தி யிருப்பதால் நேர்த்தியாகத் தோன்றுகின்றன. வேறு அநேக முகங்கள் முக்கியமாகத் தலை மயிரின் அழகாலும், அதனை முகத்திற்குப் பொருத்தமாகக் கட்டி யிருக்கும் செய்கையாலும் நேர்த்தியாகத் தோன்றுகின்றன.

## பெண் மகள் அழகின் மூன்று பருவங்கள்

பெண் மகள் அழகில் மூன்று வெவ்வேறு பருவங்கள் உள்ளன. அஃது ஒவ்வொன்றும் அவள் வாழ் நாளில் முக்கிய பருவமாகும். முதற் பருவம், ஜனன நாள் முதல் ருது நாள் வரையுள்ள காலம். இப் பருவம் மலர்வதற்காகத் திரட்சியடைந்து கொண்டிருக்கா நின்ற ஒரு பூவைப்போல, மலர்வதற்காக முகமும் மற்றைய உறுப்புக்களும் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கா நின்ற காலம். இரண்டாம் பருவம், ருது நாள் முதல் நாற்பது வயதுவரையுள்ள காலம். இப் பருவம் தொடங்குங்கால் அவளுடைய கழுத்தும் மார்பும் பெரியனவாகின்றன. அவளுடைய குரல் வேற்றுமைப் படுகின்றது. அவளுடைய கண்கள் அதிகப் பிரகாசத்தை அடைகின்றன. அவளுடைய அழகு அதிக விளக்கத்தையும் வசீகரத்தை



யும் பெறுகின்றது. மூன்றாம்பருவம், நாற்பது வயதுமுதல் அறுபது வயதுவரையுள்ள காலம். இப் பருவத்தில் முகமும் சரீரமும் புஷ்டித்து விளங்குகின்றன.

சரீரத்தில் உளதாகும் கொழுப்பு விரைவில் கரையாததால் அது தோலின் கீழுள்ள தசை யறைகளிலும் சரீரத்தின் மற்றைய பாகங்களிலும் அதிகமாகச் சேர்கின்றது. இது தோலின் மேல் தோன்றத் தொடங்கியிருக்கிற சுருங்கல்களைப் போக்கி ஒரு நல்ல தோற்றத்தையும் இளமைப் பருவத்தின் அழகையும் திரும்ப உண்டுபண்ணுகின்றது. இப் பருவத்தை இளமை திரும்புகிற பருவம் என்று சொல்லுவர் பெரியோர். இப் பருவம் நீங்கிய பின்னர் அழகு ஸ்திரமாக நீங்கிவிட்டதென்று சொல்லலாம்.

சில பெண்கள் மற்றைய பெண்களினும் அதிகக் காலம் தமது அழகைக்கொண்டிருக்கிறார்கள். தற்கால நூலாசிரியர் ஒருவர், “பெண்கள் தமது சரீர அழகை ஐம்பது வயதுவரை கொண்டிருப்பார்கள்” என்று கூறுகிறார். நாற்பது அல்லது முப்பத்தைந்து வயதிற்கு முன்னர் அழகானது தனது பூரணத்துவத்தை அடைவதில்லை. ஆஸ்பாஸியா என்னும் ஐரோப்பிய மாது பெரிக்கின்ஸ் என்பவரை விவாஹம் செய்தபோது அவளுக்கு வயது முப்பத்தாறு. அதற்கு முப்பது வருஷங்களுக்குப் பின்னரும் அவள் மிக அழகுடையவளா யிருந்திருக்கிறாள். டேயின்டிபாய்கட்டியாஸ் என்பவள் 2-வது ஹென்றி அரசனை விவாஹம் செய்தபோது அவளுக்கு வயது முப்பத்தாறு. அவ் வரசனுக்கு அப்போது வயது பதினெட்டு. அப்படி யிருந்தும் அவள் மீது அவன் கொண்டிருந்த அன்பு ஒருபோதும் குறையவே யில்லை. ஆஷ்டிரியா தேயத்து ஆனி என்னும் பெண், ஐரோப்பாக் கண்டத்தில் மிக மிக அழகி என்று சொல்லப்பட்ட பொழுது முப்பத்தெட்டு வயதுடையவள். மாடம் டிமெய்ன்டேனன் என்பவள் லூயிஸ் என்பவனை மணந்த போது நாற்பத்து மூன்று வயதுடையவள். ருஷிய தேயத்துக் காதரைன் என்னும் அரசி, இராஜாங்கத்தைக் கைக்கொண்ட காலையில்

அவளுக்கு வயது முப்பத்து மூன்று. அவள் அதன் பின்னர் முப்பத்து மூன்று வருஷங்கள் அரசு புரிந்திருக்கிறாள். மிடில்மார் என்பவள் நாற்பத்தைந்து வயதில் மிக மிக அழகுடையவளா யிருந்தாள். மாடம் ரிக்காமியர் முப்பத்தைந்து வயதிற்கும், நாற்பத்தைந்து வயதிற்கும் மத்தியில் மிக மிக அழகிய பெண்ணாயிருந்தாள்.

## அழகு ஈட்டப்படத் தக்கது

ஆன்ம தத்துவங்களையும், மனோ தத்துவங்களையும், சரீர தத்துவங்களையும் உள்ளூரக் கற்றுணர்ந்துள்ள எவரும், அழகானது ஈட்டப்படத் தக்கதொன்றென்பதை மறுக்க மாட்டார். "அழகு" என்னும் சொல்லை அதன் அகன்ற அர்த்தத்தில் யான் உபயோகிக்கிறேன். சித்திரம் வரைவோன் தனது சித்திரத்திற் காட்டும் பூரண அழகை யான் குறிக்கவில்லை. சரீர உறுப்புக்களின் அமைப்பை (உதாரணமாக-மூக்கின் வடிவம், வாயின் அகலம், உதடுகளின் கனம், கண்களின் அளவு, கண்களின் நிறம், காதுகளின் கட்டு, நாடியின் வடிவு முதலியவற்றை) ஒருபோதும் மாற்ற முடியாது. அவை எக் காலத்தும் ஒரே தன்மையாக இருக்குமாறு கடவுளாற் செய்யப்பட்ட சாதுர்யமான வேலைப்பாட்டைக் கொண்டுள்ளன. என்றாலும், அழகு, அதாவது சரீரத் தோற்றத்தை அழகு படுத்தல், ஈட்டப்படத் தக்கதொன்றென்னும் உண்மை, மறுக்க முடியாதது. மனத்தின் பல சக்திகளையும் திருத்துவதினாலும் சரியாகச் செலுத்துவதினாலும் முகத்தின வடிவத்தையும் தோற்றத்தையும் அழகாக்கக் கூடும். ஆரோக்கியத்திற்குரிய முக்கிய விதிகளை அநுசரித்து நடப்பதனாலும், சாப்பாட்டின் சம்பந்தமான மிக மிகச் சிறிய விதிகளையும் சரியாகக் கவனிப்பதாலும் முகத்தையும் அதன் நிறத்தையும் சீர்திருத்தல் கூடும். ஆரோக்கிய விதிகளையும் ஆகார விதிகளையும் பின்னர் விரிவாகக் கூற முயலுகிறேன்.

(தொடரும்)



# இந்திய ஊழியர் சங்கம்.

(Servants of India Society)

198524

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி"

சக்கிரவர்த்தினி இயற்கை அம்மையார் உலகத்தை ஆண்டு வருகிறார். அவனியிலுள்ள அனைத்தும் அவரது ஆக்ஞையின் படியும் சட்ட நியதியின் படியுமே சற்றும் தவறாது நடக்கிறது. அம்மையின் சக்ராதிபத்தியத்தின் கீழ் அவரவர் முயற்சிக்குத் தக்க கூலி உண்டு; வேலைக்கு ஏற்ற வெற்றி உண்டு. சூரியனது வெப்பத்தையும் சந்திரனது சீதளத்தையும் சேகரித்துப் பலவிதமாய் உபயோகிக்க மனிதர் பல வழிகள் கண்டுபிடித்து விட்டார்கள். ஓடும் நீரினால் மின்சாரத்தை உண்டாக்கி மக்கள் முன்னேற்றத்திற்கு உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். மின்சாரத்தைப் பல வகைகளாய் விவசாயத்தில் உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். மின்சார மனிதனைச் செயற்கையில் உண்டாக்கி யிருக்கிறார்கள். ஆண் சம்சர்க்கமின்றி மின்சாரத்தின் மூலம் குழந்தைகளைக்கூட உற்பத்தி செய்யவும் மார்க்கம் கண்டுபிடித்து விட்டார்கள். பஞ்ச பூதங்களையும் நானா வகைகளில் அறிவின் சக்தியால் உபயோகிக்க முன்வந்து விட்டார்கள். தாவர உலகத்தில் பெரும் பெரும் மாற்றங்கள் உண்டாக்க வழி தேடிக்கொண் டிருக்கிறார்கள்.

## மானத சக்தி

இந் நவீன ஆராய்ச்சிகளால் உபயோகங்கள் இவ்வாறிருக்கட்டும். நமது பண்டைத் தபோதனர்கள் மானத சக்தியில் மிகா வல்லவர்களா யிருந்தார்கள். அவர்கள் நினைக்க [illegible]திற். காரி

யங்கள் நடந்து முற்றுப் பெறும்படியாக அவர்கள் அவ்வளவு தூரம் தங்கள் மானத சக்தியையும் ஆத்மீக சக்தியையும் அபிவிருத்தி செய்திருந்தார்கள். மானத சக்தியால் உன்னத பதவி அடைவது மானிடர் யாவருக்கும் எளிதன்று.

## மானிட சக்தி

அறிவற்றோரும், அறிவுற்றோரும், கற்றோரும், மற்றோரும், சிறியோரும், பெரியோரும், ஏழைகளும், பணக்காரரும் யாவரும் ஒன்று சேர்ந்து காரியங்களைச் சாதித்துக்கொள்ள இலகுவான சாதனம் நெடுங்காலத்திற்கு முன்னே கண்டு பிடித்திருப்பினும், இப்பொழுதே அது தினந்தோறும் மிகு வேகத்தில் அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கிறது. உலகத்தில் தற்காலத்தில் மானிட சக்திகளை ஒன்றுபடுத்துவதற்கும் மானிட முயற்சிகளுக்கும் கற்பகமாயிருக்கும் சாதனம் சங்கங்களே.

## இந்திய தேசீய மகாசபை (காங்கிரஸ்)

இந்தியா அநேக முன்னேற்றம் அடையும் பொருட்டு நமது தலைவர்கள் தேசீய மகாசபையை ஸ்தாபித்திருக்கிறார்கள். அது இந்தியர்களுக்கு எவ்வளவோ தேசீய விழிப்பை உண்டாக்கியிருக்கிறது. இந்த மாபெரும் ஸ்தாபனத்தின் ஆவேசத்தின் மூலமாகவே நமது தேசத்தில் சங்கங்கள் வேரூன்றிப் பற்பல வகை வகையான பல பல சங்கங்களும், சபைகளும், இயக்கங்களும் உண்டாகியிருக்கின்றன.

## இந்திய ஊழியர் சங்கம்

பம்பாய் உயர்தர நீதிமன்றம் நியாயதிபதி—அறிஞர் ரானடே அவர்களின் பிரதம சீடர்—பூனா பெர்கூசன் காலேஜ் (Ferguson College)ல் பேராசிரியர்—இந்தியாவின் இராஜீய பொருளாதார நிலைமைகளை நன்கு அறிந்த பெரும் உத்தம தேசாபிமானி ஆகிய காலஞ்சென்ற ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகலே அவர்களுடைய மஹா பெரும் தேசீய சாஸ்வத ஸ்தாபனத்தின் மகத்துவத்தை இனி மேல்தான் விவரிக்கப் போகிறோம். காங்கிரஸின் சில வருட வேலைகளால் இந்து, முஸ்லிம், பார்ஸி, கிறிஸ்தவ, சீக்கிய சகோ





கோபால கிருஷ்ண கோகலே,
ஸ்தாபகர், இந்திய ஊழியர் சங்கம், பூனா.

தார்களுக் கிடையில் பொதுவாக ஒருவித தேசீய ஒற்றுமை வளர்ந்து கொண்டு வந்தது. உண்மையாகச் சொல்லுமிடத்து விவரமாய்க் கற்றறிந்த ஜனங்களிடை தேசப் பொதுநலத் தொண்டின் உணர்ச்சி, மெல்லென வளர்ந்து கொண்டு வந்தது. ஆண்டுக் கொரு முறை காங்கிரஸ் ஒரு குறித்த இடத்திற் கூடுவதும், பற்பல நற் றீர்மானங்களைச் செய்வதும் ஏதோ அவைகளில் சிலவற்றை நிறைவேற்றுவதும் அக்கால வழக்கமாயிருந்தது. அக் காலத்திய நடவடிக்கைகளை விளக்குவதற்கு அக் காலத்திய சமாச்சாரப் பத்திரிகைகளே இப்பொழுது சாட்சிகளாக விளங்குகின்றன. தேசத்தில் தீவிரமாயும் சரியானபடியாயும் அபிவிருத்தி வேலை நடப்பதற்கு என்ன செய்யலாமென அநேக அறிஞர்கள் ஆழ்ந்து ஆழ்ந்து அநேக காலமாய் அடிக்கடி யோசனை செய்து வந்தார்கள். தேச ஊழியர்களைப் பழக்குவதற்கு அயல் நாடுகளிலிருந்து வரும் கிறிஸ்தவ மதப் பிரச்சாரர்கள் போன்று ஆற்றலும், ஆவேசமும் உண்டாக்குவதற்கு ஒரு பிரத்தியேகமான நல்ல ஸ்தாபனம் வேண்டுமென்று கண்டார்கள். பல ஆண்டுகளாக யோசித்ததின் பயனாக அறிஞர் கோபாலகிருஷ்ண கோகலே யவர்களால் புனா நகரத்தில் 1905-ம் வருஷம் ஜூன்மீ 12உ யன்று இந்தியாவிற்கு என்றும் தொண்டு செய்வதையே அடிப்படையாகக் கொண்ட இந்திய ஊழியர் சங்கம் (Servants of India Society) ஏற்படுத்தப்பட்டது. கோகுலர் கிறிஸ்தவ, அதுவும் கத்தோலிக் பாதிரிகளின் சபை நிர்மாணத்தை அதிகமாகக் கவனித்து வந்தது மன்றி, பாதிரிகள் எவ்வாறு கிறிஸ்தவ மதத்தைப் போதிக்கிறார்களோ அதைப்போலவே தேசீய விஷயமாகவும் சமூக சீர்திருத்த விஷயமாகவும் நைந்து அடியில் கிடக்கும் இந்தியாவிற்குத் தங்கள் முழு நேரத்தையுமே தொண்டில் அர்ப்பணம் செய்வதற்குத் தகுதி வாய்ந்த சாமர்த்தியமானவர்களை, தேவை தேவையென்று அவரது ஆசிரிய அனுபவத்தில் அவர் தெரிந்து கொண்டார். இக்னேஷியஸ் (St. Ignatius of Loyola) என்பவர் பற்பல இடங்களில் இயேசு சபை (Society of Jesus) ஏற்படுத்தி அம் மதத்திற்கு அரிய தொண்டு செய்திருக்கிறார். அவர் ஆதியில் ஸ்தாபித்த ஏசு சபையே இன்று உலகத்தில் பல்வேறு இடங்களில் விரிந்து நின்று கத்தோலிக் கிறிஸ்தவ மதம் உலகத்தில் பெருகுவதற்குக் காரணமாயிருக்கிறது. சந் ஜேவியர் (St. Xavier) இந்

தியாவில் பற்பல ஏசு சபைகளை ஸ்தாபித்துக் கிறிஸ்தவ மதத்தை இங்கு அதிகமாகப் பரப்பி யிருக்கிறார்.

இந்திய ஊழிய சபையின் அங்கத்தினர்கள், உலகத்தில் தங்களுடைய வேலைகளை யெல்லாம் விட்டு விட்டுச் சொந்த வருமானங்களைக் கூடக் கருதாது இருக்க வேண்டு மென்று திட்டம் செய்தார் கோகுலர். ஏசு சபை அங்கத்தினர்போல் சொந்த ஆஸ்தியை இந்த அங்கத்தினர்கள் கொடுக்க வேண்டியதில்லை எல்லா ஜாதியினர்களும் எல்லா மதத்தினர்களும் இந்திய ஊழியர் சங்கத்திற் சேரலாம். ஹிந்துக்களும், முகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும், பார்ஸிகளும் அதில் அங்கத்தினரா யிருக்கிறார்கள். அங்கு மத விஷயத்தில் எவ்வித கட்டாயமில்லை. தனக் கிஷ்டமான மதத்தை ஒவ்வொரு அங்கத்தினரும் பின்பற்றலாம். இச் சங்கம் மதத்தை அடிப்படையாகக் கொள்ளாது தேச முன்னேற்றத்தையே முக்கியமாகக் கொண்டது. சங்கத்தில் ஜாதி வித்தியாசங்களையும் மத வேற்றுமைகளையும் கவனிக்காதபடி சங்கத்தின் அங்கத்தினர்களுக்குள் அ வ் வ ள வு ஆ ர ம் சகோதர உணர்ச்சி பரவி யிருக்கிறது. நற் பயிற்சியும் நன்னடத்தையும் நல்லொழுக்கமும் அடையும் பொருட்டு சங்கத்திற் பழகும் ஒவ்வொரு அங்கத்தினரும் முதல் அங்கத்தினரது நேரான மேற் பார்வையிலிருக்கிறார்கள். பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் 5 வருடகாலத்திற் பிரசங்கங்கள் செய்வதற்கு அ வ ர் க ள் அனுமதிக்கப்படுவதில்லை. பத்திரிகைகளுக்கு எழுத வேண்டுமானாலும், முதல் மெம்பருடைய அங்கீகாரத்திற்கு அனுப்பவேண்டும்.

## இச் சங்கத்தின் நோக்கங்கள்

(1) வாக்காலும் செய்கையாலும் உதாரணங்களாலும் இத் தேச மக்களிடையில் தேச பக்தி ஆழ்ந்து பதியும்படி செய்து தன்னலமற்று நாட்டு நன்மைக்காகத் தியாகம் செய்து எல்லோரும் உழைக்கும்படி தூண்டுவதற்காகவும்

(2) இத் தேசத்தைப் பற்றிய சகல விவகாரங்களையும் நன்கு அறிந்து பொது விஷயங்களைப் பற்றிய அறிவைப் பொது ஜனங்களுக்குப் புகட்டிப் பொதுஜன சமூக வாழ்க்கையை விருத்தி செய்து



ராஜீய விஷயங்களில் தேச நன்மைக்கான முயற்சிகள் செய்வதற்காகவும்

(3) இந்நாட்டில் வாழும் எல்லா வகுப்பு ஜனங்களுக்குள் பரஸ்பர நல்லெண்ணத்தையும் அன்னியோன்னிய ஐக்கியத்தையும் விருத்தி செய்து எல்லோரும் ஒற்றுமையா யிருக்கும்படி செய்வதற் காகவும்

(4) கல்வி அபிவிருத்தி செய்வதற்காகவும், முக்கியமாகப் பெண் கல்வி, கைத்தொழிற் கல்வி, சாஸ்திரீயக் கல்வி, தாழ்ந்த வகுப்பாருக்குக் கல்வி ஆகிய இவைகளைக் கற்பித்து எல்லோரையும் முன்னேற்றமடையச் செய்வதற்காகவும்

(5) இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தி அடையும்படி உதவி செய்வதற்காகவும்

(6) தாழ்த்தப்பட்ட ஜாதியார்களை உயர்த்துவதற்காகவும்

மேற்காட்டிய 6 நோக்கங்களுக்காகவும் மற்றும் இந்திய சட்டங்களுக்கு அடங்கிய எல்லா வழிகளிலும் முன்னேறுவதற்கு வேண்டிய சகல காரியங்களைச் செய்யும்படியான மனிதர்களைப் பழக்குவதற்காகவே இச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

## சங்கத்தின் விதிகள்.

(1). "இந்திய ஊழியர் சங்கம்" என்று இதற்குப் பெயர்.

(2) இத் தேசத்தின் நன்மைக்காகவே உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்து தேசத் தொண்டு புரியக் கூடிய தேசீய சன்னியாசிகளைப் பழக்கி நியாயமான சகல வழிகளிலும் இந்தியர்களின் உண்மையான நன்மைகளுக்காகப் பாடுபடுவதே இச் சங்கத்தின் கருத்து.

(3) (அ) ஒரு பிரதம அங்கத்தினர். (ஆ) ஒரு உப அக்ராசனர். (இ) சாதாரண அங்கத்தினர்கள். (ஈ) பழகும் அங்கத்தினர்கள் ஆகிய இவர்கள் இச்சங்கத்தில் உண்டு.

(4) முதல் அல்லது முக்கிய அங்கத்தினரே சங்கத்தின் தலைவரா யிருப்பார்.

(5) ஒவ்வொரு அங்கத்தினரும் முதலில் 5 வருடங்கள் வேலை கற்றுக்கொள்ள வேண்டும். பயிற்சி பெற்றுக்கொண் டிருக்கும் பொழுது "பழகும் அங்கத்தினர்" என்று பெயர். 5 ஆண்டுகள் பயின்ற பிறகே சங்கத்தின் "சாதாரண மெம்ப"ராகச் சேர்த்துக் கொள்ளப் படும்.

## ஏழு சத்தியங்கள்

அங்கத்தினராய்ச் சேர்த்துக் கொள்ளப்படும் பொழுது ஒவ்வொரு அங்கத்தினரும் அடியிற்கண்ட ஏழு சத்தியங்கள் செய்து கொடுக்கவேண்டும்:—

(1) தேசத்தைப்பற்றிய எண்ணமே என் மனத்தில் முக்கியமாய்க் குடிகொண்டிருக்கும்; தேசத் தொண்டில் என்னிடத்தில் உள்ள அனைத்தையும் அர்ப்பணம் செய்வேன்.

(2) தேச சேவையில் ஏதாவது சுய நலத்தை எப்பொழுதும் நாடமாட்டேன்.

(3) இந்தியர்கள் அனைவரையும் எனது சகோதரர்கள்போல் நினைத்து, ஜாதி மத பேதம் இல்லாமற் சகல இந்தியருடைய அபிவிருத்திக்காகப் பாடுபடுவேன்.


(4) என்னுடைய சம்ரட்சணைக்காகவும் எனக்குக் குடும்பமிருந்தால் என் குடும்ப சம்ரட்சணைக்காகவும் சங்கத்தார் எவ்வளவு கொடுக்கிறார்களோ அதைக்கொண்டு திருப்தியோடு வேலை செய்வேன். என் சொந்தத்திற்காகச் சம்பாதிக்கச் சிறிதும் முயலமாட்டேன்.

(5) ஆத்ம சரீர சுத்தியுடன் வாழ்வேன்.

(6) எவரோடும் பகைத்துச் சண்டையிட்டுக்கொள்ள மாட்டேன்.

(7) சங்கத்தின் நோக்கங்களை எப்பொழுதும் மறவாது ஞாபகத்தில் இறுத்தி, அவைகளை நிறைவேற்றுவதற்காக என்னால் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாது செய்தே தீருவேன். சங்கத்தின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் விரோதமான எந்தக் காரியத்திலும் எப்பொழுதும் பிரவேசிக்க மாட்டேன்.





ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்,
மாஜீ அக்ராசனர், இந்திய ஊழியர் சங்கம், புனா.

## அங்கத்தினருக்குள் பிரிவுகள்

1. முக்கிய அங்கத்தினர். 2. சாதாரண அங்கத்தினர்கள். 3. பயிற்சிபெறும் அங்கத்தினர்கள் ஆகிய இப் பிரிவுகளைத் தவிர்த்து இன்னும் 4. சாஸ்வத உதவிகள் (Permanent Assistants) கீழ்தர உதவிகள் (Attaches) சகாக்கள் (Associates) என்றும் வேறு சிலர் இருக்கிறார்கள். சாஸ்வத உதவிகளுக்குள் அவரவர் கல்விக்கேற்றபடி முதல்தரம் என்றும் இரண்டாம்தரம் (Junior) என்றும் இரண்டு பிரிவுகளுண்டு. சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு உதவி செய்கிறபடியால் அவர்களுக்குச் சாஸ்வத உதவிகள் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. தலைவர் சொல்லுக்கு வேலை செய்கிறவர்களுக்கு அட்டார்சிகளென்று பெயர் சகாக்கள் (Associates) இவர்கள் மற்றவர்களைப்போல் ஆயுசு முழுவதும் சங்கத்தின் வேலைகளைச் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையில்லை. எவ்வளவு நேரம் கூடுமோ அவ்வளவு நேரம் செய்யலாம்.

## அங்கத்தினர்களுக்கு உபகாரச் சம்பளங்கள்

1. பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் மாதம் 1-க்கு ரூ 65 வீதம் முதல் இரண்டு வருடங்களுக்கும், அப்பால் மாதம் 1-க்கு ரூ 75 வீதம் மற்ற மூன்று வருடங்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

2. ஒவ்வொரு சாதாரண அங்கத்தினருக்கும் மாதம் 1-க்கு ரூ 90 வீதம் முதல் 5 வருடங்களுக்கும், பிறகு மாதம் 1-க்கு ரூ 110 வீதம் அடுத்த 5 வருடங்களுக்கும், அப்பால் மாதம் 1-க்கு ரூ 125 வீதம் எப்பொழுதும் கொடுக்கப்படும்.

3. பம்பாயிலிருந்தால் மாதம் 1-க்கு ரூ 15, சங்கக் கட்டிடங்களில் ஜாகைகள் இல்லாத மற்ற இடங்களாயிருந்தால் ரூ 10 அல்லது ஏற்பட்ட வாடகையையோ அதற்குக் குறைவாகவோ வீட்டு வாடகைப் படி கொடுக்கப்படும்.

4. மாசம் 1-க்கு ரூ 50 முதல் 60 வரைக்கும் சாஸ்வத உதவிகளுக்குக் கொடுக்கப்படும்.

5. பரீட்சார்த்த நிலையிலுள்ள புதியவர்களுக்கு மாதம் 1-க்கு ரூ 50 வீதம் அவர்களுடைய பரீட்சை நிலைக்காலத்தில் கொடுக்கப்படும்.

6. பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் அங்கத்தினர் பம்பாய்க்கு அனுப்பப்பட்டால் அவர் சாதாரண அங்கத்தினர் ஆகும்வரையில் மாதம் 1-க்கு ரூ 15 பம்பாய்ப் படியாகச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

7. ஒரு அங்கத்தினர் கஷ்டமான வியாதிக்குள்ளாக வேண்டியிருந்தால் அவருக்கு ஏற்பட்ட வைத்தியச் செலவுகளை முற்றிலுமோ ஒரு பாகமோ பிரதம அங்கத்தினர் சிபார்சின் பேரில் கொடுக்கப்படும்.

8. பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிற அங்கத்தினருக்கு வருடத்திற்கு 2 மாதகால ஓய்வும், சாதாரண அங்கத்தினருக்கு வருடம் 1-க்கு ஒரு மாத ஓய்வும், மத்திய மாகாணத்திலும் பேராரிலும் இருக்கும் சாதாரண அங்கத்தினர்கள் மே மீ 1டையில் போவதாயிருந்தால் ஒரு மாதம் 10 நாட்கள் ஓய்வும், மற்ற அங்கத்தினர்களுக்கு 20 நாட்கள் ஓய்வும் கொடுக்கப்படும்.

9. சாதாரண அங்கத்தினர் ஆனபின் அவருடைய மரணத்திற்குப் பின் கொடுக்கும் பொருட்டுச் சங்கத்தின் தலைவர் பெயரால் ரூ 3000-க்கு ஷை அங்கத்தினருக்காக இன்சூர் செய்யப்படும். ஷை இன்சூரன்ஸ் கம்பெனியும் ஏற்றுக்கொள்ளாவிட்டால், சங்கத்தின் தலைவர் வேறு வழியில் அதற்கு ஏற்பாடு செய்வார்.

10. ஒரு அங்கத்தினரின் மரணத்திற்கு மேல் தலைவர் இன்ஷியூரன்ஸ் கம்பெனியிலிருந்து ஷை 3000 ரூபாயை காலஞ்சென்ற அங்கத்தினர் மரண சாசனத்தில் குறிப்பிட்டிருக்கும் நபருக்குக் கொடுப்பார். அப்பேற்பட்ட குறிப்பு ஒன்றும் காணப்படாவிடின், இறந்துபோன குடும்பத்தாரில் யாருக்குக் கொடுக்கலாமென்று தலைவரே தீர்மானிப்பார்.

## பலவகைத் தொண்டுகள்

இந்தச் சங்கம் இராஜீய விவகாரங்களில் மட்டும் உழைத்துக் கொண்டு வந்தபோதிலும், தேசாபிவிருத்திக்குரிய சகல வேலைகளையும் எல்லா வழிகளிலும் செய்கிறது.



## கிளைகள்

தலைமைச் சங்கம் புனாவிலிருந்தபோதிலும் 1. பம்பாய், 2. மதராஸ், 3. ஐக்கிய மாகாணங்கள், 4. மத்திய மாகாணங்கள் முதலிய இடங்களில் கிளைகளை ஏற்படுத்தி கள்ளிக்கோட்டை, மங்களூர், லக்னோ, லாகூர், கட்டாக் முதலிய மத்திய வேலை ஸ்தாபனங்களையும் கொண்டு வேலை செய்கிறது.

## ராஜீய விஷயம்

ஸ்ரீமான் ஜோஷி இந்திய சட்டசபை மெம்பராக அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஐக்கிய மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பண்டித ஹ்ரிதயநாத் குன்சுரு இந்திய சட்டசபையில் அங்கம் வகிக்கிறார். அயல் நாட்டு விஷயங்களில் கூடிய மட்டும் வேலை செய்திருக்கிறார்கள். கனம் தங்கிய ஸ்ரீமான V. ஸ்ரீநிவாச சாஸ்திரியார் கென்யா, தென்னாப்பிரிக்கா முதலிய தேசங்களுக்குச் சென்று அங்குக் குடியேறியிருக்கும் இந்திய மக்கள் துயரைத் தெரிந்து இந்தியத் தூது அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். அவர் தென்னாப்பிரிக்காவில் ஏஜண்டு ஜெனரல் உத்தியோகம் தாங்கி நின்று அங்கு வாழும் இந்திய மக்களுக்குத் தன்னாலானதைச் செய்திருக்கிறார்.

## கல்வி

ஜனங்களுக்கு ஆரம்பக் கல்வியைப் பற்றி நன்றாய் எடுத்துக் காட்டிப் பல ஆரம்பப் பாடசாலைகள் ஏற்படுத்துவதற்கு அங்கத்தினர்கள் காரணஸ்தர்களாயிருக்கிறார்கள். புனாவில் சேவா சதனம் முதலியவைகளின் மூலம் பல பெரிய பெண் பாடசாலைகளை வைத்து நடத்தி அவற்றின் மூலம் நூற்றுக் கணக்கான பெண்களுக்குக் கல்வி அபிவிருத்தி செய்கிறார்கள். ஷை சேவா சதனத்திற்கு ஸ்ரீமான் தேவதார் அவர்களே கௌரவ காரியதரிசியாக இருக்கிறார். தாழ்ந்த வகுப்பாருக்குள்ளும் காட்டு ஜாதியாருக்குள்ளும் கல்வி விருத்தியாக எவ்வளவோ உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இச் சங்கத்தின் அங்கத்தினர்களில் சிலர் சில [illegible] கலாசாலைகளி

லும் உயர்தரக் கலாசாலைகளிலும் சம்பந்தமுடையவர்களா யிருக்கிறார்கள்.

## கஷ்ட நிவாரண வேலைகள்

பிளேக் நோயைத் தடுப்பதற்கு புனா முதலிய இடங்களில் பிளேக் நிவாரணக் கமிட்டிகளை ஏற்படுத்தியதினால் ஆயிரக் கணக்கான ஜனங்கள் பிளேக் நோயிலிருந்து தப்புவிக்கப்பட் டிருக்கிறார்கள். சதும்பிரா என்ற இடத்தில் பயங்கரமான தீவிபத்து ஏற்பட்டதினால் எண்ணிறந்த கஷ்ட நஷ்டமடைந்த ஜனங்களுக்கு 5 வருஷம் சகாயம் செய்திருக்கிறார்கள். 1907-08-ம் வருஷ ஐக்கிய மாகாணத்திலும் 1911-12-ம் வருஷல் குஜராத்திலும் கைத்தியவாரிலும் 1913-ம் வருஷல் அகம்மதுநகரத்திலும் 1918-19-வருஷல் குஜராத்திலும் தக்காணத்திலும் 1920-வருஷல் ஒரிஸ்ஸாவிலும் உண்டான பஞ்சங்களில் ஆயிரக் கணக்கான ஜனங்களைக் காப்பாற்றி யிருக்கிறார்கள். சபவாதஜுர (இன்புளுயன்ஸா) நிவாரண வேலைக் கமிட்டி பம்பாயிலும் புனாவிலும் நன்கு நிர்மாணிக்கப்பட்டு நல்ல வேலை செய்திருக்கிறார்கள். 1921-வருஷ மலையாளத்தில் மாப்பிள்ளைக் கலகத்தால் எத்தனையோ இடங்கள் நாசமாக்கப்பட்டன. எத்தனையோ குடும்பங்கள் தவித்தன. இதன் பொருட்டாயும் மலையாளத்தில் நிவாரண வேலை ஆரம்பிக்கப்பட்டு, யௌவன கிறிஸ்தவ யுவர்கள் சங்கம் (Y. M. C. A ) புனா சேவா சாதனம் முதலிய பல ஸ்தாபனங்களின் மூலம் இந்தியா முற்றிலும் உதவிப் பொருள் வசூலித்ததில் ரூ 3,50,000 சேர்ந்தது. முதல் ஆறு மாதங்களிலும் 19 இடங்களி (Camps) லிருந்து கொண்டு எல்லா ஜாதியார்களிலும், சுமார் 27,000 பேர்களுக்கு உதவி செய்யப்பட்டது. பின்னிட்ட ஆறு மாதங்களிலும் சேதமடைந்த இடங்களில் ஆயிரக் கணக்கான மாப்பிள்ளைமார்களும் இந்துக்களும் ஆதரிக்கப் பட்டார்கள். மாப்பிள்ளைகள் கஷ்டகாலத்தில் ஸ்ரீமான் தேவதார் அவர்கள் இம்மாதிரி செய்தது போற்றத்தக்கது. மலையாளம், திருச்சினாப்பள்ளி, கோயமுத்தூர், தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களிலும் மைசூர், திருவாங்கூர், கொச்சி முதலிய சுதேச சமஸ்தானங்களிலும் 1924-வருஷ வெள்ளங்களால் கஷ்டமடைந்த ஜனங்களுக்கு உதவி செய்யும்





ஸ்ரீ தேவதார்,
தலைவர் இந்திய ஊழியர் சங்கம், புனா.

பொருட்டு சென்னிந்திய வெள்ளக் கஷ்ட நிவாரண சபை ஏற்படுத்தி நன்கு வேலை செய்யப்பட்டது.

## ஜன சேவகம்

தேச மக்களுக்குப் பல இடங்களில் சுகாதார ஞானத்தைப் போதித்துக் குடி முதலிய கேடுகளைத் தவிர்க்கவும், சேரி முதலிய இடங்களைச் சீர்திருத்தி இன்னும் பல நன்மைகளைச் செய்யவும் ஜன சேவக சபைகளை ஏற்படுத்தித் தொண்டு செய்கிறார்கள். கங்கா மேளா, கும்ப மேளா முதலிய அநேக பெரிய பெரிய திருவிழா நடைபெறும் இடங்களில் சேவா சாதனத்தாருடன் ஒத்துழைத்துப் பொது ஜனங்களுக்கு நானா வகைகளிலும் தொண்டு செய்கிறார்கள். ஆசார சீர்திருத்த மகா நாடுகள் பல விடங்களில் கூடுவதற்கும் இவர்கள் வேலை செய்கிறார்கள். சில விடங்களில் மாதர் சபைகளையும் கூட்டும்படி ஏற்பாடு செய்கிறார்கள்.

## ஐக்கிய இயக்கம்

ஏழைக் குடியானவர்களும் எளிய தொழிலாளர்களும் அதிக வட்டிக்குக் கடன் வாங்கிக் கஷ்டப்படுவதை நிவர்த்திக்கும் பொருட்டும் அவர்களுக்கு வேண்டிய தருணங்களில் உதவும் பொருட்டும் ஐக்கிய சங்கங்களை ஏற்படுத்தி வேலை செய்கிறார்கள். தொழிலாளருக்காகப் பம்பாயில் மட்டும் 19 ஐக்கிய நாணயச் சங்கங்கள் இருக்கின்றன. ஐக்கிய விஷயங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு ஒரு கலாசாலையும் அதன் ஆதீனத்தில் ஒரு பத்திரிகையும் நடத்துகிறார்கள். ஐக்கிய சங்கக் காரியதரிசிகளைப் பழக்குவதற்கு இந்த ஐக்கிய கல்விச்சாலை மிகவும் உதவியா யிருக்கிறது. ஸ்ரீமான் தேவதார் ஐக்கிய இயக்க விஷயத்தில் பெரு முயற்சி எடுத்துக் கொண்டு தேச முழுவதும் வேலை செய்து கொண்டு வருகிறார். இது விஷயமாகப் பல மாகாணங்களுக்குச் சென்று பணி செய்கிறார் பல ஐக்கிய நாணய மகாநாடுகளில் பிரசங்கங்கள் செய்தோ அக்ராசனம் வகித்தோ தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார். சென்னை மாகாணத்திலும் இச் சங்கத்தார் இது விஷயத்தில் பெரு

த்த வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஸ்ரீமான். K. G. சிவஸ்வாமி அய்யரவர்கள் தொண்டு, இது விஷயத்தில் இங்குக் குறிப்பிடத்தக்கது. எத்தனையோ வகையான ஐக்கிய சபைகளை நிர்மாணித்து இவர்கள் ஊழியம் செய்துகொண்டு வருகிறார்கள். பம்பாய் சென்னை இராஜதானிகளில் ஐக்கிய இயக்கம் பெருகுவதற்கும் பலப்படுவதற்கும் இந்திய ஊழியர் சங்கத்தார் செய்யும் தொண்டு கொஞ்சநஞ்சமன்று.

## பூர்வ குடிகள்

காடுகளில் வசிக்கும் பூர்வ குடிமக்களைத் திருத்தும் பொருட்டு பஞ்ச மகால் என்ற பெயருடன் ஒரு உட்சபை ஏற்படுத்தி இச் சங்கத்தார் மிகவும் உழைக்கிறார்கள். குஜராத்தில் வசிக்கும் பில்ஸ் என்ற காட்டு ஜாதியார்களுக்குச் சாப்பாடும் தங்குமிடமும் கொடுக்கும் 5 பள்ளிக்கூடங்களையும், வேறு 8 பள்ளிக்கூடங்களையும் ஒரு வைத்திய சாலையையும் ஏற்படுத்தி ஆண்டு 1-க்கு சுமார் ரூ 30,000 செலவு செய்கிறார்கள். இதில் மூன்றில் ஒரு பாகத்தைக் குஜராத் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியார்கள் கொடுக்கிறார்கள். நாயக், ராணி பாராஜ் முதலிய பூர்வ ஜாதியார்களுக்கும் உதவி செய்துகொண்டிருக்கிறார்கள். குஜராத்தில் பூர்வ குடிமக்களுக்குப் பல விதங்களில் அரும் பாடுபட்டுக் கொண்டு வரும் ஸ்ரீமான் தாக்கர் அவர்களை நாம் போற்றாமலிருக்க முடியவில்லை. சமயம் வாய்த்தால் நாம் இதைப்பற்றி விரிவாக எழுதுவோம். தென் கன்னடம் ஜில்லாவில் கொரகர்கள் என்ற பூர்வ ஜாதியார்களுக்கு இரண்டு இடங்களில் தனியாகக் குடியேற்றம் ஸ்தாபித்து வேலை செய்கிறார்கள்.

## தாழ்த்தப்பட்ட வகுப்பார்

அந்த்யஜா (Antyaja) சேவா மண்டலம் என்ற பெயருடன் ஒரு உட்சபை ஸ்தாபித்து ஒடுக்கப்பட்டவர்களுக்கு வேலை செய்யும் தொண்டர்கள் கூட்டத்தார் குஜராத்தில் வேலை செய்கிறார்கள். அக் கூட்டத்தின் ஆதரவில் பல பள்ளிக்கூடங்கள் நடக்கின்றன.



தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்ற சங்கம் (Depressed Class Mission) ஏற்படுத்தித் தென்கன்னடம் ஜில்லாவில் கொரகாஸ் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு நல்ல வேலை செய்கிறார்கள். சில பையன்களுக்கு மட்டும் ஊணும் உறைவிடமும் கொடுத்துப் போதிக்கும் சில பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பையன்களுக்குச் சில கைத் தொழிலும் போதிக்கிறார்கள். அவர்களுக்கு வசதியான குடிசைகள் கட்டுவதற்கு ஏற்பாடாயிருக்கிறது. இனி பொருமாகாணத்தில் மாங் என்ற ஜாதியாருக்கும் வேலைகள் செய்ய முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

## தொழிலாளர்கள்

தொழிலாளர்களுக்கும் இவர்கள் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீமான் ஜோஷி அவர்கள் தொழிலாளர்களுக்காக அநேக சங்கங்கள் ஏற்படுத்தி நல்ல வேலை செய்து வருகிறார். பல இடங்களில் தொழிலாளர் மகாநாடுகள் கூடுவதற்கும் தொழிலாளர் துயரங்களைத் துடைப்பதற்கும் நன்கு சேவை செய்கிறார். ஸ்ரீமான் ஜோஷி இந்திய சட்டசபையிலிருந்துகொண்டு இந்தியத் தொழிலாளர்களுக்குப் பல விஷயங்களில் பாடுபட்டு அவர்களின் அபிவிருத்தியிலும் கவலை கொண்டு வேலை செய்கிறார். அயல் நாடுகளிற் கூடின மகாநாடுகளுக்கு அவர் இந்தியத் தொழிலாளர்களின் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறார். தொழிலாளர்களுக்காகப் பல விடங்களில் பிரசங்கங்கள் செய்துகொண்டும் பல விஷயங்களைப் பத்திரிகைகளுக்கு எழுதிக்கொண்டும் ஸ்ரீமான்கள் ஜோஷி, பகேல் முதலியவர்கள் பாடுபடுகிறார்கள்.

## மதுவிலக்குப் பிரச்சாரம்

அநேக இடங்களில் மதுவிலக்கு மகாநாடுகள் கூட்டி வேலை செய்கிறார்கள். பில்ஸ் என்ற காட்டு ஜாதியார் குடித்துக் கெட்டுப் போகாதவாறு ஸ்ரீமான் தாக்கர் மேலான வேலை செய்வதுடன் குஜராத் மாகாணத்தில் மதுவிலக்குப் பிரச்சாரத்தில் நன்கு ஈடுபட்டிருக்கிறார். தென் கன்னடம் மலையாளம் முதலிய ஜில்லாக்களிலும் இதைப்பற்றி முக்கியமாக ஸ்ரீமான் சூர்யநாராயண ராவ் அவர்கள் அதிகமாகக் கவலை எடுத்துக்கொண்டிருக்கிறார்.

### பத்திரிகைகள்

"த்யானப்பிரகாஸ்" என்ற மாராத்தித் தினசரிப் பத்திரிகையை நடத்துகிறார்கள். The "Servant of India" (இந்திய ஊழியன்) என்ற ஒரு பத்திரிகையைச் சங்கப் பத்திரிகையாக ஆங்கிலத்தில் வாரந்தோறும் வெளியிடுகிறார்கள். இன்னும் மத்திய மாகாணத்தில் "Hitawad" (ஹிதவாதி) என்ற வாரம் இரு முறைப் பத்திரிகையையும் ஆங்கிலத்தில் நடத்துகிறார்கள்.

### அச்சுக்கூடங்கள்

சங்கத்திற்கு மிக்க வருவாயுள்ள ஆர்யபூஷணம் அச்சுக்கூடமும் த்யானப்பிரகாஸ் அச்சுக்கூடமும் 1926-ம் வருஷம் வெந்து போனமையால் சங்கத்திற்குப் பெருத்த நஷ்டமேற்பட்டுவிட்டது. சங்கத்தின் பேரில் அன்பு கொண்டு பணக்காரர்கள், ஏழைகள், அரசர்கள், ஆண்டிகள் அனைவரும் உட்பட உதவி செய்தார்கள். ஆகையால் சங்கத்தின் அக்கினி நிவாரண நிதிக்கு இதுவரையில் ஏறக்குறைய ரூ 2 00,000 சேர்ந்திருக்கிறது.

### சங்கத்தின் செலவு

நிர்வாகத்தின் பொருட்டுப் புனாவில் தலைமைச் சங்கத்திற்கும் மற்றக் கிளைச் சங்கங்களுக்கும் ஆண்டு 1-க்குக் குறைந்தது ரூ 85,000 செலவாகிறது. இதற்குத் தேசாபிமானமுள்ள எல்லா இந்திய மக்களும் உதவி செய்து இச் சங்கத்தை ஆதரித்து வருகிறார்கள். இம்மாதிரியான பொது ஸ்தாபனங்கள் ஒழுங்காயும் தீவிரமாயும் அபிவிருத்தியாயும் நடைபெறுவதற்குத் தேச ஜனங்கள் தக்கபடி உதவி செய்ய முன்வரல் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

### அங்கத்தினரது தியாகம்

கவர்ன்மெண்டார் அன்புடன் கொடுக்க முன்வந்த நைட் (Knight) பட்டத்தை வேண்டாமென்று மறுத்துப், பெருங் கௌரவத்தை உதறித்தள்ளினார் ஸ்ரீமான் கோகுலே. "தொழிலாளரு





புனே நகரிலுள்ள இந்திய ஊழியர் சங்கக் கட்டிடங்கள்.

க்கு நான் ஊழியன்; அவர்களுடைய நன்னம்பிக்கையே எனக்கு வேண்டியது'' என்று சொல்லி ஸ்ரீமான் ஜோஷி அவர்களும் சர்க்கார் தனக்குக் கொடுக்கவந்த ஸி. ஐ. ஈ. (C. I. E. = Companion of Indian Empire) என்ற பட்டத்தை வேண்டாமென்று சொல்லிவிட்டார். உயர்தரக் கல்வி கற்றிருந்தும் சம்பாதிக்கும் சக்தியிருந்தும் தங்கள் சொந்தச் சம்பாத்தியத்தைக் கவனிக்காது, தேச நன்மைக்காக உழைக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் முழுமனதுடன் தேசத் தொண்டு செய்துகொண்டு தேசத்திற்காகவே இருக்கும் இத்தேசத் தொண்டர்களை-இத்தேசீய சன்னியாசிகளைப் போற்றுகிறோம்; வாழ்த்துகிறோம். என் தேசம் என் தேசம் என்று உயிர்போமளவும் சொல்லிக் கொண்டிருந்த தேசபக்தர்-தேசத் தொண்டிற்காகவே பிறந்து தேசத் தொண்டிற்காகவே வளர்ந்து தேசத் தொண்டிற்காகவே இருந்து, தேசத் தொண்டிற்காகவே இறந்த ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகுலரவர்கள் நிறுவிய இந்த இந்திய ஊழியர் சங்கத்தை இந்திய மக்கள் அனைவரும் தங்களுக்குச் சொந்தமெனக் கருதி, அன்புடன் ஆதரித்து வளர்த்துக் காக்குமாறு வேண்டுகிறோம். நாட்டிற்கு நாலாவழிகளில் நன்மைகளை நாடும் இச் சங்கத்திற்குப் பூரண கிருபைபாலிக்குமாறு எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைப் பிரார்த்திக்கிறோம். இச் சங்கத்தின் அங்கத்தினர் பெருகிக் கணக்கற்ற கிளைகள் நாடெங்கும் உண்டாகுமாறு மறுபடியும் திருவருளை மன்றாடுகிறோம்.

இந்தியர்களே என் சகோதரர்கள்
இந்தியர்களே என் உயிர்
இந்தியாவின் தேவ தேவிகளே எனக்குப் பரதேய்வம்
இந்திய ஜன சமூகமே நான் பிறந்து வளர்ந்த தொட்டில் என் யௌவனத்தின் நந்தவனம் என் மூப்பின் புண்ணிய தபோவனம்
இந்தியப் புண்ணிய பூமியே எனக்குச் சிறந்த சொர்க்கம்
இந்தியாவின் க்ஷேமமே என் க்ஷேமம்.

(ஸ்வாமி விவேகானந்தர்.)

# ஸ்ரீமதி சௌடாம்பிகை அம்மையார்

## (பல ஆண்டுகளாக உண்ணாதிருக்கும் ஒரு அம்மாள்)

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி."

தென்னிந்தியாவிலே தமிழ் நாட்டிலே பாண்டிய மண்டிலத்திலே இராமநாதபுரம் ஜில்லாவிலே விருது நகருக்குக் கிழக்கிலே அருப்புக் கோட்டைக்கும் வடக்கிலே தோணுகால் என்ற ஒரு குக்கிராமத்திலே தேவாங்க செட்டியார் குலத்திலே ஒரு சாதாரண எளிய குடும்பத்திலே 1874-ம் வருஷத்திலே நவம்பர் மீ௳திலே 18-ம் உ௳யிலே புதன் கிழமையிலே (பவ-வருஷ கார்த்திகை-மீ 4-உ) இவ் வம்மையார் பிறந்தார். அவரது குடும்பம் சாதாரணமா யிருந்தபடியால் அவ் வூர்க் காரப் பெண்மணிகள் போன்று அம்மையாரும் வேலை செய்யவேண்டி யிருந்தது. சுமார் 8-வயதில் பருத்திக்காடு காவல் காத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பருத்திக் காட்டில் ஒரு மகான் பிரசன்னமாகி அவருக்கு உபதேசித்ததாகக் கேள்விப் படுகிறோம். நாள் 1-க்கு இரண்டு தடவை தண்ணீரில் தவறாது குளிப்பது அக் காலமுதல் இன்றுவரை அவருக்கு வழக்கமா யிருக்கிறது. தனது காலத்தை யெல்லாம் பக்திசெய்வதிலேயே கழிக்க ஆரம்பித்தார். சில ஆண்டுகளில் உணவையும் தள்ளிவிட்டார். அவருக்கு 14 வயதாகும்பொழுது மரபு வழக்கப்படி விவாக விஷயமாய் அவரது தந்தையார் முயற்சி செய்ய ஆரம்பிக்கவே, அதற்கு இணங்காது அதை அம்மையார் மறுத்து வெறுத்து உதறித் தள்ளிவிட்டார். சிறு வயதிலிருந்து கடவுள்மீது பக்தியாய் இருப்பதை முன்னிட்டும் அன்னபானமின்றி நெடுங்கால மிருப்பதை முன்னிட்டும் அப் பக்கத்து ஜனங்கள் அம்மையாரைத் தெய்வீக சக்தி வாய்ந்தவர் என்றே போற்றினார்கள், போற்றுகிறார்கள்.

குறிப்பு:— ஸ்ரீமதி சாமுண்டி தேவி அவர்களைப் பற்றி எமது சிறு பிராயம் முதல் நாம் அறிவோம். அன்றியும் பெரிதும் பலர் மூலம் கேள்விப் பட்டு மிருக்கிறோம். அவரை உயரிய தூய சந்நியாசினியார் என்றே மதிக்கிறோம். அம்மையாரைப் பலமுறை நாம் சந்தித்து மிருக்கிறோ மாதலால் அவரைப் பற்றி இங்கு இவ்வளவு எழுத நேர்ந்தது.

சில பத்திரிகைகளில் மருதூர் அம்மையாரைப் பற்றி வாசித் தறிந்ததின் பயனாக அங்குச் சென்று பார்த்தோம். ஆகையால் பொது ஜனங்களுக்கு நாம் எழுதி யிருக்கும் இவ் விஷயத்திலிருந்து ஓர் எச்சரிக்கை செய்யவேண்டியது பத்திராதிபர் என்ற முறையில் எமது கடமையாகும். பிள்ளை வரத்திற்கோ, பிணியைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டோ, உபதேசம் பெற்றுக் கொள்ளும் பொருட்டோ, வஞ்சனை, பில்லி, சூது முதலியவைகளை நிவர்த்திக்கும் பொருட்டோ அம்மையாரிடம் செல்லாதிருக்க வேண்டுகிறோம். மூலையில் மௌனமாக இருப்பவரை முச்சந்தியிற் கொண்டு வந்து உபத்திரவம் கொடுக்க வேண்டாம். அம்மையார் வைத்தியருமல்ல ஜோதிடருமல்ல மந்திரவாதியுமல்ல தந்திரவாதியுமல்ல.

ஆசிரியர், "பாரதி."



### புகழ் விருத்தி

இந்த ஆச்சர்ய அபூர்வ விஷயம் அதிகமாய்ப் பரவவே, அநேக அயலூர்களுக்கு அம்மையாரை அன்புடன் அழைத்துக்கொண்டு போனார்கள். தேவாங்கர்களே அதிகமாக மதித்து, தேவாங்க குல தேவதையான சாமுண்டீஸ்வரியின் அம்ஸமென்றே கருதி, அவரைப் பெரிதும் கொண்டாடினார்கள், கொண்டாடுகிறார்கள். தேவாங்க மக்கள் பெருகியுள்ள அநேக இடங்களுக்கு அவரது தகப்பனாருடனும் சகோதரருடனும் அவர் செல்ல ஆரம்பித்தார் இராமநாதபுரம், மதுரை, சேலம், கோயமுத்தூர், மலையாளம், தஞ்சாவூர், சென்னை முதலிய ஜில்லாக்களில் கணக்கற்ற இடங்களுக்குப் பற்பல முறை சென்றிருக்கிறார். எங்குச் சென்றாலும் பெண்பாலாய் இருப்பதை முன்னிட்டுத் தேவாங்க வகுப்பார் வீட்டிலேயே தங்குவதால் அயல் வகுப்பார் அவரை அறியச் சரியான சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை. தேவாங்க சமூகத்தில் பல பிரபுக்களையும் பல அறிஞர்களையும் அவருக்குத் தெரியும். அவருக்கு அநேக இடங்களில் அநேக சிஷ்யர்கள் இருக்கிறார்கள்.

தேவாங்க மக்களில் பல அன்பர்கள் வீட்டுக்கு அம்மையார் போவதுண்டு. அங்கே அவரை மிகவும் மரியாதையுடன் பூஜித்துப் பாதகாணிக்கை தம் தம் சக்திக்கேற்றவாறு கொடுப்பார்கள்.

## உண்ணாமை

நெடுங்காலம் உண்ணாது பருகாது உயிர் வாழ்வது எப்படி யென்பது எமக்குத் தெரியவில்லை; விளங்கவில்லை. மானிடர்களுக்கு உண்மையாகவே இது பேராச்சர்யமாயிருக்கும். உணவின்றி உலகத்தி லிருக்க அறிந்துகொண்டால் உலகத்தை வென்றதாகும். ஆகையால் வாசகர்களுடைய ஆராய்ச்சிக்கே இதை விட்டுவிடுகிறோம். எங்குச் சென்றாலும் அவருக்கு அவஸ்யமாய் வேண்டுவது குளிப்பே. அதிக நேரம் குளிப்பார். கிணறாயிருந்தால் எத்தனையோ குடங்கள் அவர் மீது ஊற்றுவார்கள். சிறிய கிணறா யிருந்தால் 10-நாள் உபயோகத்தில் தண்ணீர் குறைந்துவிடும். எத்தனையோ ஆண்டுகளாக அதாவது தனது யௌவனமுதல் இந் நிமிஷம்வரை அவர் உண்ணாது பருகாது இருக்கிறார். ஸ்நானம் செய்தவுடன் மிகவும் மலர்ச்சியுடன் காணப்படுகிறார். தேகம் வாடாமல் வதங்காமல் வற்றாம லிருக்கிறது. தொடர்ச்சியாக அநேக நாட்கள் ரெயில் வண்டியில் அவருடன் பிரயாணம் செய்த அநேகர் அவருடைய உண்ணாமை உண்மை என்பதற்குச் சாட்சிகளாக இன்றும் இருக்கிறார்கள். சாதாரணமாக வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு உணவு உட்கொள்ளாமல் வடநாட்டில் ஒரு பெண் மணியார் இருப்பதாகப் பத்திரிகையில் படித்ததாய் எமக்கு ஞாபகம் இருக்கிறது. நூதன ஆராய்ச்சிகளில் மிக மிக ஆர்வம் கொண்ட எமக்கு இவ்விஷயம் வியப்பாகவே இருக்கிறது. இயற்கையை வென்றுகொண் டிருக்கும் இந்த அம்மணியாரைப் பற்றிச் சரியானபடி ஒன்றும் சொல்ல எம்மால் முடியவில்லை. இந்த அம்மையாரைப் பற்றி எவ்விதக் கெடுதலான விஷயங்களையும் நாம் இதுவரையில் கேள்விப்படவேயில்லை.

## அம்மையாரின் செல்வாக்கு

அநேகர் அவருடைய அன்புக்கு அடங்கியே நடக்கிறார்கள். பிரபல தோல் வியாபாரிகளான சென்னை ஸ்ரீமான் மச்சா முனுஸ்வாமி





சௌடாம்பிகை அம்மையார்

செட்டியா ரவர்களின் குடும்பத்தார்களுக்கு அம்மையாரிடம் அளவற்ற அன்பு உண்டு. சேலம், கோயமுத்தூர், கும்பகோணம், மதுரை இன்னும் அநேக இடங்களிலுள்ள பெரும் பெரும் பிரபுக்கள் அவருக்கு வேண்டியவைகளைக் கொடுக்கத் தயாரா யிருக்கிறார்கள்.

## அவரது திருப்பணி

அவரது சொந்த ஊராகிய தோணுகால் கிராமத்தில் ஒரு சாமுண்டி தேவியின் கோவில் ஒன்று சுமார் ரூ 30,000-த்தில் கட்டி முடித்து நித்திய பூஜைக்கு ஏற்பாடும் செய்திருக்கிறார்.

## தோற்றம்

இயற்கையாகவே அம்மையார் சௌந்தர்யம் வாய்ந்தவர். அவர் 55 வயது அடைந்தும், சிறிது நரையைத் தவிர்த்து திரைத்தல் சுருங்கல் என்னும் பருவ மாற்றங்கள் அதிகமாக அவரிடம் காணப்படவில்லை. தேஜஸும் ஓஜஸும் ஜ்வலிக்கின்றது. வயது 60 ஆவதற்கு இன்னும் 4 ஆண்டுகளே பாக்கி யிருப்பினும் அம்மையின் வதனத்தில் இளமை ததும்புவதை இன்றும் இன்னும் எவரும் காணலாம். ஏறக்குறைய 60 வயதுக் கடுத்துச் சென்றுகொண்டிருக்கும் அவ் வன்னையை 40 வயதுக்கு மேற்பட்டதாக எவரும் எண்ணார் என்பது உண்மையே. இவ் வம்மையாரைப் பற்றி எண்ணினால் காலஞ் சென்ற அம்மை சாரதாமணி தேவியாரிடமும் கல்கத்தாவிலிருக்கும் அம்மை கௌரிபுரி தேவியா ரிடமும் எம் மனது சென்று, அவர்களின் ஞாபகம் அதிகமாய் உண்டாகின்றது. வசீகரிக்கும் அருட் பார்வையும் சன்மார்க்கத் தோற்றமும் அவ் வம்மையாரின் இன்முகத்தில் என்றும் தவழ்கின்றன. அவர் திடீரென்று பார்ப்பவர்க்குச் சிங்காரமாகத் தோன்றினாலும், அவரிடம் பேசியபின் அவருடைய இனிய வாக்குகளில் லயிக்க வேண்டியதே.

## குணங்கள்

இனிமையாகவும் மெதுவாகவும் அர்த்த புஷ்டியுடனும் பேசக் கூடியவர். அவரிடத்திற்கு வரும் இளைஞர்களை "மகனே" என்றும்

வயது வந்தவர்களை "அப்பனே" என்றும் வயதில் பெரியோர்களை "ஐயா" என்றும் பெண்களைத் "தாயே" என்றும் அவர் தாய்மை அன்போடு அழைத்துப் பாராட்டும் உருக்கமிக்க உரைகள் எவர் தம் கல் மனதையும் கரைந்து உருகச் செய்யும். குற்றங்களைக் கடிவார். உபகார சித்தம் அதிகமாயுண்டு. "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்ற வள்ளுவர் வாயுரை வாழ்த்தைப்போன்றே அம்மையாரின் அகத் தூய்மை அவரது முக விலாசத்தில் விளங்குகிறது. மலினமற்ற இவ் வம்மையாரின் உள்ளத்தில் தூய்மையே பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. சாது சங்கப் பழக்கத்தில் அதிக விருப்பமுள்ளவர். எவரைக் கண்டாலும் முக மலர்ந்து சமீபித்தபொழுது அன்பு மொழிகள் வழங்கியும் அணுகிய பின்னர் ஆசிகள் கூறியும் பரிந்து உபசரிக்கும் மேலான குணமே அவரது அன்பின் ஊற்றிற்குச் சாட்சியாக இருக்கிறது. இவரைப்பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் புன் சிரிப்புப் பளீர் பளீர் என்று தோன்றும் அவரின் அன்பு முகம் எம்முன் தாண்டவமாடுகிறது; அவரின் அமிர்த மொழிகள் எமது காதுகளில் ஒலிக்கின்றன. எவரும் தாய்மைக் கண் கொண்டு நோக்கித் தாய்மையே விரும்பத்தக்க தாய்மைக் காட்சி தரும் இத் தாயின்பால் தூய்மை ஒளிர்வதென்றால் இதில் வியப்பொன்றுமில்லை. எவரையுமே தனது வாழ்வில் துணைவராகக் கொள்ளாது இயற்கையை வென்று தன்னந் தனியாய் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தப் பிரத்தியட்சமான அதிசய அம்மையாரைப் பற்றி இவ் விருபதாம் நூற்றாண்டில் கேட்க எவரே வியப்படையார்? அலங்காரமான நகைகள் போட்டுக்கொள்வதிலும் விலை உயர்ந்த ஆடைகள் தரிப்பதிலும் வாசனை எண்ணைகள் வாசனை ஸ்நானப் பொடிகள் உபயோகப்படுத்துவதிலும் அவருக்கு அளவற்ற பிரீதி. உயர்ந்த அநேக ஆபரணங்களும் வகை வகையான வர்ணப் பட்டாடைகளும் அவரிடம் இருக்கின்றன. பக்தர்கள் அறிஞர்கள் முதலியவர்களின் மீது அவருக்கு அபிமானம் அதிகம். சென்னை ஸ்ரீமான் பச்சா முனுஸ்வாமி செட்டியாரவர்கள் மாளிகையில் ஒரு பெரிய பாகவதர் அம்மையாரைப்பற்றி:



"அபிஷேகப் பிரியாம், பத்ராம்,
தேவாங்க, வரதாயினீம்,
தோணு காலபுரி ஜாதாம்,
வந்தே சூடாம் பிகாம் பராம்"

என்று சமஸ்கிருதத்தில் ஒரு சுலோகம் புனைந்திருப்பது இங்குக் குறிக்க வேண்டியதிருக்கிறது.

## கல்வி கேள்விகள்

தனது சுய முயற்சியால் தமிழிலும் தெலுங்கிலும் நன்கு பேசவும் படிக்கவும் கற்றுக்கொண்டிருக்கிறார். சாஸ்திர ஆராய்ச்சி உண்டு. பெரிய கேள்விகளுக்கும் சுருக்கமாகப் பதில் அளிப்பார். தாயுமான சுவாமிகள், பட்டினத்தார் முதலியவர்களின் பாடல்களிலும் கைவல்யம், பகவத் கீதை, வாசிட்டம், வாசுதேவ மனனம் முதலிய நூற்களிலும் அதிகப் பிரியம் உண்டு. சென்னையில் பிரபல பாகவதர்களான காலஞ் சென்ற ஸ்ரீமான் லட்சுமணாச்சாரியார், ஸ்ரீமான் கணேச சாஸ்திரிகள் முதலியவர்கள் அம்மையாரிடம் அளவற்ற பக்தி கொண்டு பற்பல சத் காலக்ஷேபங்களைச் செய்திருக்கிறதுமன்றி, பகவத் கீதை முதலிய மேலான நூற்களையும் அம்மையாரின் முன்பு வாசித்தார்கள் என்று கேள்விப்படுகிறோம்.

## ஸ்தல யாத்திரைகள்

தமிழகத்திலுள்ள பற்பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் பல தடவை சென்று தரிசித்துவந்திருக்கிறார். வடநாட்டில் இருமுறை க்ஷேத்திரப் பிரயாணம் செய்திருக்கிறார். வடநாட்டிலுள்ள முக்கியமான இடங்கள் எல்லாம் பார்த்திருக்கிறார். ஹரித் துவாரத்தில் சமீபத்தில் நடந்த கும்பமேளாவுக்கும் போய்விட்டு வந்திருக்கிறார். தீர்த்த யாத்திரைகளிலும் க்ஷேத்திர யாத்திரைகளிலும் அவருக்கு அளவு கடந்த ஆவல். "ராமகோடி" என்று பெயர் சூட்டி எழுதி வைத்திருக்கும் புஸ்தகத்தைப் பத்ராட்சலம் என்ற திவ்விய ஸ்தலத்திற்குக் கொண்டுபோய் அங்கு வைத்துவிட்டு வரவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறார்.

## அவரது குடும்பம்

ஆதியில் ஏழ்மையாயிருந்தாலும் இப்பொழுது சரியாக இருக்கிறது. ஒரு மூத்த சகோதரியும் இரு இளைய சகோதரர்களும் அவருக்கு உண்டு. ரொக்க ஆஸ்தியும் திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஏலத்தோட்டமும் உண்டு. நகை வகைகளில் ஏராளமாயிருக்கின்றன. காசுக்காரச் செட்டியார் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியார் மதுரையில் அம்மையாருக்கு ஒரு வீட்டை இனாமாகக் கொடுத்திருக்கிறார். ஏராளமான மனிதர்களைச் சம்பாத்தியம் செய்திருப்பதே அம்மையாருக்குப் பெரும் ஆஸ்தி. அம்மையாருக்கு வேண்டுமானால் பெரும் ஆஸ்தி திரட்டலாம்.

## ஜாதகம்

அம்மையாருடைய ஜாதகத்தை ஒருவர் கணித்திருக்கிறார். சோதிடத்தில் விருப்பமுடையவர்களது உபயோகத்திற்கே அதை இங்கே சேர்த்திருக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | ல |
| சந | இராசி. | | |
| சனி | | | |
| சுக் | சூரி | புத கே | கு அ |

| | | | |
|---|---|---|---|
| | சனி ரா | சந அ சுக் | |
| பு | அமுசம். | | |
| | | | சூ-கு |
| | | கே | |

பவஷு கார்த்திகைமீ 4வ புதன்கிழமை சுத்த நவமி 16-7 சதயம் 8-44 வியாகாதம் 7-40 கௌலவம் 16-7 தினி 23-28 சித்தம் 2, குரு 42-13, கிருதபுகாதி அக 28-26, அஸ்தமயனம் மணி 5 நிமி 29, 1874-ஷு நவம்பர்-மீ 18-வ ராத்திரி மணி 8 நிமிஷம் 33-க்கு நாழிகை $46\frac{3}{8}$ ஜனனம்.



# ஆசிரியர் குறிப்புகள்.

## ஆசிரியர் அறிக்கை

கடவுளது திருவருளால் "பாரதி"யின் 2-வது மாலையின் 1-வது மணியில் முதலாவது இப்பொழுதுதான் எழுதப்போகிறோம். குறிப்புகளின் பாகத்தில் அதிகமான விஷயங்களை அழகோடு எழுத எமக்கு அளவுகடந்த அவா. அநேக அவசியமான வியாசங்களை வெளியிடுவதால், "பாரதி"யில் இடமின்மை பற்றி எமது உள்ளத்தில் உதித்தெழும்பும் குறிப்புகள் அனைத்தையும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அநுஷம் | 1 | ரவி. | சித்தம் | 1 | குரு |
| பூரட்டாதி | 2 | சந். | மூலம் | 2 | சுக்கிரன் |
| அஸ்தம் | 2 | அங். | திருவோ | 1 | சனி |
| சோதி | 3 | புத. | அசுவதி | 1 | ராகு |

சித்தம் 3 கேது.

## அவரது ஊருக்குச் செல்லும் மார்க்கம்

மதுரையிலிருந்து அருப்புக்கோட்டைக்குச் செல்லும் மோட்டாரில் மதுரையிலிருந்து போகலாம். மோட்டார் சார்ஜ் 12 அணாவுக்குள் இருக்கும். அல்லது விருதுநகர் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி அங்கிருந்து அருப்புக்கோட்டைக்கு மோட்டாரில் சென்று, அருப்புக்கோட்டையிலிருந்து மதுரைக்குச் செல்லும் மோட்டார் காரில் செல்லலாம். மோட்டார் சார்ஜ் 6 அணா அல்லது 8 அணாவாக இருக்கலாம். விருதுநகரிற்கும் அருப்புக் கோட்டைக்கும் 12-மைல். அருப்புக்கோட்டைக்கும் மதுரைக்கும் 30-மைல். அருப்புக்கோட்டைக்கும் தோணுகாலுக்கும் 7-மைல். தோணுகால் மிகவும் சிறிய கிராமமாகையால் சாப்பாடு சிற்றுண்டி வசதிகள் ஒன்றும் எதிர் பார்க்க முடியாது.

---

வெளியிட முடியாது தவிக்கிறோம். "பாரதி"ப் பத்திரிகையோ சிறியது, காகிதமோ நயமானது; விஷயங்களோ அதிகம், சந்தாவோ சொற்பம். இப் புத்தாண்டில் புதுப் புது விஷயங்களை வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம். சில பக்கங்கள் அதிகமாகச் சேர்த்தால் ½ அணா ஸ்டாம்பு ஒட்டவேண்டி யிருக்கிற படியால் முக்கியமான விஷயங்கள் வந்தாலும் அப்படியே விட்டுவிட வேண்டி யிருக்கிறது. இதற்கு என்செய்வோம்!

## 44-வது இந்திய தேசீய மகாசபை

சென்ற வருடக் காங்கிரஸ் தலைவரது குமாரர்-ஆங்கிலத்தில் உயர்தரக் கல்வி கற்று உலக அரசியலை நன்குணர்ந்த அறிஞர்-தேசத்திற்காகத் தனது அதிக வருவாயுள்ள தொழிலையே விட்டுவிட்டுத் தேசத் தொண்டு செய்து மும்முறை சிறைசென்ற தேச பக்தர்—ஊக்கமும் உற்சாகமும் உறுதியும் கொண்ட அஞ்சா நெஞ்சு படைத்த வாலிபச் சிங்கப்—ஸ்ரீமான் பண்டித ஜவஹரிலால் நேரு அவர்கள் காங்கிரஸில் தலைமை வகித்து என்னதான் சொல்லப் போகிறாரோ? என்றும் இந்தியாவின் மாபெருஞ் சபையாகிய காங்கிரஸ் இந்த வருடம் என்னதான் தீர்மானிக்கப் போகிறதோ? என்றும் முக்கியமாக இந்தியாவும் பொதுவாக உலகமுமே லாகூரின் திசையை நோக்கி நின்று கவனித்தது.

இதற்குமுன் வந்த தலைவர்கள் போன்று பெரிய பிரசங்கங்களைச் செய்யாது தனது கருத்துக்களைச் சுருக்கமாகவும் நேர்மையாகவும் தீவிரமாகவும் மகா தைரியமாகவும் ஸ்ரீமான் ஜவஹரிலால் அவர்கள் எடுத்துரைத்திருக்கிறார். பூரண சுயேச்சையே இந்தியாவிற்கு வேண்டுமெனப் பேசியிருக்கிறார். 33 கோடி மக்களையும் சுதந்திரம் பொங்கிக் கொண்டிருக்கும் இந்திய வீரர்களையும் ஒன்றுகூடி தேசத்திற்கு உழைக்குமாறு "சேரவாரும்" இந்தியரே என்று தம் சுதந்திரச் சங்கெடுத்து ஊதி அழைக்கிறார். அவரது அக்ராசனப் பேச்சிற்கு வியாக்யானங்கள் தேவையில்லை. அது முற்றிலும் சுத்த சுதந்திர வீரப்பேச்சாகவே யிருக்கிறது. அவரது அறிவைப் போலவே ஆவேசமும், அந்த ஆவேசத்தைப்போலவே வீரமும், அந்த வீரத்தைப் போலவே தியாக உணர்வும், அந்தத் தியாக உணர்வைப்போலவே அவரது சொற்பொழிவும் காணப்படுகின்றன. புராதன இந்தியாவின் பெருமையைப்பற்றி அவர் பாட்டுப் பாடிக்கொண் டிருக்கவில்லை; தற்கால இந்தியாவின் நிலைமையைப்பற்றித் துயரப்பட்டுக்கொண் டிருக்கவில்லை. வருங்கால இந்தியாவின் அமைப்பிலேதான் அவர் முழுக் கவனத்தையும் செலுத்திப் பேசி யிருக்கிறார். இத்துடன் நேரு அறிக்கை ஊர்ஜிதமில்லாது போயிற்று. இந்த வருடத்தில் காங்கிரஸிற்குப் பெரும் மாறுதல் ஏற்பட்டுக் காங்கிரஸின் சரித்திரத்தில் ஒரு நூதன சகாப்தம் பிறந்திருக்கிறது.



தேசத்தார் ஒரு வாலிபரைத் தெரிந் தெடுத்ததே, இந்தியா இனி இளைஞர் ஆதீனத்தின் அடிவரப் போகிறதென்பதற்கு அறிகுறியாகும். ஸ்ரீமான் பண்டித ஜவஹரிலால் நேரு அவர்களே இன்று இந்திய இளைஞர் உலகிற்கு உண்மைத் தலைவராக விளங்குகிறார். இந்தியாவின் கமால் பாட்சாவாகவும் இந்தியாவின் சன்யாட்ஸேனாகவும் இந்தியாவின் ஜாகூல் பாட்சாவாகவும் ஸ்ரீமான் பண்டிதர் ஜோபிக்கிறார். தன்னைக்காட்டிலும் தனது தனயன் மகா வேகத்துடன் முன்செல்வதைக் கண்ட பண்டிதர் மோதிலால் அவர்களின் ஆனந்தம் அளவற்றது.

இந்தவருடம் பற்பல எதிர்ப்புகளுடன் பூரண சுயேச்சைத் தீர்மானத்தைக் காங்கிரஸ் செய்திருக்கிறது. கூட்டம் கூடுவது இலகுவானது; பேசுவது இலகுவானது; தீர்மானிப்பது இலகுவானது. ஆனால் அவைகளைச் செய்து காட்டுவதுதான் பெரிது! பெரிது!! ஒற்றுமை வேண்டும்; பொறுமை வேண்டும்; தியாகம் வேண்டும்; உழைப்பு வேண்டும்; பூரண சுதந்திரத்தை லட்சியமாக வைத்துக்கொண்டு நாட்டிற்கு நலம் செய்யும் எல்லா வழிகளிலும் இந்தியர்கள் பாடுபடவும் வேண்டும் என்று வேண்டுகிறோம். தனது விடுதலையை எண்ணி எண்ணி ஏக்கங்கொண்டு இந்திய மாதா வருந்துவதை எத்தனை இந்தியர்தான் உருக்கத்துடன் கவனிக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியவில்லை.

## மே. த. இராஜப் பிரதிநிதியின் மீது வெடிகுண்டு

ஒவ்வொரு மனிதரையும் கடவுளாகக் கொண்ட இந்தியர்கள், அஹிம்ஸையே ஆயுதமாகக் கொண்டிருக்க வேண்டிய இந்தியர்கள் இக்காலத்தில் ஹிம்ஸா மார்க்கத்தில் இறங்குவது தவறுதலான காரியமாகும். சாத்வீகத்தால்தான் நாம் சுதந்திரமடைய வேண்டி யிருக்கிறது. மே. த. கவர்னர் ஜெனரல் லார்டு இர்வின் மீது யாரோ ஒருவர் சமீப காலத்தில் வெடிகுண்டு போட்டது, பாரதத் தாயின்மீது வெடிகுண்டு போட்டதாகும், நமது அபிவிருத்தியின் மீது வெடிகுண்டு போட்டதாகும். சுமார் 18 வருடங்களுக்கு முன்பு லார்டு ஹார்டிங் அவர்கள் மீது வெடிகுண்டு எறியப்பட்ட சம்பவத்தின் ஞாபகம் இப்போது எமக்கு வருகிறது. இப்படியான அதர்மச் செய்கைகளை நாம் முழுமனதுடன் வெறுத்து முற்றிலும் கண்டிக்கிறோம். அவர் அந்த ஆபத்தில் எவ்வித இடையூறுமின்றித் தப்பியதற்காக நாம் கடவுளைப் போற்றுகிறோம்.

## அகில இந்திய ஆர்யப் பெண்கள் மகாநாடு

1929-ஆம் டிசம்பர்மீ 26-ம் தேதியில் லாகூரில் அகில இந்திய ஆர்யப் பெண்கள் மகாநாடு, சென்னை ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் அவர்களின் தலைமையிற் கூடியது. இந்திய மாதர்களுக்குத் தற்காலத்தில் வேண்டும் உரிமைகளைப்பற்றித் தீவிரமாகவும் தெளிவாகவும் பேசியிருக்கிறார். தேசத்தில் நிலவிவரும் பற்பல கெட்ட பழக்க வழக்கங்களை அடியோடு கண்டித்துப் பேசியிருக்கிறது இங்குக் குறிப்பிடத் தக்கது. இம்மாதிரியான மகாநாடுகளால்தான் இந்திய மாதர் இயக்கம் பலப்பட வேண்டி யிருக்கிறது. தமிழ் நாட்டு மாதர்கள் தமிழகமெங்கும் மாதர் சங்கங்களை என்று ஏற்படுத்துவார்களோ அன்றே தமிழப் பெண்கள் சமூதாயம் பலப்படும்.

## காங்கிரஸ் பொருட்காட்சித் திறப்பு விழா

லாகூர்க் காங்கிரஸ் பொருள் காட்சியை லஜபதி நகரில் போறிஞர் ஸர். பி. ஸி. ராய் அவர்கள் திறந்து வைத்து அரிய சொற்பொழிவு நிகழ்த்தியது நன்கு கவனிக்கத்தக்க விஷயமாகும். இந்தியச் சர்க்காரில் பெரும் நிர்வாகத்தில் இருந்த ஐரோப்பியர்களில் சிலரும், இந்தியக் கலைஞர்களான சில ஐரோப்பியர்களும் கைராட்டினத்தின் தத்துவங்களை, மகாத்மா அவர்களுக்கும் முன்னரே கண்டறிந்து அவர்கள் அறிவித்திருப்பதாக டாக்டர் ராய் அவர்கள் கூறுகிறார். அயல்நாட்டு நவீனச் சாமான்கள் போட்டியாகக் கிளம்பினும் நமது நாட்டுச் சாமான்களை உபயோகிக்கும்படி கூறியிருக்கிறார். மகாத்மாவின் கதர் இயக்கத்தைப் பெரிதும் போற்றி யிருக்கிறார். கதரை மறுக்கும் இந்தியர்கள் அவரது மணிவாசகங்களைக் கேட்டுத் தமது அபிப்பிராயங்களை மாற்றி இனிமேலேனும் கதர்க் கட்டுவார்களாக. இந்திய மக்கள் அனைவரும் சற்று அதிகமான விலையைக் கொடுத்தேனும் தேச விடுதலையின் பொருட்டும் தேசாபிவிருத்தியின் பொருட்டும் கதர்க்கட்ட வேண்டுகிறோம்.

## அகில இந்திய ஆசார சீர்திருத்த மகாநாடு

காங்கிரஸ் வாரத்தில் லாகூரில் பால்ய விவாகத் தடைச் சட்ட வீரரான ஸ்ரீமான் ஹரிவிலாச சாரதா அவர்கள் தலைமையின் கீழ் இம்மகாநாடு நடைபெற்றது. அவரது அக்ராசன வாக்குகள் கவனிக்கத் தக்கன; சிந்திக்கத்தக்கன; போற்றத் தக்கன. அரசியல் சீர்திருத்தம் ஆரம்பமாகும் பொழுதே ஆசார சீர்திருத்தங்களும் செய்யவேண்டியது அவசியமாகும். வருங்கால இந்தியாவின் அஸ்திவாரத்திற்கு ஸ்ரீமான் சாரதா அவர்களின் திட்டங்கள் அவசியம் வேண்டுவன. மாதர்கள் விஷயங்களில் அவர் உருக்கத்துடன் வேலை செய்திருக்கிறதை, இந்தியாவின் அபிவிருத்திச் சரித்திரத்



தில் என்றென்றுமே மறையாது நிலைத்திருக்கும். "இளைஞர்களே! தீமை பயக்கும் ஆசார அநுஷ்டானங்களை எதிர்த்துப் போராடுங்கள்; ஸ்திரீகளுக்கு விடுதலையளியுங்கள். பூர்வகாலத்துப் பிராமணர்களுடைய தன்னல மறுப்புக் குணத்தைப் பயிற்சி செய்யுங்கள். க்ஷத்திரியர்களைப்போல் அஞ்சாமையோடு கடமையிற் கண்ணுயிருங்கள். நியாயமான சமூக ஏற்பாடென்னும் அஸ்திவாரத்தின் மீது அழியாத அரசியற் கட்டிடத்தைக் கட்டமுடியும் என்பதை நினைவிலிறுத்திக் கொள்ளுங்கள். தேசத்திற் சமூக சம்பந்தமான வேலைகள் எவ்வளவோ செய்யப்படவேண்டி யிருக்கின்றன. இங்கிலாந்தில் உயர்ந்த பதவியை வகித்த வில்லியம் பிட் என்பார், தமது 24-ம் வயதில் "நானே இங்கிலாந்தைக் காப்பாற்ற முடியும்; வேறெவரும் அதைக் காப்பாற்ற முடியாது" என்று முழக்கம் செய்தார். "இந்த உணர்ச்சி உங்களில் ஒவ்வொருவருக்கும் உண்டாவதாக" என்று அவர் இளைஞருக்குக் கூறியிருக்கிறார்.

## மதுவிலக்கு மகாநாடு

ஸ்ரீமான் சக்கிரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அக்ராசனாதிபத்தியத்தில் மதுவிலக்கு மகாநாடு லாகூரில் நடந்தேறியது. நமது அடிமை நாட்டில் இப்பொழுது மதுவிலக்குப் பிரச்சாரம் நடப்பது நமது நற்பயனே யாகும். நமது வறுமை நாட்டைப் பாழாக்கும் இத் தீய பழக்கம் ஒழிவதற்கு நாடெங்கும் கிளர்ச்சி உண்டாகி யிருக்கிறதைக் கண்டு நாம் சந்தோஷிக்கிறோம். ஸ்ரீமான் ஆச்சாரியார், சர்க்கார், பூரண மதுவிலக்குக் கொள்கையை ஆதரிக்க வில்லையென்று குறிப்பிடுகிறார். இது கவனிக்கத் தக்கது. நமது நாட்டிற் குடியைக் குடி யிருக்க விடாது குடியின் குடியைத் தொலைக்க அனைவரும் ஒன்றுசேர்ந்து வேலைசெய்ய வேண்டும்.

## பத்திரிகாசிரியர்கள் மகாநாடு

பத்திரிகாசிரியர்கள், பத்திரிகா நிருபர்கள் அடங்கிய மகாநாடு லாகூரில் பம்பாய் "கிரானிக்கிள்" ஆசிரியர் ஜனாப் சையத் அப்துல்லா பிரல்வி அவர்கள் அக்ராசனத்தில் நடைபெற்றது. இவர் பத்திரிகாசிரியர்களின் கஷ்டங்களை உள்ளபடி நன்கு எடுத்துக் காட்டி யிருக்கிறார். இவ்வாசிரியர்கள் மூளைக்கும் சரீரத்திற்கும் அதிகக் கஷ்டத்தைக் கொடுத்து வேலை செய்துங்கூட நல்ல ஊதியமும் நல்ல உற்சாகமும் கிடைப்பது துர்லபமா யிருக்கிறது. இந்நாட்டில் பத்திரிகாசிரியர்களுக்கு தக்க ஆதரவும் அந்தஸ்தும் கிடையாது. அத்துடன் அரசாங்கமோ ஆசிரியர்களின் சுதந்திரத்தை, மூற்

போக்கை, உரிமைகளை நசுக்கிக்கொண் டிருக்கிறது. மேல்நாடுகளில் பத்திரிகைக்கு அதிகச் செல்வாக்குண்டு. அதிக ஆதரிப்புமுண்டு. அங்குப் பத்திராதிபர்களுக்கு நல்ல முறையான சங்கம் இருக்கிறது என்று எடுத்துக் காட்டுகிறார்.

நாட்டின் நலத்திற்காக இன்னும் எத்தனையோ பத்திரிகைகள் தோன்ற வேண்டியதிருக்க, ஆதரிப் பின்மையால் இருக்கிற பத்திரிகைகளும்கூட மறைந்துகொண் டிருக்கின்றன. இங்குக் கணக்கற்ற பத்திரிகைகள் உண்டாகாதவரையில் இந்தியாவின் முன்னேற்றமென்பது வீண் கனவேயாகும். பத்திரிகாசிரியர்களின் உள்ளத்தில் தோன்றும் எண்ணத்தின் பிரவாகங்களையும் போராவேசத்தையும் உயர் உயர் கருத்துக்களையும் உண்மை விஷயங்களையும் ஊடுருவிப் பார்க்கும் கூர்ந்த அறிவையும் மாறாத நடு நிலையையும் வருங்கால நிகழ்ச்சிகளை அறிவிக்கும் ஆற்றலையும் நாட்டார் போதியபடி ஆதரிக்காது இருக்கிறார்கள். நாட்டின் அபிவிருத்திக்குப் பத்திரிகைகளே புதியதொரு சாதனம் என்பதை அறிந்த தேசங்களே முன்னேறிச் சென்றுகொண் டிருக்கின்றன. பத்திரிகைகளின் ஆற்றலை அறியாதிருக்கும்வரை நம் நாடு ஒருக்காலும் அபிவிருத்தி அடையப் போவதில்லை என்பதே எமது தாழ்மையான அபிப்பிராயம்.

## அகில இந்திய ஆஸ்திக மகாநாடு

இந்த மகாநாடும் லாகூரில்தான் கல்கத்தா "மாடேன் ரெவியூ" பத்திராதிபர் ஸ்ரீமான் ராமானந்த சாட்டர் ஜீ அவர்களது தலைமையின் கீழ் நடந்தேறியது. அவர், கடவுள் தன்மைகளையும் தெய்வீகக் குணங்களையும் எடுத்துக்கூறினார். சாதாரண அறிவு படைத்தவரும் உயர்ந்த அறிஞரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயங்களைக் கூறி விவரித்திருக்கிறார். அவர் கூறினபடியே நமது நாட்டில் மறம் மடிந்து அறம் பெருக அருளுமாறு ஏக நாயகனை யேக மனதோடு பிரார்த்திக்கிறோம்.

## அகில இந்தியா ஜட்பட் தோரக் மகாநாடு

ஹிந்துக்களெல்லாம் ஒரே ஜாதியாயிருக்கவேண்டுமென்ற நோக்கங் கொண்டு அகில இந்தியா ஜட்பட் தோரக் மண்டலம் என்ற பெயருடன் ஒரு சங்கம் வடநாட்டில் உண்டாகி வேலை செய்துகொண் டிருக்கிறது. லாகூரில் அதன் மகாநாடு கல்கத்தா ஸ்ரீமான் ராமானந்த சாட்டர் ஜீ அவர்களின் அக்ராசனாதிபத்தியத்தின் கீழ் நடைபெற்றது. இந்தியாவின் வீழ்ச்சிக்கு ஜாதிப் பிரிவே காரணம் என்று பற்பல உதாரணங்களைக்



# ஆராய்ச்சி மேடை

## "விமோசனம்"

"விமோசனம்" என்ற பத்திரிகையின் 5 பகுதிகளையும் வரப்பெற்று வாசித்து மகிழ்ந்தோம். தேசத் தொண்டில் மிகவும் ஈடுபட்டு உழைப்பதால் "தென்னாட்டுக் காந்தி" என்று சிறப்புப் பட்டப் பெயர் பெற்ற ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரி அவர்களால் இது பதிப்பிக்கப் பெற்று இந்திய மதுவிலக்குத் தேசிய ஸ்தாபனத்தின் மூலம் வெளியிடப்படுகிறது. மதுபானத் தீமைகளை விளக்கும் பொருட்டான கதைகளும் அதை அடியோடு விலக்கும்படியான சம்பவங்களும், சம்பாஷணைகளும், பற்பல படங்களும் ஒவ்வொரு பகுதியிலும் காணப்படுகின்றன. மதுவின் கேடுகளைப் பற்றி உலகத்திலுள்ள பல்வேறு அறிஞர்களும் நிபுணர்களும் கூறியிருக்கும் வாக்கியப் பொறுக்குகளும் அநேக நாடுகளின் மதுபான வருமானக் கணக்குகளும் இப் பத்திரிகையை உயர்தரமாக்குகின்றன. இதில் ஒவ்வொரு மாதமும் "கடற்கரைக் கிளிஞ்சில்" என்ற தலைப்பில் வெளிவரும் விஷயங்கள் மனதைக் கவரத்தக்கவைகள். தேசத்திற்கு நன்மை உண்டாக்கக் கூடிய இம் மாசிகையை நாம் அன்புடன் வரவேற்கிறோம்.

எவருக்கும் விளங்கும்படியான இலகுவான நடையில் வியாசங்களும் கதைகளும் எழுதப்பட் டிருப்பதால் சாதாரண ஜனங்களுக்கும் இது மிக உபயோகம் என்று இங்குக் குறிப்பிடவேண்டி யிருக்கிறது. முற்று.

---

காட்டிச் சொல்கிறார். அயல் நாட்டார் இங்கு வந்து ஆதிக்கம் அடைந்தது நமது சமூகப் பிளவே காரணம் என்றும் குறிப்பிடுகிறார். இந்தியா ஒவ்வொரு தொழிலிலும் முன்னேற்றம் அடையாததற்குக் காரணம் ஜாதிப் பிரிவே யென்றும் பிறப்பால் ஜாதி இல்லை என்றும் வாதிக்கிறார். நம் வம்ச திலகர்களான மகரிஷிகளின் சரித்திரங்களை எடுத்துக்காட்டி எவ்வளவோ சொல்லியிருக்கிறார். ஆதியிலிருந்து அந்தம் வரைக்கும் அவர் அரிய பிரசங்கத்திற் கூறிய அனைத்தும், ஒப்புக்கொள்ள வேண்டியவையே.

என்ற எழுத்தில் அச்சிடப்பெற்றிருக்கிறது. மதுவிலக்குத் தொண்டர், காங்கிரஸ் தொண்டர், பொதுஜன ஊழியர், கிராமத் தலைவர், தொழிலாளர், மாணவர் ஆகிய இவர்கள் ஒவ்வொருவர் கைகளிலும் இம் மாசிகை இருக்கவேண்டுமென விரும்புகிறோம்.

இந்தியாவின் விமோசனத்திற்கு இந்த "விமோசனம்" பெரிதும் உழைக்குமென்று எதிர்பார்க்கிறோம். எல்லோருமே வாங்கி வாசித்துப் பயனுறும்படியாக அவ்வளவு சொற்பச் சந்தா ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

பத்திராதிபரும் பத்திரிகையும் பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

வருட சந்தா ரூ 1—0—0.

"சுவாமி"

கிடைக்குமிடம்:

காரியதரிசி, "விமோசனம்,"

காந்தி ஆச்சிரமம், திருச்செங்கோடு.

---

## "இந்தியா மித்திரன்"

ஸ்ரீமான் B. வேணுகோபால் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஸ்ரீமான் G. இராதாகிருஷ்ணன் அவர்களால் வெளியிடப்படும் "இந்தியா மித்திரன்" என்ற வாரப் பத்திரிகையின் எல்லா இதழ்களையும் முதலிலிருந்து இதுவரையும் முறையே படித்துப் பயனடைந்திருக்கிறோம். இதில் நல்ல நல்ல கட்டுரைகள் காணப்படுகின்றன. இப் பத்திரிகை அநேக விஷயங்களில் நடு நிலைமை வகிப்பது போற்றத்தக்கது. அதன் பெயருக்கேற்ப மலேயா நாடுகளில் வதியும் இந்திய மக்களின் நன்மைக்காகப் பெரிதும் பாடுபட்டுக்கொண் டிருக்கிறது. நல்ல காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப்படுகிறது. அயல் நாடுகளில் வாழும் தமிழ்ச் சகோதரர்களும் மலேயா நாட்டு விஷயங்களை அறிய ஆவல்கொண்ட தமிழ்ச் சகோதரர்களும் இந்தப் பத்திரிகையை ஆதரிக்க வேண்டுகிறோம். அயல் நாட்டில், தாய் நாட்டிற்காகவும் தாய் மொழிக்காகவும் உழைக்கும் இப் பத்திரிகையும் பத்திரிகாசிரியரும் பதிப்பாளரும் பன்னெடுங்காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

"சுவாமி"

வருட சந்தா 3 டாலர்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு 4—,,

விலாசம்:—

மானேஜர், "இந்தியாமித்திரன்" ஆபீஸ்

87 பெல்பீல்டு வீதி, ஈப்போ (F. M. S.)

---

# உங்கள் விலாசம்

உயர்ந்த கடிதத்தில் "பாரதி"யின்
அளவில் 100 பிரதிகள் அடங்கிய
பேட் 1-க்கு ரிஜிஸ்டர் தபாற்
செலவுட்பட ரூ 1—8—0 தான்;
பேட் 2-க்கானல் ரூ 2—8—0.
உங்கள் ஆர்டரில் விலாசத்தைத்
தெளிவாக எழுதி,
தமிழா ஆங்கிலமா வென்பதையும்
எவ்விதக்
கலர் பேப்பரிலென்பதையும்
பணத்துடன் குறித்தனுப்புக.
மற்றத் தேவைகளுக்கும் கீழ்க்கண்ட
விலாசத்திற் கெழுதுக.

மானேஜர்,

ஆனந்தா பிரஸ்,

உத்தமபாளையம், S. I.

# "கலா நிலயம்"

## இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவியென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.


**சந்தா விபரம்.**

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 7-8-0. வெளிநாட்டிற்கு ரூ. 9-0-0
தனிப்பிரதி அணா 3. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

---

**விலை சரசம்!** **ரங்கூன் புது வயிரம்.** **சரக்கு நயம்!!**



நிறம் ஜொலிப்பு கெட்டி உழைப்பு பார்வை மேன்மை எல்லாவற்றிலும் சிறந்தது. அரத்திற்குத் தேயாதது உண்மை வயிரத்திற்கு ஒப்பானது பெருத்த விற்பனையாவது. காரட் 1-க்கு 4ரூ. முதல் 6ரூ. வரையுள்ள தினுசுகளிருக்கிறது. மற்றும் இமிடேஷன் புஷ்பராகங்களும் ஏராளமாய்க் கிடைக்கும்.

விலாசம்:— அ. பொன்னுச்சாமி செட்டியார், சராப்புக்கடை,
பெரியகடை வீதி, திருச்சி.

---

# NEW BOOKS OF RESEARCH.

## By. Prof. PURNALINGAM PILLAI, B. A., L. T.

**ENGLISH** — A FEW COPIES ON HAND.

**Ravana the Great**
Sewed As. 12. Cloth R. 1.
**Critical Studies in Kural.**
Sewed R. 1-4. cloth R. 1-8
**Studies and Critiques in Modern English Literature** Re. 1.
**Stories from Goldsmith.**
Sewed As. 12 Limp Re. 1.

**Collectanea:**
Prose and Verse. As. 12.
(In print)

**TAMIL**

**Tappili, or The Faultless.**
(Essays) As. 10
**Marutthuvan Makal** or **The Doctor's Daughter.**
(Novelette) As. 6.
**Katturai Kalanjiam.** (55 topics) As. 12.

Terms—11 copies for 10 purchased at a time.
Liberal discount for large orders. No books on commission sale.

Apply to:— THE MANAGER, The BIBLIOTHECA,
Munnirpallam, Tinnevelly Dt., South India.

# T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913 ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம்

900 000 பங்குகளின் பேரில்

2,700,000 ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும், லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்து லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக் கனுப்பி வைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி முதலிய துறை முகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், டில்லி, லாகூர், அம்ரிட்ஸார், அலகாபாத், கான்பூர், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜெண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்கப் புகழையு மடையும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,**
மானேஜிங் டைரெக்டர்,
**T. C. P. A.** ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்.)
கோம்பை, மதுரை ஜில்லா.